28°c
கூடிய வெப்பநிலை 32°c
குறைந்த வெப்பநிலை 26°c
மேக மூட்டம், மழையுடன் கூடிய காலநிலை

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/= | சுடர்: 29 | கதிர்: 161 | வள்ளுவர் ஆண்டு: 2045 | சித்திரை 23, செவ்வாய் 06.05.2014

06 MAY 2014



# முள்ளியவளையில் வெடித்தது குண்டா? பயங்கரவாதப் பிரிவு தீவிர விசாரணை

### கடை எரிந்து நாசம்; அருகிலிருந்த வீடு சேதம்; ஒருவர் காயம்

முல்லைத்தீவு, ஏப் 6

முள்ளியவளையில் நேற்று அதிகாலை கணினி, மற்றும் மின்னியல்சாதன விற்பனை நிலையத்தில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்திற்கு வெடிகுண்டுகள் அல்லது வெடிகுண்டுகள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மருந்துகள் காரணமா என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் துருவித் துருவி விசாரணை நடத்தி வருகின்றனர். மேலதிக விசாரணைகளை நடத்துவதற்காக கொழும்பில் இருந்தும் தனிக் குழு ஒன்று இன்று முல்லைத் தீவிற்கு வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ளது முள்ளியவளை. அங்குள்ள கடையில் அதிகாலை 1.30 மணியளவில் பெரும் வெடிப்பு ஏற்பட்டது.




வெடிப்பு இடம்பெற்ற கணினி நிலையம்



காயமடைந்தவரிடம் விசாரணை

21ஆம் பக்கம் பார்க்க

## விபூசிகா - தாயார் பூஸாவில் சந்திப்பு

கிளிநொச்சி, மே 06

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயக்குமாரியை அவரது மகள் விபூசிகா நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார்.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.ஐ. மஹறாப் தீன், சிறுமி விபூசிகா தனது தாயாரை சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு அனுமதியளித்ததோடு அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் கடந்த புதன்கிழமை பணித்திருந்தார். இந்தப் பணிப்புக்க

21ஆம் பக்கம் பார்க்க

# மீண்டும் அகதிகளாக தமிழகத்துக்கு ஓட்டம்

### படைகளின் வகை தொகையற்ற கைதுகள், அச்சுறுத்தலால் முல்லைத்தீவைச் சேர்ந்த 10 பேர் தனுஷ்கோடியில் தஞ்சம்

சென்னை, மே 06

போர் முடிவடைந்து 5 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்லும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தின் கீழான தொடர்ச்சியான கைதுகள், படைகளின் அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள் காரணமாக இலங்கைத் தமிழர்கள் பலர் அங்கிருந்து அகதிகளாகத் தமிழகத்துக்குப் படையெடுத்து வருகின்றனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



தனுஷ்கோடி சென்றடைந்த தயாபரன் குடும்பம்

இவ்வாறு தமிழர்கள் தொடர்ந்தும் அகதிகளாக இந்தியாவுக்குத் தப்பிச் செல்கின்றமையானது, தமிழக அகதி முகாம்களில் ஏற்கனவே உள்ள இலங்கை அகதிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில்பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

21ஆம் பக்கம் பார்க்க

## கதிரிப்பாய் முக்கொலை ; கைதானவருக்கு மறியல்



நீதிமன்றம் கொண்டு செல்லப்படும் கொலைச் சந்தேகநபர்

யாழ்ப்பாணம், மே 06

அச்சுவேலி, கதிரிப்பாயில் உறவினர்களான மூன்று பேரைப் படுமோசமாக வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தனஞ்செயனை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று நேற்று

21ஆம் பக்கம் பார்க்க

## அவர்களின் வாளை பறித்தே வெட்டினேன்

### கைதான தனஞ்செயன் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், மே 6

மாமியார் வீட்டுக்குத் தான் வாள் கொண்டு செல்லவில்லையென்றும், அவர்கள் தன்னைத் தாக்கவரும்போது அவர்களின் வாளைப் பறித்தே தான் வெட்டியதாகவும் முக்கொலைகளைச் செய்தவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பொ.தனஞ்செயன் சட்டவைத்திய அதிகாரியிடம் வழங்கிய வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி கதிரிப்பாயில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற வாள்வெட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

21ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர் தமிழர் மீதான தடையை இந்தியாவும் ஏற்பு

கொழும்பு, மே. 06

இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடைப் பட்டியலை ஏற்று அதனை இந்தியா நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருப்பதாக 'பிறஸ் ஒவ் ரஸ்ட் இந்தியா' ஊடகம் செய்தி

21ஆம் பக்கம் பார்க்க

### கருணாநிதி கண்டனம்

சென்னை, மே 6

16 தமிழ் அமைப்புகள் மற்றும் அவற்றின் ஆதரவாளர்கள் 424 பேர் மீது தடை விதிக்கவேண்டுமென்று இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளை இந்தியா ஏற்றுக்கொண்டமைக்காக தி.மு.க தலைவர் கருணாநிதி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

21ஆம் பக்கம் பார்க்க

## மழை தொடரும்

யாழ்ப்பாணம், மே 6

மழையுடன் கூடிய காலநிலை தொடர்ந்தும் நீடிப்பதுடன், கடலோரப் பகுதிகளில் 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் எனவும் யாழ்.மாவட்ட வளிமண்டலவியல்திணைக்களக் கடமை நேர அதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த 5 நாள்களில்

23ஆம் பக்கம் பார்க்க

## கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தை நேற்றுக் காலை முற்றுகையிட்ட மக்கள்

### மணல் ஏற்ற அனுமதிப் பத்திரம் கோரி



முற்றுகையில் ஈடுபட்டுள்ள மக்கள்

முல்லைத்தீவு, மே 06

தமது வீடுகளைக் கட்டுவதற்கு தேவையான மணலை ஏற்றுவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கக்கோரி நேற்றுக் காலை 9 மணியளவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் திட்டமிடல் கிளையைச் சுமார்

21ஆம் பக்கம் பார்க்க

## கூடுகளை பயன்படுத்தும் மீன்பிடியைத் தடை செய்க

### யாழ். மீனவர் சங்கங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே. 06

யாழ்.குடாநாட்டில் கூடு பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடை செய்யுமாறு மீனவர் சங்கங்களினால், யாழ். மாவட்டக் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மீன் வளத்தின் அழிவைத் தடுக்

23ஆம் பக்கம் பார்க்க

## இடமாற்றம் வழங்குமாறு ஆசிரியர்கள் கவனவீர்ப்பு

### ஜூனில் வழங்குவதாக செயலர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், மே 6

வன்னி மற்றும் தீவக வலயங்களில் பணிபுரியும் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள், தம்மை இடமாற்றம் செய்யுமாறு கோரியும், இடமாற்றம் செய்வதாகக் கடந்த ஜனவரியில் உறுதியளிக்கப்பட்டபோதும் அதனை இன்று வரை நிறைவேற்றாதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்

23ஆம் பக்கம் பார்க்க

# பாலியல் வன்முறை தடுப்பு மாநாட்டிலும் இலங்கை அரசுக்குப் பெரும் தலையிடி

கொழும்பு,மே 06
மோதல்களின் போது பாலியல் வன்முறைகளைத் தடுப்பது தொடர்பாக, அடுத்த மாதம் பிரிட்டனில் நடக்கவுள்ள அனைத்துலக மாநாடு, இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்தப்படக் கூடும் என்று இலங்கை அரச அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.
அண்மையில் ஐ.நா. வெளியிட்ட அறிக்கை ஒன்றில், போருக்குப் பிந்திய சூழலில் இலங்கையில் பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறைகள் இடம்பெறுவதாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.
மோதல் சூழலில் பாலியல் வன்முறைகள் தொடர்பான ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூனின் சிறப்புப் பிரதிநிதி, சாய்னாப் பங்குரா, இலங்கை நிலைமைகள் தொடர்பாகக் கவலை வெளியிட்டிருந்ததுடன், மோதல் சூழலில் பாலியல்வன் முறைகள் இடம்பெற்ற, இடம்பெறும் கவலைக்குரிய 21 நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் இணைத்திருந்தார்.
இந்தநிலையில், லண்டன் எக்செல் நிலையத்தில் அடுத்த மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை பாலியல் வன்முறைகளைத் தடுப்பது தொடர்பான அனைத்துலக மாநாட்டுக்கு ஐ.நாவின் அனுசரணையுடன் பிரிட்டன் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.
பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் மற்றும் அகதிகளுக்கான ஐ.நா முகவரமைப்பின் சிறப்புத் தூதுவர் ஏஞ்சலினா ஜொலி ஆகியோர் இந்த மாநாட்டுக்கு இணைத் தலைமை தாங்கவுள்ளனர்.
கடந்த நவம்பர் மாதம் பொது நலவாய மாநாட்டில் பங்கேற்க இலங்கை வந்திருந்தபோதே, பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக், பாலியல் வன்முறைகளைத் தடுப்பது தொடர்பாக பேச்சுக்களை நடத்தியிருந்தார்.
இந்த நிலையில், அடுத்த மாதம் லண்டனில் நடக்கவுள்ள மாநாடு இலங்கைக்கு எதிரான களமாகவும் பயன்படுத்தப்படக் கூடும் என்று இலங்கை அதிகாரிகள் கலக்கமடைந்துள்ளனர்.
தமக்கு எதிரான பரப்புரைகளை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இலங்கையின் மூத்த அரச அதிகாரி ஒருவர், போரின் போதோ, போருக்குப் பின்னரோ, ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெறவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.
இந்த விவகாரம் குறித்து இலங்கை அரசு கொழும்பிலுள்ள ஐ.நா பணியகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## வாள் வெட்டுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 11 பேர் கைது

தென்மராட்சி, மே.06
கொடிகாமம் பகுதியில் இளைஞர் ஒருவரை வாளால் வெட்டிக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் 11 பேரைக் கைதுசெய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.
கடந்த வெள்ளிக்கிழமை இரவு வாள் வெட்டுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கொடிகாமம் கச்சாய் வீதி நாகநாதன் ஒழுங்கையைச் சேர்ந்த உதயகுமார் குமரன் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 11 பேரையும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-9)

## ரணில் போட்டியிடார்

கொழும்பு.மே 06
அடுத்த வருடம் நடைபெறும் என்று கூறப்படுகின்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.
அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் மைக்கல் பெரேரா ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடுவார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் அதில் உண்மை இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி பொது வேட்பாளர் ஒருவரையே நிறுத்தும் என்று அவர் குறிப்பிட்டார். (த)

# ஈழத் தமிழருக்குக் காத்திரமான தீர்வொன்றை இன்னும் பெற்றுக்கொடுக்கவில்லை இந்தியா

## துணைத் தூதுவரின் பிரியாவிடையில் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் காட்டம்

யாழ்ப்பாணம், மே 06
ஆயுதக் குழுக்களை வளர்த்துவிட்டுப் பிராந்தியத்தில் அழிவை ஏற்படுத்திய இந்தியா, போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் கூட ஈழத் தமிழருக்கு காத்திரமான தீர்வைப்பெற்றுக் கொடுக்க முன்வரவில்லை என பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கத்துக்கு பிரியாவிடை வழங்கும் நிகழ்வு யாழ். ரில்ஹோ விருந்தினர் விடுதியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.
இதில் கலந்துகொண்டு உரையாற்றிய பேராசிரியர் சிற்றம்பலம் மேலும் தெரிவித்ததாவது:-
ஈழத்தமிழருக்கு இந்தியா மீதுள்ள அதிருப்தியைத் துணைத்தூதுவர் மகாலிங்கம் மத்திய அரசிடம் எடுத்துக்கூற வேண்டும். எமது பிராந்தியத்தில் ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவு வழங்கி அந்தக் குழுக்களை மோதவிட்டு எமது இனத்தை அழிக்கும் நடவடிக்கைக்கு இந்தியா துணை போயிருந்தது. ஒரு குழுவுக்கு ஆதரவு வழங்கியிருந்தால் பரவாயில்லை. ஆனால் இந்தியா எல்லா ஆயுதக் குழுக்களுக்கும் ஆதரவு வழங்கியிருந்தது. இதனால் குழு மோதல்கள் இடம்பெற்றன. இதன் பின்னணியில் இந்தியா இருந்தது.
குழுக்களை மோத[illegible] பிராந்தியத்தில் அழிவை ஏற்படுத்திய இந்தியா, [illegible]ழரின் ஆயுதப் போராட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. தமிழ்மக்கள் படும் துன்பங்கள், நிர்க்கதி நிலைக்கு இந்தியா தான் காரணம்.
இந்திய அணுகு முறையினால் ஏற்பட்ட அழிவுகளால் தான் தமிழர்களுக்கு இந்நிலை ஏற்பட்டது. எனவே இந்திய மத்திய அரசிடம் தமிழரின் ஆதங்கத்தை எடுத்துக் கூறுங்கள். ஈழத்திலுள்ள தமிழர்கள் இந்திய நாட்டைப் பற்றி என்ன நினைக்கின்றனர் என்பதை மத்திய அரசிடம் கூறவேண்டும்.
இறுதிப் போரில் தமிழ்மக்களை இந்தியா நினைத்திருந்தால் காப்பாற்றியிருக்க முடியும். [illegible]ராட்டத்தையும் நிறுத்தியிருக்க முடியும். இறுதிப்போரில் தமிழ் மக்கள் இழக்க முடியாதவற்றை எல்லாம் இழந்து விட்டனர். அவ்வாறு மக்கள் அனைத்தையும் இழந்த பிற்பாடும் கூடக் காத்திரமான நடவடிக்கையை இந்தியா இதுவரை எடுக்கவில்லை. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்பும் இந்தியா பின்வாங்குவது தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. இந்தியாவை நாம் நம்புகின்றோம். ஆனால் இந்தியா தமிழர்களை ஏமாற்றி விட்டது. ஈழத்தமிழரின் பிரச்சினை ஜெனிவா வரை சென்றுள்ள நிலையில் இந்தியா நடந்துகொள்ளும் விதம் தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது - என்றார். (த-103)

## தொடர் மழையால் டெங்கு அபாயம்

கொழும்பு, மே, 06
நாட்டில் பரவலாகப் பெய்து வரும் மழை காரணமாக மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் இருப்பதாகச் சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
தற்போதுள்ள மழையுடன் கூடிய காலநிலை நிலவுகின்றமையினால் மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய அபாயம் உள்ளது. இது டெங்கு நோய் பரவுவதற்கு வழிவகுக்கும். எனவே, மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.
மேலும், நாட்டிலுள்ள பிரதேச சுகாதாரப் பணிமனைகளிடையே டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-10)

# யாழ்.நூலகம் எரியூட்டப்பட்டமை இன்னமும் எம் மனதில் எரிகிறது

## அடிக்கல் நடும் நிகழ்வில் மாவை சேனாதிராசா



அடிக்கல் நடும் நிகழ்வின் போது.

கிளிநொச்சி, மே 06
தமிழர் வரலாற்றில் யாழ். பொது நூலகம் பயன்தந்த காலங்களை விட அது எரிக்கப்பட்ட காலமே எங்கள் மனதில் நீங்காத தீயாக எரிந்து கொண்டிருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள வட்டக்கச்சி பொது நூலகத்தின் நிரந்தரக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நண்பகல் 12 மணிக்கு வட்டக்கச்சியில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
ஒரு இனத்தின் அடையாளங்களை பிரதிபலிப்பதில் நூலகங்களும் முக்கியமானவை. அது மட்டுமல்லாது அவை அறிவுப் பொக்கிஷங்களாகவும் [illegible]கின்றன. இதன் ஓர் [illegible]ாமாக யாழ்.நூலகம் விளங்குகின்றது.
யாழ்.நூலகம் பயன்தந்த காலத்தைவிட அது எரிக்கப்பட்ட காலமே எங்கள் மனதில் நீங்காத தீயாக எரிந்துகொண்டிருக்கிறது. அடிமைத்தனத்துக்கு எதிராக எவர் போராடி வாழ்ந்திருக்கின்றாரோ அவர் தான் உலகத்தில் நாகரிகமுள்ளவராக இருந்திருக்கின்றார்.
ஒரு இடத்தின் அறிவுப் பொக்கிஷமாகவும், அறிவாலயமாகவும் நூலகங்கள் திகழ்கின்றன. அதுபோல இன்று கட்டப்படுகின்ற இந்த வட்டக்கச்சி நூலகமும் இந்த பிரதேசத்தின் அறிவுப் பொக்கிஷமாக வளர வேண்டும். இந்த அறிவுப் பெட்டகங்களில் இருந்து தான் எமது உணர்வும் எழுச்சியும் வெளிவந்தன - என்றார்.
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் வட்டக்கச்சி உப அலுவலகத்தின் கீழ் உள்ள வட்டக்கச்சி பொது நூலகத்தின் புதிய கட்டடம் 2014ஆம் ஆண்டின் சபை நிதியில் இருந்து 4.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. (ஐ-55)

## வாகனம் மோதியதில் இளைஞன் படுகாயம்

தென்மராட்சி மே. 06
பஸ்ஸுக்காகக் காத்திருந்த இளைஞன் வேகமாக வந்த வாகனம் மோதியதில் கால் எலும்புகள் சிதைந்தன. அவருக்கு முழங்காலுக்கு கீழ் கால் அகற்றும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை கைதடி தொழிற் பயிற்சி அதிகார சபையின் முன்பாக இடம்பெற்றது.
நயினாதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த மகேந்திரராஜா சத்தியசீலன் (வயது 20) என்னும் தொழில்பயிற்சி நிலைய மாணவனே காயமடைந்தவராவார்.
படுகாயமடைந்தவர் யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.
இதேவேளை - மீசாலை புத்தூர் சந்திக்கு அப்பால் ஏ-9 வீதியில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் தூக்கி வீசப்பட்ட இளைஞருக்குக் காலில் பாதிப்பு ஏற்பட்டது.
அல்லாரை வடக்கைச் சேர்ந்த சிவபுண்ணியமூர்த்தி சுகிந்தன் (வயது-24) என்பவர் காலில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)

# கச்சதீவு மீட்பு வழக்கு 2 வாரம் ஒத்திவைப்பு

சென்னை, மே 06
கச்சதீவை மீட்கக் கோரி தி.மு.க. தலைவர் கருணாநிதி தொடர்ந்த வழக்கு இரு வார காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
மத்திய, மாநில அரசுகளின் மனுவுக்குப் பதில் வழங்கக் கருணாநிதி தரப்பில் அவகாசம் கோரப்பட்டதையடுத்து உயர் நீதிமன்றம் விசாரணையை ஒத்திவைத்தது.
கச்சதீவை இலங்கைக்கு வழங்கும் வகையில் 1974 ஆம் ஆண்டு இந்தியா - இலங்கை இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழகத்தில் பல ஆண்டுகளாக எழுப்பப்பட்டு வருகிறது.
கச்சதீவை மீட்கக் கோரி தி.மு.க. தலைவர் கருணாநிதி, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இருந்தார். கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்து செய்து அப்பகுதியை இலங்கையிடமிருந்து மீட்க அவர் கோரியிருந்தார். நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

> “மத்திய, மாநில அரசுகளின் மனுவுக்குப் பதில் வழங்கக் கருணாநிதி தரப்பில் அவகாசம் கோரப்பட்டதையடுத்து உயர் நீதிமன்றம் விசாரணையை ஒத்திவைத்தது.

அப்போது மத்திய, மாநில அரசுகளின் மனுக்களுக்கு விளக்கம் அளிக்க மனுதாரர் தரப்பில் அவகாசம் கேட்கப்பட்டது. இதையடுத்து இந்த வழக்கு விசாரணையை 2 வார காலம் உயர்நீதிமன்றம் தள்ளி வைத்தது. கோடை விடுமுறைக்குப் பிறகு மீண்டும் விசாரணை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-10)

## கடையில் பொருள்களைத் திருடிய சிப்பந்திகள் மாட்டினர்

பளை, மே 6

தாம் பணிபுரியும் கடைக்கு அருகிலுள்ள கடையில் மாற்றுச் சாவியைப் பயன்படுத்தி பொருள்களைத் திருடிவந்த கடைச் சிப்பந்திகள் இருவர் பளைப் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

கடந்த முதலாம் திகதி இரவு பளை ரயில் நிலைய வீதியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் அதனுடன் இணைந்த உபகரணங்கள் திருட்டுப் போயுள்ளதாக கடை உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இந்தக் கடைக்கு அருகில் அமைந்துள்ள கடையொன்றில் பணிபுரியும் நெடுங்கேணி கற்குளத்தைச் சேர்ந்த ஒருவரும் புலோப்பளை கிழக்கைச் சேர்ந்த அவரது நண்பரும் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

> தினமும் இரவு 9 மணிக்குப் பின்னர் தொலைபேசி விற்பனை நிலையத்தை மூடிவிட்டுச் சென்ற பின்னர் மாற்றுச் சாவியைப் பயன்படுத்தி இவர்கள் பொருள்களைக் களவாடி வந்ததனர்.

தினமும் இரவு 9 மணிக்குப் பின்னர் தொலைபேசி விற்பனை நிலையத்தை மூடிவிட்டுச் சென்ற பின்னர் மாற்றுச் சாவியைப் பயன்படுத்தி இவர்கள் பொருள்களைக் களவாடி வந்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த இருவரையும் பளைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட பதில் நீதிவான் சி.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் முற்படுத்தியபோது இருவரையும் எதிர்வரும் 7ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் (வ-9)

## தேசிய போசாக்கு மாதத்துக்கான செயற்பாடுகள் ஜூனில் ஆரம்பம்

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 6

சுகாதார அமைச்சு எதிர்வரும் ஜூன் மாதத்தை தேசிய போசாக்கு மாதமாகப் பிரகடனப்படுத்தி அந்த மாதத்தில் போசாக்குத் தொடர்பான செயற்றிட்டங்களை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளது.

"இரும்புச்சத்து நிறைந்த உணவுகளை உண்போம், நலம், பலம், புத்திக்கூர்மையைப் பெறுவோம்" என்னும் தொனிப்பொருளுடன் சமூகத்தின் மத்தியில் விழிப்பூட்டல் மற்றும் பழக்கவழக்க மாற்றம் என்பவற்றினூடாக போசாக்கை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மனித வாழ்க்கையின் ஒவ்வொரு பருவத்திலும், இரும்புச்சத்து குறைபாட்டால் அனீமியா தாக்கம் ஏற்படுவதால் இவ்விடத்தில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளதால் மேற்கூறப்பட்ட தொனிப்பொருள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தேசிய போசாக்கு மாதத்தின் பிரதான குறிக்கோள்களாக சமூகத்தில் சகல வயதுப் பிரிவினரிடையேயும் இரும்புச்சத்துக் குறைபாட்டைக் குறைத்தல், இரும்புச் சத்து நிறைந்த உணவுகளின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் அவ்வுணவுகளை அதிகம் உட்கொள்ளும் வகையில் சமுதாயத்தினரை ஊக்கப்படுத்தல்.

பாதிக்கப்பட்ட பிரஜைகளுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் தேசிய ரீதியிலான போசாக்கு நிகழ்ச்சிகளின் மூலம் போசாக்கு தொடர்பான அறிவு நடத்தை மற்றும் கடைப்பிடித்தல் போன்றவற்றை மேம்படுத்தல்.

இரும்புச்சத்து குறைபாட்டைக் குறைப்பதற்கு சுகாதாரத் துறைசாரா ஆளணிகளின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை அடையாளம் காணல் மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு பரிந்துரைகளை வழங்கல் என்பவை அமைகின்றன.

இந்தச் செயற்பாடுகளை மாவட்ட மாகாண மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடத்த வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

செயற்றிட்டத்தின் ஆரம்ப நாள் நிகழ்வு புத்தளம் மாவட்டத்தின் ஆனைமடுவ பகுதியில் ஆரம்பித்து வைக்கப்படும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் வை.டி. நிகால்ஜெயதிலக அறிவித்துள்ளார். (வ-9)

## இலங்கையிலிருந்து கடத்தப்பட்ட தங்க பிஸ்கட்டுடன் ஒருவர் கைது

இராமநாதபுரம்,மே 6

இலங்கையில் இருந்து கடல் வழியாகக் கடத்திச் செல்லப்பட்ட 3 கிலோ கிராம் தங்க பிஸ்கட்டுகளுடன் கீழக்கரையில் வைத்து ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்த படகு மூலம் தமிழகத்துக்குத் தங்க பிஸ்கட்டுகள் அதிகளவில் கடத்தப்பட்டு வருவதாக உளவுத் துறை தெரிவித்துள்ளது.

கடல் வழியாகச் சர்வ சாதரணமாகத் தங்க பிஸ்கட்டுகள் கடத்திச் செல்லப்படுகின்றன.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு மண்டபத்தில் 13 கிலோ தங்க பிஸ்கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்நிலையில் இலங்கையில் இருந்து கீழக்கரைக்குத் தங்க பிஸ்கட்டுகள் கடத்தி வரப்படுவதாகக் கியூ பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்து அங்கு சென்ற அவர்கள், கீழக்கரை கிழக்கு தெருவைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவரின் வீட்டில் சோதனையிட்டபோது அங்கு பல லட்சம் ரூபா பெறுமதியான தங்கம் மறைத்து வைத்திருந்ததைக் கண்டுபிடித்துத் தங்க கட்டிகளைப் பறிமுதல் செய்தனர்.விசாரணைக்குப் பின் தங்க பிஸ்கட்டையும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் கியூ பிரிவு பொலிசார் இராமநாதபுரம் சுங்கத்துறை அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை, இராமநாதபுரம் மாவட்டம் இலங்கைக்கு அருகே அமைந்துள்ளதால் இலங்கையில் இருந்து கடத்தல் பொருள்களை கடத்தி வருவதற்கு இந்தக் கடல் பகுதியை கடத்தல்காரர்கள் அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

இங்கு கடத்தல் மற்றும் அந்நியர்கள் ஊடுறுவலை தடுக்க இந்திய கடற்படை, இந்திய கடலோரக் காவல்படை ,சுங்கத் துறை, கடலோரப் பாதுகாப்பு குழுமம் மற்றும் பொலிஸார் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.(த-14)

## நேர்முகப் பரீட்சை

தென்மராட்சி, மே 6

சாவகச்சேரி நகரசபையில் வெற்றிடமாகக் காணப்படும் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன. வெற்றிடமாகக் காணப்படும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சைகள் ஆரம்பமாகியுள்ளன.

வெற்றிடமாகக் காணப்பட்ட சந்தை மேற்பார்வையாளர், சாரதிகள், நூலக பரிசாரகர்கள், காரியாலய காரிய சகாயகர்கள், வெளிக்கள தொழிலாளர்கள், சுகாதாரத் தொழிலாளர்கள் உட்பட பல்வேறு அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு நேர்முகப் பரீட்சைகள் நாளை புதன்கிழமைவரை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மான் இறைச்சி வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது

மன்னார், மே 6

மன்னார், மடு பிரதேச செயலாளர் பிரிவில் மான் இறைச்சி வைத்திருந்ததான குற்றச்சாட்டில் இரு சந்தேக நபர்கள் வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி மடு தேவாலயத்துக்கு யாத்திரையாக வந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை வனவள ஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலொன்றையடுத்து அன்று பிற்பகல் ஒரு மணியளவில் மினிபஸ் ரக வாகனம் ஒன்றை வனவள ஜீவராசிகள் அதிகாரிகள் சோதனையிட்டனர். குறிப்பிட்ட வாகனத்தில் 12 கிலோ கிராம் நிறையுடைய மான் இறைச்சி உரப்பைகளில் கட்டப்பட்ட நிலையில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் வனவள ஜீவராசிகள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மான் இறைச்சி வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் இறைச்சி வைத்திருந்த நபர் ஒருவரையும் வாகனச் சாரதியும் வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள் ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் மன்னார் மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகளை வனவனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின் றனர். (வ)

## ஆங்கில விவாதத் தொடரின் இறுதிப்போட்டி

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தினால் நடத்தப்பட்டு வந்த ஆங்கில விவாதச் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி நாளை மறுதினம்வியாழக்கிழமைபி.ப2.30 மணிக்கு தேசியற் கல்வியற் கல்லூரியில் இடம்பெற வுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும், சிறப்பு விருந்தினர்களாக ஜனாதிபதியின் ஆலோசகர் சுனிமல் பெர்னான்டோவும், இந்திய மும்மொழிக் கற்கை நெறிப் பேராசிரியர் பி.மணிற்றவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதி விவாதப் போட்டியின் முடிவில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாணத்திலுள்ள சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும், சகல அமைச்சு மற்றும்திணைக்களத் தலைவர்களும், ஆங்கில ஆசிரிய ஆலோசகர்கள், ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், விவாதச் சுற்றுத் தொடரில் கலந்து கொண்ட மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் 'கேட்டுக் கொண்டுள்ளது. (த-5)

## வயல் கிணற்றில் முதியவரின் சடலம்

வலி.வடக்கு, மே 6

சுன்னாகம் மேற்கு மூர்த்தியான்கூடல் ஒழுங்கையில் உள்ள வயல் காணியின் கிணற்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மதியம் மீட்கப்பட்டது.

துர்நாற்றம் வீசியதை அடுத்து வீதியால் சென்றவர்கள் வயல் கிணற்றை எட்டிப் பார்த்த வேளையில் சடலம் ஒன்று அழுகிய நிலையில் மிதப்பதைக் கண்டு கிராம அலுவலரிடம் முறையிட்டனர்.

அதைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்கள்.

மீட்கப்பட்ட சடலம் சுமார் 65 வயதுடைய முதியவர் ஒருவருடையது என்று கருதப்படுகிறது. உடலில் சாரம் அணிந்த நிலையில் சடலம் காணப்பட்டது. (ஒ-86)

## பாவனை முடிவு திகதி இல்லாத மென்பானங்கள் விற்பனையில்

### இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ். நகரப் பகுதியில் பாடசாலை மாணவர்களுக்கு உற்பத்தி, முடிவுத் திகதி எதுவுமின்றி மென்பானங்களை விற்பனை செய்து வந்த இரண்டு வியாபாரிகளுக்கு யாழ். நீதிமன்று தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

யாழ். நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இது குறித்த வழக்கு கடந்த வாரம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. பொது சுகாதாரப் பரிசோதகர்களால் குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட மென்பானங்களில் போதைப் பொருள்கள் கலந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

> உற்பத்தித் திகதிகளோ முடிவுத் திகதிகளோ இல்லாதிருப்பதோடு தேசிய மொழிகளோ அல்லது ஆங்கில மொழியோ குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இதை அடுத்து அந்தப் பானம் பகுப்பாய்வுக்காக யாழ். நீதிமன்றினால் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அது குறித்த அறிக்கை அண்மையில் நீதிமன்றுக்குக் கிடைக்கப் பெற்றதுடன்பானத்தில் போதைப் பொருள் கலக்கப்பட்டிருக்கவில்லை என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனினும் குறித்த பான வகைகளில் உற்பத்தித் திகதிகளோ முடிவுத் திகதிகளோ இல்லாதிருப்பதோடு தேசிய மொழிகளோ அல்லது ஆங்கில மொழியோ குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அது பற்றிய குற்றத்தை குறித்த இரண்டு வர்த்தகர்களும் ஒப்புக் கொண்டனர்.

சுண்டுக்குளி மற்றும் யாழ். பிரதான வீதியை அண்மித்துள்ள வியாபார நிலையங்களில் அந்தப் பானங்கள் பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. (வ-4)


## நூலகக் கல்வி மற்றும் தகவல் கண்காட்சி இன்று

தென்மராட்சி, மே 6

இலங்கை தேசிய நூலகத்தின் 24ஆவது வருட பூர்த்தியையொட்டி இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, நூலக கல்வி மற்றும் தகவல் கண்காட்சியை இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் கொழும்பு- 7 இல் உள்ள சபை வளாகத்தில் நடத்தவுள்ளது.

அறிவுச் சமூகம் ஒன்றை நோக்கிய தேசிய நூலக சேவை என்னும் தலைப்பில் பின்வரும் காட்சிக் கூடங்கள் அமைக்கப் படவுள்ளன.

நூல்வெளியீட்டாளர்களின் நூல் கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடங்கள், பல தரப்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் அடங்கிய காட்சிக் கூடங்கள், பல தரப்பட்ட ஊடக நிறுவனங்களின் காட்சிக் கூடங்கள், தேசிய நூலகத்தின் வளங்கள் மற்றும் சேவைகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய காட்சிக்கூடங்கள், புத்திஜீவிகள் மற்றும் நூலகர்களுக்கான கருத்தரங்குகள், பாடசாலை மாணவர்களுக்கான தேசிய நூலகத்தைப் பார்வையிடுவதற்கான கல்விச் சுற்றுலா, பழைய திரைப்படங்களின் கண்காட்சி ஆகியவை இடம்பெறவுள்ளதாகசபையின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ சுனில் அறிவித்துள்ளார். (வ-9)



கோப்புப்படம்

# இலங்கையில் உள்ளக அகதிகளின் புள்ளி விவரம் விரைவில் மீளாய்வு

**ஜனாதிபதி அகதிகள் எவருமே இல்லை என்று கூறுகிறார். மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் 23,568 பேர் நலன்புரி நிலையங்களிலுள்ளனர் எனவும் ஐ.நா. அகதிகள் பேரவை 93,447 பேர் அகதிகளாக உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.**

யாழ்ப்பாணம், மே 06

இலங்கையில் உள்ளக இடம்பெயர்ந்தோர் தொடர்பிலான மீள்குடியேற்ற அமைச்சின் புள்ளி விவரத்துக்கும், ஐ.நாவின் புள்ளி விவரத்துக்கும் இடையில் பெரும் வித்தியாசம் காணப்படுவதால், உள்ளக அகதிகளின் எண்ணிக்கையை மீள்பரிசீலனை செய்வதற்கு மீள்குடியேற்ற அமைச்சு முடிவு செய்துள்ளது. விரைவில் உள்ளக அகதிகள் தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் என்று மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜானக சுகதாஸ கொழும்பு ஆங்கில ஊடக மொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அகதிகள் என்று எவருமே இல்லை என்றும் நலன்புரி நிலையங்களே இல்லை என்றும் இலங்கை அரசுத் தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச சமூகத்துக்குத் திரும்பத் திரும்பத் தெரிவித்து வருகின்றார். ஆனால் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர், இலங்கையில் இன்னமும் அகதிகள் உள்ளனர் என்றும் நலன்புரி நிலையங்கள் உள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 32 நலன்புரி நிலையங்களும், திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தில் 3 நலன்புரி நிலையங்களும் இன்னமும் செயற்பட்டு வருகின்றன. இதில் 7 ஆயிரத்து 94 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 568 பேர் அகதிகளாக இன்னமும் உள்ளனர்.

ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பேரவையினால் திரட்டப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் இலங்கையில் இன்னமும் 93 ஆயிரத்து 447 பேர் அகதிகளாக உள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் கண்காணிப்பு அமைப்பின் தரவுகளின் பிரகாரம் 90 ஆயிரம் பேர் அகதிகளாக உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளரிடம் ஆங்கில ஊடகம் வினவியபோது,

நாம் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதில்லை. இதனால் அவர்களது புள்ளி விபரங்கள் தொடர்பில் எமக்குத் தெரியாது. ஆனாலும் ஐ.நாவின் புள்ளி விவரங்களுக்கும் எமக்கும் இடையில் பெருமளவு வித்தியாசம் ஏற்படுவதால், ஐ.நாவின் புள்ளி விவரங்களும் தவறானதாகவே இருக்க வேண்டும். அவர்களைப் புள்ளி விபரங்களை மாற்றியமைக்கும்படி கோரியிருந்தோம்.

இருப்பினும் அவர்கள் அதனை மாற்றாதமையால், ஐ.நா அதிகாரிகளும் எங்களது அதிகாரிகளும் இணைந்து கலந்துரையாடல் நடத்தினர். அதில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டமைக்கான காரணங்கள் தனித்தனியாக ஆராயப்பட்டன. இதன்போது மீள்குடியேற்ற அமைச்சின் புள்ளி விவரத்தில் சொல்லப்பட்டதை விட ஆயிரத்து 400 குடும்பங்களால் இடம்பெயர்ந்தோர் தொகை அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.

எனவே இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காக நாம் உள்ளக இடப்பெயர்வினால் அகதிகளாகியவர்களின் விபரங்களை முழுமையாக மீளாய்வு செய்யவுள்ளோம் என்றார். (த-5)

# மின்சாரம் தாக்கியதில் நேற்று இருவர் சாவு

யாழ்ப்பாணம், மே 6

மின் தாக்குதலுக்கு இலக்காகி நேற்று இரு வேறு இடங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். பருத்தித்துறையில் மின்சாரம் தாக்கி மேசன் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார். அதே வேளை, கோண்டாவில் பகுதியிலும் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீடு கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த மேசன் தொழிலாளி ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் பருத்தித்துறை பன்னன்கட்டை என்ற இடத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பருத்தித்துறை கொட்டடி, கடற்கரை வீதியைச் சேர்ந்த இராசரத்தினம் ஜெயரத்தினசீலன் (வயது-52) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே மின்சாரம் தாக்கி உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் மரண விசாரணைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

கோண்டாவில் பகுதியில் ஆலயத்துக்கு வர்ணம் பூசிக் கொண்டிருந்தவர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த திரவியநாதன்-ரமிஸ்ரன் (வயது-27) என்பவரே உயிரிழந்தவராவார்.

கோண்டாவில் பகுதியில் உள்ள அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் வர்ணவேலையில் ஈடுபட்டுக் கொணடிருந்த குழுவுடன் இணைந்து இந்த இளைஞர் வேலையில் ஈடுபட்டிருந்தார்.

குறித்த இளைஞர் ஆலயக் கோபுரத்துக்கு வர்ணம் புசியவேளை கோபுத்துக்கு ஏறுவதற்குப் பயன்படுத்தும் சிகரத்தில் மின் வயர் பட்டமையினால் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானார். இது தொடர்பில் கோப்பாய் பொலிசில் முறையிட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-101-400-173)

# கமலின் சகோதரர் வீட்டிலும் ஆயுதம்; கைதான பெண்ணுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மே 6

ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட முன்னாள் அமைப்பாளரான கமலினுடைய சகோதரரான வர்ணன் என்பவரது வீட்டில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவத்தை அடுத்து அந்த வீட்டில் வசித்து வந்த நிலையில் கைது செய்யப்பட்ட பெண்ணை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்று முன்தினம் நீதிவான் எஸ். லெனீன் குமாரின் வாசஸ்தலத்தில் முற்படுத்தப்பட்டபோதே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இராணுவத்தினருக்குக் கிடைத்த தகவலையடுத்து ஊர்காவற்துறை கரம்பொன் பகுதியில் உள்ள வீடு ஒன்றைக் கடந்த சனிக்கிழமை சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தியபோதே கூரையின் சீற்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ரி-81 ரக துப்பாக்கி, ரவைகள் -15 மற்றும் மகசின் என்பவை மீட்கப்பட்டன.

சட்டவிரோதமாக ஆயுதங்களை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

# சர்வதேச சாசனத்தை மீறிய கனடாவுக்கு எதிராக ஐ.நா.வில் முறையிட வேண்டும்

***அரசிடம் கோருகிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்***

கொழும்பு, மே 6

சர்வதேச சாசனத்தை மீறிய கனடாவுக்கு எதிராக அரசு ஐ.நா.வில் முறைப்பாடு செய்ய வேண்டுமென வலியுறுத்தியுள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், வடமாகாண சபைத் தேர்தலின்போது அரசு தமிழில் ஒரு விளம்பரத்தையேனும் வெளியிடாத நிலையில் எப்படி தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் கேள்வியெழுப்பியது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்புபட்ட 16 அமைப்புக்களை இலங்கை அரசு அண்மையில் தடை செய்தது. அது ஐ.நாவின் சர்வதேச சாசனத்தின் 13 மற்றும் 17 ஆவது சரத்துக்களுக்கமையவே மேற்கொள்ளப்பட்டது. எனவே ஐ.நா.வில் உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து நாடுகளும் இந்தத் தடையை ஏற்றுக்கொண்டு தத்தமது நாடுகளில் இயங்கும் இந்த அமைப்புக்களைத் தடை செய்யவேண்டும்.

ஆனால், கனடா இந்த அமைப்புக்களைத் தடை செய்யப் போவதில்லையென அறிவித்துள்ளது. எனவே, கனடாவின் இந்தத் தீர்மானமானது சர்வதேச சாசனத்தை மீறுவதாகவே அமைந்துள்ளது.

இதனால் அரசு கனடாவுடன் இராஜதந்திர ரீதியான பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும். அந்த முயற்சி தோல்வி கண்டால் சர்வதேச சாசனத்தைக் கனடா மீறியுள்ளமையைச் சுட்டிக்காட்டி ஐ.நாவில் அரசு முறைப்பாடு செய்ய வேண்டும். அதற்கான பூரணமான உரிமை இலங்கை அரசுக்கு உள்ளது.

போர் முடிந்த பின்னர் வடக்கில் பாதைகளை, பாலங்களை அமைக்கும் அரசின் நடவடிக்கைகளால் தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற்றுவிட முடியாது. அங்கு வீடுகளை நிர்மாணிக்கும் போது அந்த மக்களின் பங்களிப்பைப் பெற்றிருக்க வேண்டும். மாற்று அரசியல் கட்சிகளிடமும் ஆலோசனைகளை பெற்று மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியிருக்கவேண்டும். அங்கு உற்பத்தியாகும் பொருள்களுக்குச் சந்தை வாய்ப்பு வழங்கப்படவில்லை. பெரு மளவில் திராட்சைப் பழங்கள் உற்பத்தியாகின்றன. அதனை பயன்படுத்தி வைன் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை திறந்து இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கியிருக்கலாம்-என்றார். (த)

# அமலன் கொலை; சாட்சியம் பதிவு

யாழ்ப்பாணம், மே 6

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெற்ற பொன் அணிகளின் போர் துடுப்பாட்டத்தில் குடும்பஸ்தர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சாட்சி ஒருவரது சாட்சியம் மல்லாகம் நீதிமன்றில் நேற்றுப் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களான 8 பேருக்கும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றில் மேலதிக நீதிவான் ஜோய் மகிழ் மகாதேவா முன்னிஷ்யில் இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுச் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. அமலனின் கொலைக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 8 பேர் ஏற்கனவே அடையாள அணிவகுப்புக்கு முற்படுத்தப்பட்டு அவர்களில் 5 பேர் சாட்சிகளால் அடையாளங் காணப்பட்டிருந்தனர்.

கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற இந்தக் கொலைச் சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த த.அமலன் (வயது -23) என்பவர் அடித்துக் கொல்லப்பட்டார்.

பொன் அணிகளின் போர் எனப்படும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் போது அமலன் அடித்துக் கொலை செய்யப்பட்டார். இவர் ஒரு குழந்தையின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)

# விவசாய செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 6

வரட்சியான காலநிலையில் கடைப்பிடிக்கக் கூடிய விவாசாயத் தொழில் நுட்பங்களை பயன்படுத்துதல் தொடர்பான செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் உயிலங்குளம் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற உள்ளது.

மன்னார் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாயம் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் துறை அமைச்சர் பொ. ஐங்கர நேசனும், சிறப்பு விருந்தினர் களாக வட பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலைய மேலதிப் பணிப்பாளர் கலாநிதி எஸ். ஜே. அரசகேசரி, முருங்கன் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் நிலைய பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.பி. சத்தியமூர்த்தியும் கலந்து கொள்வர்.

இதில் மரக்கறிப் பயிர்ச்செய்கை, பழப் பயிர்ச் செய்கை மற்றும் நெற் செய்கை தொடர்பான செயலடர்வு இடம் பெறவுள்ளது. (400)

# மெய்வன்மைப் போட்டிகள் பிற்போடப்பட்டன

தென்மராட்சி, மே 6

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று முதல் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக வலய மட்ட மெய் வன்மைப் போட்டிகள் மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நேற்று முதல் வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (400-9)

## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் முத்துப்பிள்ளை

டச்சுறோட் இருபாலையைப் பிறப்பிடமாகவும் குளுக்கண்டிலேன் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் முத்துப்பிள்ளை நேற்று (05.05.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பிகைபாகர் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அருமைத்துரை, தம்பித்துரை, செல்வராணி மற்றும் இராசமணி, பவளம்மா, இரத்தினசிங்கம் ஆகியோரின் தாயும் சுசிலகுமாரி, அகிலன், அமலன் (மாவட்ட இணைப்பாளர், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்) அருணன் (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் - சங்கானை பிரதேச செயலகம்), சுரேக்கா (பிரான்ஸ்)சாந்தகுமார் (பிரான்ஸ்), சந்திரகுமார் (பிரான்ஸ்), சசிகுமார் (பிரான்ஸ்), மாலா (கனடா), விசயகுமார் (நோர்வே), ஜெக்குமார் (பிரான்ஸ்), சிவகுமார் (கொலண்ட்), காஜா (பிரான்ஸ்), ராணி (பிரான்ஸ்), மணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுகுணா கௌரி மற்றும் அன்புக்கரசி (சுவிஸ்), சாந்தி, சுகுணா, சிவகுமார், காலஞ்சென்ற ஜோகன், சிவா மற்றும் சின்னத்தம்பி, தவராசா (ஜேர்மன்), சிவேந்திரராசா (சுவிஸ்), காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் செல்வா (ஜேர்மனி), றஞ்சிதமலர் (சுவிஸ்), விசியா (ஜேர்மனி), தேவி (ஜேர்மனி), பவானி (சுவிஸ்), ராதகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளுக்கண்டி லேன,*
*இருபாலை.*

(47673)

தகவல்:
இரத்தினசிங்கம் (கிளி)

## விபத்துக்களில் மூவர் காயம்

யாழ்ப்பாண பிரதேசத்தில் இரு வெவ்வேறு விபத்துக்களில் கடந்த சனிக்கிழமை 3 பேர் காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.
தாவடிச் சந்தியில் வீதியால் சைக்கிளை உருட்டிச் சென்றவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் 2 பேர் காயமடைந்தனர்.
சைக்கிளை உருட்டிச் சென்ற கொக்குவில் தாவடியைச் சேர்ந்த ஜெ.ஜெகதீஸ்வரன் (வயது-27) என்பவரும் மோட்டார் சைக்கிளில் வந்த சரசாலை வடக்கைச் சேர்ந்த இ. ஸ்ரீராம் (வயது-23) ஆகியோருமே இவ்விதம் காயமடைந்துள்ளனர்.
இதேவேளை கோப்பாய் இராச பாதை வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரை பின்னால் வந்த வடி ரக வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பலத்த காயமடைந்தார். நவக்கீரிப் பகுதியைச் சேர்ந்த சிவசம்பு சிவரஞ்சன் (வயது-32) என்பவரே இவ்விதம் காயமடைந்தவர் ஆவார். (வ-14)

# பயிற்சி முடிந்த 480 ஆசிரியர்களும் வன்னியில் ஜூன் 9 இல் கடமையேற்பு

### மே மாதச் சம்பளத்தைக் கலாசாலையில் பெறலாம்

கோப்பாய், மே 6
கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் 480 ஆசிரியர்களும் ஜூன் 9 ஆம் திகதி புதிய பாடசாலைகளில் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளவுள்ளனர்.
இவர்களுக்கு ஜூன் 2 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை நடைபெறும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இறுதிப் பரீட்சைக்குத் தயார் செய்வதற்கு இரண்டு வார கால (மே 16- ஜூன் 01 வரை) மேலதிக படிப்பு லீவு வழங்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சு செய்துள்ளது.
ஆசிரியர் கலாசாலைகளின் பயிற்சி மே 15 ஆம் திகதியுடன் நிறைவடையும் நிலையில் அவர்கள் புதிய பாடசாலைகளில் உடனடியாகக் கடமை ஏற்பதன் மூலம் இறுதிப் பரீட்சைக்குத் தயார் செய்வதில் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு இந்த விசேட ஏற்பாட்டை வடக்கு மாகாண கல்வி அமைச்சு செய்துள்ளது.
வழமை போல இவர்களுக்கான மே மாதத்துக்கான சம்பளம் ஆசிரிய கலாசாலை ஊடாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

> குறிப்பிட்ட கால நிபந்தனை சேவையை நிறைவு செய்த பின்னர் தமது சொந்த இடங்களிலுள்ள விருப்பமான பாடசாலைகளுக்கு இட மாற்றம் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து இந்த வருடம் 13 பாடத்துறைகளில் ஆசிரிய பயிற்சிகளை நிறைவு செய்து கொண்டு 480 ஆசிரியர்கள் வெளியேறுகின்றனர்.
இவர்களில் 220 பேர் ஆரம்பக் கல்வித்துறையில் பயிற்சியை நிறைவு செய்பவர்கள். 40 பேர் ஆங்கில பாட பயிற்சியை நிறைவு செய்தவர்கள். மிகுதி 220 ஆசிரியர்களும் ஏனைய பாடத்துறைகளைச் சேர்ந்தவர்கள்.
பயிற்சியை நிறைவு செய்து கொண்டு வெளியேறும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட கால சேவை நிபந்தனை அடிப்படையில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பெரு நிலப் பரப்பிலுள்ள பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.
இவர்கள் குறிப்பிட்ட கால நிபந்தனை சேவையை நிறைவு செய்த பின்னர் தமது சொந்த இடங்களிலுள்ள விருப்பமான பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-11)

## சாவகச்சேரி மருத்துவமனைக்கு முன்பாக வீதி விளக்குகள்



தென்மராட்சி, மே 6
சாவகச்சேரி நகரசபையினர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு முன்பாக இரு வீதி விளக்குகளைப் பொருத்தியுள்ளனர்.
மருத்துவமனைக்கு இரவு வேளைகளில் வரும் நோயாளர்களின் நலன்கருதி மருத்துவமனைக்கு முன்பாகவுள்ள ஏ-9 வீதியில் வீதி விளக்குகள் பொருத்தித் தருமாறு மருத்துவனை நிர்வாகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரு வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. (வ-9)

## பஸ் மோதி சைக்கிளில் பயணித்தவர் காயம்

பளை, மே 6
இயக்கச்சிப் பகுதியில் இ.போ.ச. பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்றது.
விபத்தில் காயமடைந்த பளை, தர்மக்கேணியைச் சேர்ந்த கந்தையா இரத்தினசிங்கம் (வயது-34) என்பவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பளைப் பொலிஸார் பஸ் சாரதியைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மீண்டும் குழு மோதல்கள்; வீதிகளில் நடமாட அச்சம்

தென்மராட்சி, மே 6
தென்மராட்சி பிரதேசத்தில் மீண்டும் தலைதூக்கியுள்ள குழு மோதல்களால் மக்கள் வீதிகளில் செல்ல அச்சமடைவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தினமும் பிரதேசத்தின் பல இடங்களில் கோஷ்டி மோதல்களால் பலர் காயமடைவதுடன், வீதியில் செல்வோரும் மோதல்களிடையே அகப்பட்டு காயமடையும் நிலையும் காணப்படுகிறது.
நேற்று முன்தினம் ஞாயிறு இரவு வரணி, இடைக்குறிச்சிப் பகுதி வீதியில் சென்ற இளைஞரொருவரைச் சுற்றி வளைத்த குழுவொன்று அவரைக் கொட்டன்களால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளது.
காயங்களுக்கு இலக்கான இளைஞர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
அதே இடத்தைச் சேர்ந்த மகேந்திரன் ஜீவகரன் (வயது -24) என்பவரே காயமடைந்தவராவார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)




முற்றவெளியில் உள்ள புல்லுக்குளத்தின் பாதுகாப்பு அணைக்கட்டின் ஒரு பகுதி சேதப்பட்டும் இதுவரைக்கும் அது சீர்செய்யப்படவில்லை. பாதுகாப்பு அணைக்கட்டு ஊடாக நடைபாதை செல்வதால் நடைபாதையால் பயணிக்கும் மக்கள் அச்சத்தின் மத்தியில் பயணிக்கின்றனர். (வ-17)

## நேருக்கு நேர் மோதின மோட்டார் சைக்கிள்கள்

**இளைஞர்கள் 4 பேர் படுகாயம்**

யாழ்ப்பாணம், மே 6
நேற்று முன்தினம் வீதியில் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் 4 இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.
எதிரெதிர் திசைகளிலிருந்து மோட்டார் சைக்கிள்களில் வந்த இளைஞர்கள் நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு முன்பாக தனியார் பஸ்ஸொன்றை விலத்திச் செல்ல முற்பட்ட போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் பயணித்தவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.
சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த சஞ்சீவ் (வயது-25), கோமளன் (வயது-26) ஆகியோரும் கல்வியங்காட்டைச் சேர்ந்த தனுராஜ் (வயது-19), நிரோசன் (வயது-20) ஆகியோருமே இவ்விதம் காயமடைந்தவர்கள் ஆவர். காயமடைந்தவர்களில் இருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (வ-14)



குளத்தைச் சூழவுள்ள குப்பைகள் அகற்றப்படாத நிலையில் உள்ளன.

## குப்பை கூளங்கள் நிறைந்துள்ள வின்சர் சந்திக்கு சமீபமான குளம்

கொழும்புத்துறை,மே 6
யாழ்.வின்சர் சந்திக்குச் சமீபமாக உள்ள குளத்தில் குப்பை கூளங்கள், சம்புப் புல் என்பன நிறைந்து பற்றைகள் சூழ்ந்து அந்தப்பகுதி சுகாதாரச் சீர்கேடான பகுதியாகக் காணப்படுகிறது.
ஸ்ரான்லி வீதியில் உள்ள கழிவு நீர் கால்வாயின் வழியாக அந்தக் குளத்துக்கு வந்து சேரும் கழிவு நீர் அங்குள்ள பற்றைகள், குப்பைகளின் தடையால் வடிந்தோட முடியாது தேங்கி நிற்கிறது. இதனால் துர்நாற்றமும் நுளம்பு உற்பத்தியும் அதிகரித்துக் காணப்படுகிறது.
அத்துடன் யாழ்.நகரின் மத்தியில் இவ்வாறான நிலையில் அசுத்தமான குளம் அமைந்திருப்பது யாழ்.நகரின் அழகுக்குப் பங்கம் விளைவிப்பதாக சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.
யாழ்.முற்றவெளிப் பகுதியை அழகுபடுத்தும் திட்டத்தில் குறித்த குளத்தையும் இணைத்து அழகுற அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். (வ-135)

## கனடாவிலிருந்து வந்த மூதாட்டி தாக்கப்பட்டு மருத்துவமனையில்

தென்மராட்சி, மே 6
கனடாவிலிருந்து வந்து தனது சொந்த வீட்டில் இருந்தவர்களை வெளியேற்ற முயன்ற மூதாட்டியை வீட்டில் குடியிருப்பவர்கள் தாக்கி காயப்படுத்தியதுடன் அவருக்குக் கொலை அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நுணாவில் மேற்கு, மட்டுவில் ஒழுங்கையில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சற்குணானந்தன் தயாளசோதி (வயது -75 ) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:
குறித்த மூதாட்டி கனடாவுக்குச் செல்ல முன்னர் அந்தப் பகுதியில் உள்ள ஒரு குடும்பத்தினரை தமது வீட்டில் வாடகைக்கு இருத்தி வாடகை ஒப்பந்தமும் செய்துவிட்டுச் சென்றுள்ளார். கடந்த மார்ச் மாதம் கனடாவிலிருந்து தொலைபேசியில் அக்குடும்பத்தவரைத் தொடர்பு கொண்ட மூதாட்டி தாம் அடுத்த மாதம் இலங்கைக்கு வரவிருப்பதால் தமது வீட்டைத் தம்மிடம் மீளவும் ஒப்படைக்குமாறு கேட்டுள்ளார். இந்த நிலையில் குறித்த வீட்டில் வசிப்போர் வீட்டிலிருந்து வெளியேற ஒரு மாத கால அவகாசம் கேட்டுள்ளனர். அதற்கு சம்மதித்து ஒரு மாதத்தின் பின்னர் கடந்த ஏப்ரல் மாதம் கனடாவிலிருந்து இங்கு வந்த குறிப்பிட்ட மூதாட்டி வீட்டுக்காரருடன் நேரில் கதைத்து தமது வீட்டை தம்மிடம் மீள ஒப்படைக்குமாறு கேட்டுள்ளார். அதற்கு மறுத்த வீட்டில் தங்கியிருப்போர் மேலும் அவகாசம் கோரியிருந்தனர்.
இதனையடுத்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் அவர்களை வீட்டிலிருந்து வெளியேற்றித் தருமாறு அம் மூதாட்டி முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் வீட்டுக்காரரை அழைத்து விசாரித்தபோது சித்திரை வருடப் பிறப்பு முடிந்ததும் வெளியேறுவதாகக் கூறியுள்ளனர். ஆயினும், இதுவரை வீட்டிலிருந்து அவர்கள் வெளியேறாததால் நேற்று முன்தினம் பகல் மீண்டும் வீட்டுக்காரரை வீட்டைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டுள்ளார்.
அவ்வேளையில் அங்கு மல்லாவியிலிருந்து வருகை தந்திருந்த ஒருவர் மூதாட்டியைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார். அத்துடன் வீட்டுக்கு இனிமேல் வந்தால் கனடாவுக்கு பெட்டிக்குள் வைத்து அனுப்பி விடுவோமென கொலை அச்சுறுத்தலும் விடுத்துள்ளனர்.
காயமடைந்த மூதாட்டியை அங்கு நின்றோர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதித்தனர். மூதாட்டியை தாக்கிய மல்லாவியைச்சேர்ந்த தங்கராசா சிவசுதன் (வயது- 34 ) என்பவரை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

# அமெரிக்கா, இஸ்ரேல் தூதரகங்களை தாக்குவதற்குத் தீவிரவாதிகள் திட்டம்

## ஷாகீர் உசைனிடம் நடத்திய விசாரணையில் அம்பலம்

சென்னை,மே 6
இந்தியாவில் உள்ள 2 வெளிநாட்டுத் தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்த பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. திட்டமிட்டிருந்தது அம்பலமாகியுள்ளது.

சென்னையில் பிடிபட்ட இலங்கையைச் சேர்ந்த தீவிரவாதி ஷாகீர் உசைனிடம் பொலிஸார் நடத்திய விசாரணையின் போது, இது தொடர்பாக ஆதாரத்துடன் கூடிய தகவல் கிடைத்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த ஷாகீர் உசைன், அந்நாட்டில் உள்ள பாகிஸ்தான் தூதர கத்தில் பணியாற்றும் ஐ.எஸ்.ஐ. அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில், தமிழகத்துக்கு உளவு பார்க்க வந்தார் எனத் தெரிவித்து அவரைத் தமிழக பொலிஸார் சில நாள்களுக்கு முன்பு கைது செய்தனர்.

அவரிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் தெரியவந்ததாவது:-

சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தையும், பெங்களூரில் உள்ள இஸ்ரேல் தூதரகத்தையும் தாக்குவதற்குத் திட்டமிடுவதற்கான உளவு வேலையைச் செய்வதற்கு ஷாகீர் உசைன் சென்னைக்கு வந்துள்ளார். இந்தத் தாக்குதலைதிட்டமிடுவதற்காகமாலை தீவில் இருக்கும் மேலும் 2 பேரை சென்னைக்கு அனுப்ப ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பு முடிவு செய்திருந்தது. அவர்களுக்கான பயண ஆவணங்களைத் தயாரிக்கும் பணியும், அவர்கள் இரகசியமாக மறைந்து வாழ்வதற்கான இடத்தை ஏற்பாடு செய்யும் பொறுப்பும் ஷாகீர் உசைனிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆள் கடத்தல், போலி கடவுச்சீட்டு தயாரிப்பு, கள்ள நோட்டுக் கடத்தல் உள்ளிட்ட பணிகளில் ஷாகீர் உசைன் ஏற்கெனவே ஈடுபட்டு வந்ததால், இந்த உளவுப்பணிக்கு அவரை ஐ.எஸ்.ஐ. தேர்ந்தெடுத்துள்ளது.

தன்னைச் சென்னைக்கு அனுப்பியவர் இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் விசா வழங்கும் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஆமிர் ஜுபைர் சித்திக் என்று ஷாகீர் உசைன் கூறியுள்ளார்.

பெங்களூரில் உள்ள இஸ்ரேல் தூதரகத்தையும், சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தையும் வேவு பார்த்த ஷாகீர் உசைன், அந்த கட்டடங்களையும், அவ்வழியாகச் செல்லும் சாலை அமைப்புகளையும் புகைப்படம் எடுத்து இணையம் மூலம் இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்கு அனுப்பியுள்ளார். அதற்கான ஆதாரங்களைப் பொலிஸார் சேகரித்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் வேறு யாருக்கெல்லாம் தொடர்பு இருக்கிறது என்பதை அறிய ஷாகீர் உசைனிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

**பாகிஸ்தான் தூதரகம் மறுப்பு:**

இந்தியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களைத் தாக்க ஐ.எஸ்.ஐ. அமைப்புச் சதி செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டை, இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரி முகம்மது தவுத் எடிஷாம் மறுத்துள்ளார். இந்த விவகாரத்தில் தங்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்த ஊடகங்கள் முயற்சிப்பதாகவும், பாகிஸ்தான் இதுபோன்ற செயல்களில் எப்போதும் ஈடுபடாது என்றும் அவர் தெரிவித்தார். (த)

## டுவிட்டரில் ரஜினி



ரஜனிகாந்த்

புதுடில்லி,மே 6
பல்வேறு திரையுலகப் பிரபலங்கள் இருக்கும் டுவிட்டர் தளத்தில் நடிகர் ரஜினிகாந்த் நேற்றுத் தன்னை இணைத்துக் கொண்டார்.

தமிழ்த் திரையுலகினைப் பொறுத்தவரை தற்போது முன்னணி நடிகர்கள் பலரும் டுவிட்டர் தளத்தில் இணைந்து வருகிறார்கள். ரஜினி, கமல், அஜித் உள்ளிட்ட சில நடிகர்கள் மட்டுமே டுவிட்டர் தளத்தில் இணையாமல் இருந்தார்கள்.

'கோச்சடையான்' திரைப்படம் இந்த வாரம் வெளிவர இருக்கும் நிலையில் இன்று ரஜினிகாந்த் தன்னை டுவிட்டர் தளத்தில் இணைத்துக் கொண்டார். அவரது ட்விட்டர் முகவரி @superstarrajini. இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், திரையுலகில் என்னுடைய வளர்ச்சி அதிசயமானது. அதற்கு என் ரசிகர்களே காரணம். சமூக வலைத்தளங்களின் வழியே என் ரசிகர்களோடு தொடர்பு கொண்டு, அவர்கள் சொல்வதை அறியவும், என்னுடைய கருத்துகளை அவர்களோடு பகிர்ந்து கொள்ளவும் விரும்பினேன் எனக் கூறியுள்ளார்.

ரஜினிகாந்த் அதிகார பூர்வ டுவிட்டர் தளத்தில், ரசிகர்கள் பெருமளவில் பின் தொடர்ந்து வருகிறார்கள். அறிக்கை வெளியிட்டதில் இருந்து நிமிடத்திற்கு 100க்கும் மேற்பட்டோர் பின்தொடருவது குறிப்பிடத்தக்கது. (த)



உத்தர பிரதேச மாநிலம், அமேதியில், காங்கிரஸ் துணைத் தலைவரும் தன் சகோதரருமான ராகுல் காந்தியை ஆதரித்து பிரியங்கா காந்தி பிரசாரம் செய்தார்.(த)

## பிரசார மேடையில் இராமர்; மீண்டும் சர்ச்சையில் மோடி

பைசாபாத்,மே 6
உத்தரப்பிரதேச மாநிலம் பைசாபாத்தில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார் நரேந்திர மோடி. மோடி பிரசாரம் செய்த மேடையின் பின்னணியில் ராமர் படம் இருந்தது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

பிரசாரத்தின்போது, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாத காங்கிரஸ் கட்சிக்கு ராமர் பிறந்த பூமியில் வசிக்கும் மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என மோடி வேண்டுகோள் விடுத்தார்.

ராமர் கோயிலை மீண்டும் கட்டுவது குறித்து நேரடியாக ஏதும் பேசாவில்லை. தேர்தலில் காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சி, பகுஜன் சமாஜ் கட்சிகளை மக்கள் தோற்கடிக்க வேண்டும் என மோடி வலியுறுத்தியதோடு ராமர் பிறந்த பூமியில் பிறந்த மக்கள் வாழ்க்கையை இழந்தாலும் வார்த்தை தவறமாட்டார்கள் என் மறைமுகமாக ராமரை மேற்கோள் காட்டிப் பேசினார்.

இந்நிலையில், மேடையின் பின்னணியில் ராமர் படம் இருந்தது தொடர்பாக தேர்தல் ஆணையம் விளக்கம் கோரியுள்ளது. இந்தத் தகவலை உத்தரப்பிரதேச தலைமை தேர்தல் அதிகாரி உமேஷ் சின்ஹா உறுதிபடுத்தியுள்ளார்.

அண்மையில் குஜராத் மாநிலம் காந்திநகரில் வாக்களித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நரேந்திர மோடி பா.ஜ.க தாமரைச் சின்னத்தை கையில் வைத்துக் கொண்டு பேசியது தொடர்பாக 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. (த)

## ரஜினியின் வசனம் மூலம் அதிரடித் தேர்தல் பிரசாரம்

புதுடில்லி,மே 6
தெலுங்கு தேசம் தலைவர் சந்திரபாபு நாயுடுவின் மகன், ரஜினிகாந்தின் பிரபல திரைப்பட வசனத்தை பேசி தேர்தல் பிரசாரம் மேற்கொள்கிறார்.

சித்தூர் மாவட்டம் குப்பம் சட்டசபைத் தொகுதியில் சந்திரபாபு நாயுடு போட்டியிடுகிறார். இதனைத் தொடர்ந்து, சந்திரபாபு நாயுடுவுக்கு ஆதரவாக அவரது மகன் லோகேஷ் தொகுதி முழுவதும் பிரசாரம் செய்து வருகிறார்.

இந்நிலையில், சந்திரபாபு நாயுடு மகன் லோகேஷ் தனது பிரசாரக் கூட்டங்களில் நடிகர் ரஜினிகாந்த் தனது படத்தில் பேசும் வசனத்தைப் பேசி ஆதரவு திரட்டி வருகிறார்.

ரஜினிகாந்த் நடித்த படையப்பா என்கிற படம் நரசிம்ஹா என்ற பெயரில் தெலுங்கில் மொழி மாற்றம் செய்யப்பட்டு திரையிடப்பட்டது.

இந்த படத்தில் வரும், அதிகமா ஆசைப்படுகிற ஆம்பிளையும், அதிகமா கோபப்படுகிற பொம்பளையும் நல்லா வாழ்ந்ததா சரித்திரம் இல்லை என்ற வசனத்தை தனது பிரசாரத்தின் போது லோகேஷ் பேசி சோனியா காந்தி, ஜெகன் மோகன் ரெட்டியைப் பகிரங்கமாக தாக்கியுள்ளார். (த)

## குண்டு வெடிப்புக் குற்றவாளி அசாமில் இருப்பதாகத் தகவல்

சென்னை,மே 6
சென்னை ரயில் குண்டு வெடிப்பில் சந்தேகத்திற்கு உரிய நபரை பார்த்ததாக பலர் அசாமில் இருந்து தொலைபேசி மூலம் தமிழகப் பொலிசாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

சென்னை குண்டுவெடிப்பு வழக்கில் தமிழக பொலிசார் குண்டு வெடிப்பில் சந்தேகமுள்ள நபர் அடங்கிய காணொலி ஒன்றினை வெளியிட்டனர்.

மத்திய ரயில் நிலையத்தின் சி.சி.ரி.வி கமராவில் அந்த நபரின் உருவம் பதிவாகியுள்ளது. மேலும், குண்டு வெடிப்பதற்கு முன்பு அந்த நபர் கவுகாத்தி எக்ஸ்பிரஸின் எஸ் 3 பெட்டியில் இருந்து இறங்கி பதற்றத்துடன் அவசரமாகச் செல்வது நன்கு பதிவாகி இருந்தது.

அந்தக் காணொலியில் உள்ள நபர் சுமார் 35 வயது மதிக்கத்தக்கவராக உள்ளார்.

இந்நிலையில், அந்த காணொலியைப் பார்த்த அஸாமைச் சேர்ந்த பலரும் அவனை தங்கள் மாநிலத்தில் உள்ள கவுகாத்தியில் பார்த்துள்ளதாக தொலைபேசி மூலம் தமிழக பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து தனிப்படைப் பொலிசார் கவுகாத்தி விரைந்து, அங்கு அந்த நபர் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (த)

## எனது வெற்றி உறுதி; நடிகை ரோஜா அதிரடி



நடிகை ரோஜா

ஆந்திராவில் நகரி தொகுதியில் போட்டியிடும் நடிகை ரோஜா தனக்கு மக்களிடம் அறிமுகம் தேவையில்லை என்றும் தனது வெற்றி உறுதி எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு மாதமாக நகரி தொகுதியில் தனக்கு ஆதரவாக தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், தேர்தல் பிரசாரத்துக்கு இடையே அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், மறைந்த முதல்வர் ராஜசேகர ரெட்டியின் குடும்பத்தினர் மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையெல்லாம் சேர்ந்து வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது.

மேலும், அதேபோல நகரி தொகுதியிலும் எனது வெற்றியும் உறுதியாகி உள்ளது.

கடந்த 4 ஆண்டுகளாக விலைவாசி உயர்வு, மின் கட்டண உயர்வு எனப் பொது மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்காக எங்கள் கட்சி போராடி வருகிறது.

மேலும், 150 படங்களில் நடித்த எனக்கு அறிமுகம் தேவையில்லை. தமிழர்கள் அதிகம் வசிக்கும் ஊர்களில் எனது கணவர் செல்வமணியை தங்கள் வீட்டு மகன்போல் ஆதரிக்கின்றனர். இத்தொகுதியில் நடைபெறும் சுபகாரியங்களில் நானோ எனது கணவரோ கலந்து கொள்ள தவறுவதே இல்லை. அவர்கள் தங்களின் மருமகள் போலவே என்னை ஆதரித்து வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார். (த)

## தவறான தகவல் வழங்கும் வேட்பாளர்கள் தகுதி நீக்கம்

### உயர்நீதிமன்றம் அறிவிப்பு

வேட்புமனுவில் பொய் கணக்குக்காட்டும் வேட்பாளர்களைத் தகுதி நீக்கம் செய்ய தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளதாக உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.


உயர் நீதிமன்ற நீதிபதிகள் சுரீந்தர் சிங் நிஜ்ஜார் அடங்கிய அமர்வு நேற்று இது குறித்த அறிவிக்... தேர்தல் செலவுகள் ...ாய்யான தகவல் தரும் வேட்பாளர்களைத் தேர்தல் ஆணையம் தகுதி நீக்கம் செய்யலாம் என்று தெரிவித்துள்ளது. மேலும் வேட்புமனுவில் பொய்க் கணக்குக் காட்டும் வேட்பாளர்களையும் தகுதிநீக்கம் செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு உள்ளது என்று அறிவித்தது.

தேர்தல் விதிமுறைகளை மீறியதாகவும், பொய்யான சொத்து மதிப்பை தந்ததாகவும் மகாராஷ்டிர முதல்வர் அசோக் சவான் மீது வந்த முறைப்பாடு மீதான விசாரணையில் இந்த அறிப்பை உயர் நீதிமன்றம் அளித்துள்ளது. மேலும் அசோக் சவான் மீதான முறைப்பாட்டை 45 நாள்களுக்குள் விசாரிக்க வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியான இரண்டு நாள்களில், வேட்பாளர்களுக்கு ஆதரவாக செய்தி வெளியிட்டது தொடர்பாகப் பணம் வழங்கியதாக 854 வழக்குகளைத் தேர்தல் ஆணையம் பதிவு செய்தது. இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் உயர் நீதிமன்றத்தை அணுகியது. (த)

## ஜப்பானில் பூமியதிர்ச்சி; 17 பேர் காயம்

ரோக்கியோ.மே 6
ஜப்பானின் தலைநகரான ரோக்கியோவில் நேற்றுக் திங்கட்கிழமை அதிகாலை சக்திவாய்ந்த பூமியதிர்ச்சி ஏற்பட்டதாகவும் இதன் போது 17 பேர் காயமடைந்துள்ளதாகவும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.
இந்தப் பூமியதிர்ச்சி ரிச்டர்; அளவுகோலில் 6.0 ஆகப் பதிவாகியுள்ளது.
ரோக்கியோவுக்கு தெற்கே உள்ள இசு ஒஷிமாவுக்கு அருகிலுள்ள கடலுக்கு அடியில் 160 கிலோமீற்றர் ஆழத்தில் இந்தப் பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.
இந்தப் பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து அங்கு ரயில் சேவையில் சிறிது பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (கு)



அமெரிக்கப் படையினருடன் பிலிப்பைன்ஸ் படையினர் இணைந்து மேற்கொள்ளும் இராணுவப் பயிற்சி நேற்று பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் ஆரம்பமானது. இதில் அமெரிக்கத் தேசியக் கொடிக்கு பிலிப்பைன்ஸ் படையினர் மரியாதை செலுத்துகின்றனர். (கு)

## பிரான்ஸில் பன்றி இறக்குமதி தடை

பாரிஸ்.மே 6
பிரான்ஸில் பன்றி இறக்குமதி செய்வதற்கு தடை விதித்து அந்நாட்டு விவசாயத்துறை அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.
கடந்த இரு வாரங்களாக பன்றித் தொற்றுநோய் வைரஸ் பரவி வருகிறது. இதனால் இந்தக் கிருமி பிரான்ஸைத் தாக்காமல் இருக்க இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.
இதனால் அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ உள்ளிட்ட நாடுகளில் இருந்து கொண்டு வரப்படும் பன்றிகள் எல்லைகளில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.
ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான பிரான்ஸ் மட்டுமே இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளது.
இந்தக் கிருமிக்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## விமானத்தில் குழந்தை பிரசவித்தார் பெண்

*அபுஜா.மே 6*
*நைஜீரியாவின் தலைநகர் அபுஜாவிலிருந்து லண்டன் நோக்கிப் புறப்பட்ட பயணிகள் விமானத்தில் பெண்ணொருவர் குழந்தையைப் பிரசவித்ததால் ஸ்பெய்ன் தீவொன்றுக்கு விமானம் திருப்பப்பட்டதாக விமானப் போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*
*26 வாரக் கர்ப்பிணியாக இருந்த 30 வயதான பெண்ணொருவர் பிரிட்டிஷ் எயார்வேய்ஸில் லண்டனுக்குச் சென்றுள்ளார். இதன்போதே குறித்த பெண்ணுக்கு பிரசவ வலி ஏற்பட்டுள்ளது.*
*இதனையடுத்து 296 பயணிகளுடன் சென்ற போயிங் 777 விமானம் சகல அனுமதியுடன் ஸ்பெய்னின் பல்மா டி மலொர்கா விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது.*
*அங்கு விமான நிலைய வைத்திய ஊழியர்களின் உதவியுடன் குழந்தையை பிரசவித்துள்ளார் அந்தப் பெண். பின்னர் வைத்தியசாலையில் தாயும் குழந்தையும் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்போது தாயும் சேயும் ஆரோக்கியமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (கு)*

# தெற்குச் சூடான் மோதல்களில் 9 ஆயிரம் சிறுவர் போராளிகள்

## நவநீதம்பிள்ளை தகவல்

ஜூபா.மே 6
தெற்கு சூடான் அரசுக்கும் போராளிக் குழுவுக்கும் இடையில் நான்கு மாதங்களாக இடம்பெற்று வரும் மோதல் சம்பவங்களில் 9,000க்கும் அதிமான சிறுவர் போராளிகள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.
தெற்குச் சூடானுக்கு அண்மையில் மூன்று நாள் பயணம் மேற்கொண்டு போர் நடைபெறும் பகுதிகளைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**மோதல்கள் காரணமாக 1000ற்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.**



நவநீதம்பிள்ளை

இந்த மோதல்களில் 9,000க்கும் அதிகமான சிறார்கள் இரண்டு தரப்பினராலும் ஆயுதம் ஏந்திப் போராட்டத்தில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு தரப்பிலும் ஏராளமான குழந்தைகள் கொல்லப்பட்டு வருகிறார்கள். இரண்டு பிரிவினரும் குற்றவாளிகள்தான் என நவிபிள்ளை இதன் போது சுட்டிக்காட்டினார்.
இந்த மோதல்கள் காரணமாக 1000ற்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

## 200 பாடசாலை மாணவிகள் தொடர்பில் தகவல் இல்லை

அபுஜா.மே 6
நைஜீரியாவில் கடத்தப்பட்ட 200ற்கும் அதிகமான பாடசாலை மாணவிகள் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினருக்கு இதுவரை தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என அந்த நாட்டுஜனாதிபதி குட்லக்ஜொனதன் தெரிவித்துள்ளார்.
போர்னோ மாநிலத்திலுள்ள பாடசாலையில் இருந்து மூன்று வாரங்களுக்கு முன்னர் குறித்த மாணவிகள் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டிருந்தனர்.
இந்தப் பிள்ளைகள் காணாமல் போன பின்னர் முதல் முறையாக குட்லக் ஜொனதன் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பில் அரசின் மீது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருவதுடன் மக்களின் ஆத்திரமும் அதிகரித்துள்ளது. (கு)

## பிரிட்டன் நாடாளுமன்றத்தில் வீர சிவாஜி புத்தகம் வெளியீடு

லண்டன்.மே 6
பிரிட்டன் நாடாளுமன்றத்தில் வீர சிவாஜியின் புத்தகம் வெளியிடப்பட்டது.
இந்திய ஓவியர் பிரிஜேஸ் மோக்ரே வரைந்த சிவாஜியின் வாழ்க்கை வரலாறுடன் தொடர்புடைய 100 ஓவியங்கள் இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.
இந்தியாவைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியர் பாபாசாஹிப் புரேந்தர் இப்புத்தக்கத்தை வெளியிட்டார்.
8௯ பக்கங்கள் அடங்கிய இந்தப் புத்தகத்தை இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் வெளியிடவேண்டும் என்று அப்போது பாபாசாஹிப் புரேந்தர் தெரிவித்தார்.
உள்நாட்டின் சிறந்த ஆட்சியாளர்களைப் பற்றிய புத்தகங்களைப் படிக்க இந்திய மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை. நெப்போலியன் குறித்த புத்தகம் இரண்டரை லட்சம் பிரதிகள் விற் கின்றன. ஆனால் வீர சிவாஜியின் புத்தகம் அதிக அளவில் விற்பனை ஆவதில்லை என்றும் அவர் கூறினார்.
இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தொழிலாளர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கெய்த் வாஸ் புத்தக வெளியீட்டு நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.
அப்போது பேசிய அவர், பிரிட்டன் நாடாளுமன்ற நூலகத்தில் இப்புத்தகத்தை வைக்க உத்தரவிட்டுள்ளேன் என்றார். (கு)

## காந்தியின் படத்தோடு புத்தகம் வெளியிட்ட பாடசாலை மீது நேபாளத்தில் கடும் தாக்குதல்

காத்மண்டு,மே 6
நேபாளத்தில் காஞ்சபூர் மாவட்டத்தில் உள்ள மகேந்திரநகரில் சர்வதேச பப்ளிக் மேல்நிலைப் பள்ளி மாவோயிஸ்ட்டுக்களால் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.
அந்தப் பாடசாலையில் வெளியிடப்பட்ட ஒரு புத்தகத்தில் இந்தியத் தலைவர்களான மகாத்மா காந்தி உள்ளிட்ட பலரின் புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இதைப் பார்த்த மாவோயிஸ்ட்டுக்கள் கடும் ஆத்திரம் அடைந்தனர்.
அந்தப் பள்ளிக்குள் புகுந்த அவர்கள் வெறியாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கிருந்த கம்ப் யூட்டர்கள், டெலிபோன்கள், மற்றும் மேஜைநாற்காலிகளை அடித்து நொருக்கினர். பெற்றோலை ஊற்றித் தீவைத்தனர்.
மேலும் அங்கு நிறுத்தி வைத்திருந்த பள்ளி பஸ்ஸுக்கு தீவைத்தனர். அதில் அந்த பஸ் முழுவதும் எரிந்து நாசமானது.
இந்தத் தகவலை அப்பள்ளியின் நிர்வாக இயக்குநர் மகாசர்மா தெரிவித்தார். (கு)

## புகைமூட்டத்தால் பிரிந்த குடும்பம்; விந்தையான விவாக ரத்து வழக்கு

பீஜிங்.மே 6
*சீன தலைநகர் பீஜிங்கில் நிலவி வரும் புகைமூட்டத்தால், தன்னைப் பிரிந்து மகனுடன் தனியே வாழும் மனைவியிடமிருந்து விவாக ரத்துப் பெற்றுக்கொள்ள நபரொருவரால் பதிவு செய்யப்பட்ட விந்தையான வழக்கு சீன மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*
பொருளாதாரத்தில் சீனா அதிவேகமாக முன்னேறி வருகிறது. கடந்த காலங்களில் மேற்கொண்ட பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளால் சீனாவின் சுற்றுச்சூழல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.
அதிலும், பெய்ஜிங் உள்ளிட்ட நகரங்களில் காற்று பெருமளவில் மாசுபட்டுள்ளது.
இதனால் அந்நகரங்களில் எப்போதும் புகைமூட்டம் காணப்படும். இதன் காரணமாக அங்குள்ள மக்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ளனர்.
இந்நிலையில் பீஜிங் நகரிலுள்ள வாங் என்ற நபர் கடந்த 2008ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இரண்டு ஆண்டுகள் கழித்து அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.
காற்று மாசுபாட்டால் அந்தக் குழந்தைக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது. இதனால், காற்று மாசுபாட்டிலிருந்து தப்பிக்க வாங்கின் மனைவி தங்களின் குழந்தையை எடுத்துக் கொண்டு ஹைனான் தீவுக்குச் சென்றுவிட்டார். தற்போது அவர் தன் குழந்தையுடன் அங்கு வசித்து வருகிறார்.
எனினும், வாங்கின் மனைவிக்கு ஹைனான் தீவு பிடிக்கவில்லை. தனது கணவரை விட்டுப் பிரிந்திருக்கவும் அவருக்குப் பிடிக்கவில்லை. ஆனால், கணவனும் மனைவியும் சந்தித்துக் கொள்ளும் சந்தர்ப்பத்திலும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.
இதனால், விரக்தியடைந்த வாங், மாசுபட்ட காற்று, என் குழந்தையின் உடல்நலத்தையும் என் திருமணத்தையும் சிதைத்துவிட்டது என்று கூறி விவாகரத்துக்கு விண்ணப்பித்துள்ளார். (கு)



இலங்கைக்கு வருகை தந்த சர்வதேச பிரதிநிதிகள்....

# இலங்கைக்கு வந்தனர் 354 இளம் பிரதிநிதிகள்

கொழும்பு,மே 6

இலங்கையில் இன்று ஆரம்பமாகவுள்ள சர்வதேச இளைஞர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்று திங்கட்கிழமை காலை வரை 94 நாடுக ளிலிருந்து சுமார் 354 இளம் பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர்.

இலங்கைக்கு நேற்று அதிகாலை வருகை தந்த பீஜிங், நேபாளம், கியூபா, கெபோன், அல்ஜீரியா ஆகிய நாடுகளின் அமைச்சர்களை இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும வர வேற்றார்.

இன்றும், நாளையும் பல நாடுகளின் அமைச்சர்கள் வருவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மின்சாரம் தாக்கி பணிப்பாளர் அதிதீவிர சிகிச்சை பிரிவில்

மட்டக்களப்பு,மே 6

மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப் பாளர் இரா. நெடுஞ்செழியன் மின்சாரம் தாக்கி படுகாயமடைந்த நிலையில் மட்டக் களப்பு போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இவர் தனது இல்லத்தில் வைத்து நேற்று திங்கட் கிழமை அதிகாலை மின்தாக் குத லுக்கு உள்ளானதாக உறவினர்கள் தெரி வித்துள்னர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னர்களான பா.அரியநேத்திரன், பொன். செல்வராசா, சீ.யோகேஸ்வரன், மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் உட்பட பலர் வைத்திய சாலைக்குச் சென்று அவரைப் பார்வை யிட்டு வருகின்றனர். (ச)

# ஹம்பாந்தோட்டை சம்பவம் நான்கு பேர் கைதாகினர்

## பொலிஸ் ஊடகப் பிரிவு தகவல்

கொழும்பு,மே 6

ஹம்பாந்தோட்டையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில், 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மத்தள விமானம் மற்றும் துறை முகத்துக்குச் சென்ற ஐ. தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய விசேட பொலிஸ் குழு அவர்களைக் கைது செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் துறை முகம் மற்றும் விமான நிலைய அதிகாரிகளிடம் அனுமதியை பெற்றே அங்கு சென்றிருந்தனர். அஜித் பீ. பெரேரா, எரான் விக்ரமரத்ன உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. ஆளும் கட்சியைச் சேர்ந்த ஹம்பாந்தோட்டை மேயர் ஏராஜட பெர்னாண்டோ மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ச)

## கூட்டம் நாளையே நடைபெறும்

இன்று நடைபெறவிருந்த இலங்கை மின்சார சபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை புதன்கிழமை பி.ப.2 மணிக்கு மாற்றப் பட்டுள்ளது என்று சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ)

## நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலகம் ஆதனப் பெயர் மாற்றம்

வட்டாரம் - 09, நீதிராசா வீதி, ஆதன இலக்கம் - 106

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் உப அலுவலக வட்டாரம் - 09, நீதிராசா வீதி, 106 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஏ.விஸ்வலிங்கம் பெண் தங்கரத்தினம் எனும் பெயரில் எமது ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

இந்த ஆதனத்தை யோகரட்ணம் துரைசிங்கம் என்பவர் குறித்த ஆதனத்தில் 1963 ஆம் ஆண்டு முதல் ஆட்சி செய்ததாகவும் ஆதனத்தின் எதிர்கால தேவைக்காக பயன்படுத்துவதற்கு 1777 ஆம் இலக்க 15.03.2000 ஆம் திகதிய நொத்தாரிசு S.N. விஸ்வலிங்கம் அவர்களினால் தயாரித்த உறுதி மூலம் ஆட்சி கோரி வெளிப்படுத்தல் மேற்கொண்டுள்ளார். மேலும் நொத்தாரிசு S.N. விஸ்வலிங்கம் முகதாவில் 2237 ஆம் இலக்க 17.08.2002 ஆம் திகதிய அறுதி மூலம் வ.சிவயோகநாதன் பெண் நோணம்பிகைக்கு வழங்கியுள்ளார். பின் இவ் ஆதனத்தை வ. சிவயோகநாதன் பெண் நோனாம்பிகை நொத்தாரிசு S.N. விஸ்வலிங்கம் முகதாவில் 2431 ஆம் இலக்க 30.04.2003 ஆம் திகதிய அறுதி மூலம் யோ. துரைசிங்கத்துக்கு வழங்கியுள்ளார். மீண்டும் இவ் ஆதனத்தை யோ.துரைசிங்கம் பெண் அன்னரத்தினம் என்போர் நொத்தாரிசு S.N. விஸ்வலிங்கம் முகதாவில் 3648 ஆம் இலக்க 13.12.2008 ஆம் திகதிய உறுதி மூலம் து.பத்மராஜ் பெண் கிரிஜாவிற்கு வழங்கியுள்ளார். பின் இவ் ஆதனத்தை து.பத்மராஜ் பெண் கிரிஜா என்போர் நொத்தாரிசு S.N. விஸ்வலிங்கம் முகதாவில் 4130 ஆம் இலக்க 01.04.2011 ஆம் திகதிய நன்கொடை மூலம் யோ.துரைசிங்கம் பெண் அன்னரத்தினத்துக்கு வழங்கியுள்ளார். மீண்டும் இவ் ஆதனத்தை யோ.துரைசிங்கம் பெண் அன்னரத்தினம் நொத்தாரிசு S.N. விஸ்வலிங்கம் முகதாவில் 4371 ஆம் இலக்க 21.12.2011 ஆம் திகதிய அறுதி மூலம் து. விமல்ராஜ் பெண் புஸ்பராணி என்பவருக்கு வழங்கி யுள்ளார். எனவே து. விமல்ராஜ் பெண் புஸ்பராணி என்பவர் தங்களது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனத்தின் வெளிப்படுத்துகை தொடர்பான ஆட்சேபனை தெரிவிக்கத் தகுதியுடையோர் ஒரு மாத காலத்துக்குள் எழுத்து மூலமாகவோ தொலைபேசியூடாகவோ (வெளிநாட்டில் வசிப்பவர்கள்) தெரிவிக்கலாம் என்றும் யாராவது சட்டபூர்வமான உரிமையாளர்கள் ஆட்சேபனை தெரிவிக்காவிடத்து குறித்த ஆதனமானது து.விமல்ராஜ் பெண் புஸ்பராணி உதயகுமார் எனும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இந்த ஆதனப் பெயர் மாற்றங்கள் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்புக்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ப. வசந்தகுமார் (தலைவர்),**
**நல்லூர் பிரதேச சபை.**

(சி/13785)(10)

## உடுவில் மத்திய விளையாட்டு கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

6 வீரர்கள்
5 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டி
**இடம்:** உடுவில் மத்திய விளையாட்டு கழகம்
**விண்ணப்ப முடிவுத் திகதி :** 08.05.2014

தொடர்புகளுக்கு:
077 668 5092, 077 198 1096 (47864) (10)

## தவறவிடப்பட்டது

சிவாஜிகணேசன் உஷாந்தன் (941154379V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை வாகன அனுமதிப்பத்திரம் சாரதி அனுமதிப் பத்திரம் தாவடி மணிப்பாய் வீதியில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். (47667) (10)

077 0450 688, 077 172 6592

## வாகன பராமரிப்பு மேற்பார்வையாளர் தேவை

வாகன பராமரிப்பு தொழிலகம் ஒன்றுக்கு அனுபவமுள்ள மேற்பார்வையாளர் / முகாரி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

அலுவலக நாள்களில்
காலை 8.30 மணிமுதல்
மாலை 5.00 மணிவரை நேரில்
தொடர்புகொள்ளவும்.

**இல.45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.** (சி/13786) (10)

## மரண அறிவித்தல்

### திருமதி புஷ்பகாந்தி சோதிலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை,
இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஷ்பகாந்தி சோதிலிங்கம் நேற்று (05.05.2014) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் மந்துவில் சோதிலிங்கத்தின் (மொழிபெயர்ப்பாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை-காந்திமதி தம்பதியரின் அன்பு மூத்த மகளும், காலஞ்சென்ற மந்துவில் கணபதிப்பிள்ளை- ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் பிரிய மருமகளும், செந்தூரன் (கணக்காளர்), காயத்திரி (மீள் குடியேற்ற அமைச்சு), ஆகியோரின் தாயும், கமலாதேவி சிவசிதம்பரம் (ஓய்வுபெற்ற S.L.A.S), காலஞ்சென்றவர்களான விமலாதேவி (நீர்ப்பாசனத் திணைக்களம்), நித்தியானந்தன் (Engineer - Mahawali Board) மற்றும் இராஜஇராஜேஸ்வரி (முன்னாள் SCF-UK) ஆகியோரின் சகோதரியும் சுந்தரராஜா (மருந்தாளர்), பூலோகேஸ்வரி, காலஞ்சென்ற சிவசிதம்பரம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.05.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (07.05.2014) புதன்கிழமை தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி/13784) (10)

**தகவல் : கணவர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா கந்தையா



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், 37/48, சேர் பொன் இராமநாதன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா கந்தையா நேற்று (05.05.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதர் கந்தையாவின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2014) செவ்வாய்க் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தின் சார்பில்
**செல்வி அன்னலட்சுமி கந்தையா**
(ஓய்வுபெற்ற அதிபர், யா/பெரியபுலம் ம.வி)

(சி/13787) (10)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற முன்னைநாள் அதிபர் செல்வி அன்னலட்சுமி கந்தையா அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி
**சின்னம்மா கந்தையா**

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/பெரியபுலம் ம.வி**

(47665) (10)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா சாம்பசிவம்



கொக்குவில் மேற்கு முதலிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சாம்பசிவம் நேற்று (05.05.2014) திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் வைத்திலிங்கம்-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், நாகலிங்கம்-பார்வதி தம்பதியரின் சிரேஷ்ட மருமகளும், காலஞ்சென்ற நா.சாம்பசிவத்தின் (முன்னாள் உரிமையாளர்-சாம்பசிவம் அன் கோ) அன்பு மனைவியும், Dr.சண்முகலிங்கம் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற கணேசலிங்கம், நடேசன் (ஆஸ்திரேலியா), சிவகாமி, மகேஸ்வரி (லண்டன்), விக்கினேஸ்வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும், நளாயினி (ஆஸ்திரேலியா), தேவரோகினி (ஆஸ்திரேலியா), சுந்தரகாந்தி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், Dr.அஞ்சயன் (ஆஸ்திரேலியா), அரவிந்தன் (ஆஸ்திரேலியா), சரவணன் (ஆஸ்திரேலியா), சாந்தி (கனடா), சிவதர்சன் (பொறியிலாளர்,லண்டன்), சிவப்பிரியா (லண்டன்), Dr.சிவசாம்பவன் (ஆஸ்திரேலியா), சிவசங்கர் (ஆஸ்திரேலியா), சிவதர்சினி (லண்டன், முன்னாள் ஆசிரியர் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(47666) (10)

**தகவல் : சிவகாமி**
(மகள்)



மேய்ச்சல் இன்றிக் காத்திருக்கும் கால்நடைகள்.

# மேய்ச்சல் தரைக்கு காணிகள் இல்லை

## கால்நடைகள் பாதிப்பு

கிளிநொச்சி, மே 6
கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் பகுதியில் மேய்ச்சல் தரை இன்றி கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மக்கள் மீளக்குடியமர்ந்த அக்கராயன் பகுதியில் மேய்ச்சல் தரைக்கான காணி ஒதுக்கித் தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சிப் பகுதியில் நிலவும் கடும் வறட்சியாலும் கால்நடைகள் பாதிக்கப்பட்டு பல நோய்களுக்கு உள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-18)

# கரும்பு ஆலைக் காணியை மீட்டு எம்மிடம் தாருங்கள்

## ஸ்கந்தபுரம் விவசாயிகள் மீண்டும் கோரிக்கை

கிளிநொச்சி, மே 6
கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் கரும்பு ஆலைக் காணியை இராணுவத்திடமிருந்து மீட்டுத் தருமாறு வடமாகாண விவசாய அமைச்சரிடம் ஸ்கந்தபுரம் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த காலப் போரால் 2008 ஆம் ஆண்டில் மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் கரும்பாலைக் காணியை இராணுவம் அபகரித்துள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

> கடந்த காலப் போரால் 2008 ஆம் ஆண்டில் மக்கள் இடம் பெயர்ந்த பின்னர் கரும்பாலைக் காணியை இராணுவம் அபகரித்துள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

2010 ஆம் ஆண்டில் மக்கள் ஸ்கந்தபுரத்தில் மீள்குடியேற்றம் நடைபெற்றும் கரும்புத் தோட்டத்துக்குரிய 200 ஏக்கர் காணியை இராணுவம் விடுவிக்கவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

பலாலி இராணுவத் தளத்தின் பொறியியல் பிரிவு அமைக்க இந்தக் காணி வேண்டும். அதனால் கரும்புத்தோட்ட செய்கைக்கும், கரும்பு ஆலை இயக்குவதற்கும் வேறு காணியைத் தேடுங்கள் என்று இராணுவம் கிளிநொச்சியின் அரச உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளது என்று கூறப்படுகிறது.

எனவே கரும்புத் தோட்டக் காணியை இராணுவத்திடம் இருந்து மீட்டுத் தர வேண்டும் என்று வடமாகாண விவசாய அமைச்சரிடம் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-18)

# கணினிப் பயிற்சியை முடித்த மாணவர்களுக்கு சான்றிதழ்




பயிற்சிநெறியைபூர்த்திசெய்தமாணவி ஒருவருக்கு வினோநோகராதலிங்கம் எம்.பி. பரிசு வழங்குகிறார்.

மன்னார், மே 6
மன்னார் இந்து முதியோர் நற்பணி மன்றத்தால் நடத்தப்பட்டு வரும் கணினி பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 20 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மன்னார் கீரி அறநெறி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

சுமார் இரண்டு மாத காலம் இடம்பெற்ற குறித்த பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 20 மாணவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கம், மாவட்ட செயலக கணக்காளர் ஜே. ஜெபனேசன் உட்பட பலர் கலந்து கொண்டு மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினர்.

இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-56)



கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் பகுதியில் போரால் சேதமடைந்த சனசமூக நிலையம் இதுவரை புனரமைக்கப்படவில்லை. போர் முடிவுக்கு வந்து 5 வருடங்கள் கடந்தும் இப்போதும் போரால் ஏற்பட்ட வடுக்களை வெளிப்படுத்தி நிற்கின்றது ஸ்கந்தபுரம் சனசமூக நிலையம். (ச-18)

# தமிழ் வித்தி. மாவட்ட மட்டத்துக்கு தெரிவு

வவுனியா, மே 6
தமிழ்த்தின நாடகப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்ட வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் மாவட்ட மட்ட நாடகப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான தமிழ்த்தின நாடகப் போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டி வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெற்றது.

நாடகப் போட்டியில் முதலாம் இடத்தை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்களும், இரண்டாம் இடத்தை வவுனியா கோமரசங்குளம் மகா வித்தியாலய மாணவர்களும் மூன்றாம் இடத்தை வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாணவர்களும் பெற்றுக் கொண்டனர். (ச-402)

# மீள்குடியேறி இரண்டு ஆண்டுகள் கடந்தும் அடிப்படை வசதியில்லை

## இத்தாவில் மக்கள் கவலை

கிளிநொச்சி, மே 6
கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி, இத்தாவில் கிராமத்தில் மீள்குடியேற்றம் நடைபெற்று இரு ஆண்டுகள் கடந்தும் அப்பகுதி வீதிகள் புனரமைக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

174 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள இந்தக் கிராமத்தின் வீதிகள் புனரமைக்கப்படாததால் மக்கள் போக்குவரத்து செய்வதில் பல்வேறு இடர்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் பஸ் தரிப்பிடம், பொது மண்டபம் போன்ற வசதிகளும் ஏற்படுத்தித்தரப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

போரினால் பெரும் அழிவுகளை எதிர்கொண்ட எமது கிராமத்துக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-18)

# செட்டிகுளத்தில் மழை; மக்கள் பெரும் சிரமம்

## வீடுகளுக்குள் புகுந்தது வெள்ளம்

வவுனியா, மே 6
வவுனியா, செட்டிகுளம் பகுதியில் கடந்த ஐந்து நாள்களாக பெய்துவரும் மழையால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

செட்டிகுளம் பகுதியில் சீரான கால்வாய் வசதிகள் அமைக்கப்படாததால் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வெள்ள நீர் வீதிகளில் தேங்கியுள்ளதால் மாணவர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் சிரமத்தின் மத்தியில் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதிகளில் உள்ள கால்வாய்களை சீராக புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-402)

# இலங்கையில் முதலாவது விதை வங்கி

வவுனியா, மே 6
வவுனியா, செட்டிகுளம் பகுதியில் விதை வங்கி ஒன்று கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையின் கீழ் இலங்கையின் முதலாவது விதை வங்கியாக இது திறந்து வைக்கப்பட்டது.

இந்த விதை வங்கியின் திறப்பு விழாவில் செட்டிகுளம் பிரதேச செயலர் ந. கமலதாஸ் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (ச-402)

# துணுக்காய் வலயத்தில் பாட ரீதியாக ஆசிரியர் பற்றாக்குறை

## மாணவர்களின் கல்வி வீழ்ச்சி என்கின்றனர் பெற்றோர்

முல்லைத்தீவு, மே 6
முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள பின்தங்கிய பாடசாலைகளில் தொடர்ந்தும் பாட ரீதியான ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகிறது. இதனால் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டு வருகின்றது என்று பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்தில் 18 பாடசாலைகளிலும், மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்தில் 16 பாடசாலைகளிலும், ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தில் 27 பாடசாலைகளிலுமாக 8,483 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில் மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட சிறாட்டிகுளம் அ.த.க., பாலைப்பாணி அ.த.க., பனங்காமம் அ.த.க., மூன்றுமுறிப்பு அ.த.க., நட்டாங்கண்டல் அ.த.க., பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் உள்ளிட்ட பாடசாலைகளில் பாட ரீதியான ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவி வருகின்றது என்று பெற்றோர் தெரிவித்தனர்.

இதேபோன்று துணுக்காய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட தென்னியங்குளம் அ.த.க., புத்துவெட்டுவான் அ.த.க., ஐயன்கன்குளம் அ.த.க., தேறாங்கண்டல் அ.த.க. போன்ற மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் சீராக இடம்பெறுவதில்லை. இதனால் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டுவருகின்றது என்று பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

பின்தங்கிய பாடசாலைகளுக்கு மாணவர் தொகைக்கு ஏற்ப ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் பாட ரீதியான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த பின்தங்கிய கிராமப்புற மாணவர்கள் தங்களின் குடும்ப வறுமை மற்றும் வேறு இடங்களில் தங்கி நிற்க முடியாத நிலை என்பவற்றால் தமது கல்வியைத் தொடர முடியாமல் இடைநிறுத்தும் நிலை ஏற்படுகிறது என்று பெற்றோர் கவலை தெரிவித்தனர். (ச-55)



உயிரிழந்த யானை

## மட்டு. - கொழும்பு ரயிலில் மோதி யானை உயிரிழப்பு

வாழைச்சேனை,மே 6

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் காட்டு யானையொன்று ரயிலில் மோதுண்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணிக்குப் புனாணைப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. புனாணை கிழக்குப் பகுதியில் இருந்து மறுபக்கத்துக்குச் செல்வதற்காக யானை ரயில் பாதையைக் கடப்பதற்கு முயற்சித்த வேளை கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த இரவு நேர ரயிலில் மோதுண்டதால் அது காயமுற்று உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் கூறினார். (ச-10)

## விபத்தில் இருவர் காயம்

மட்டக்களப்பு,மே 6

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலையில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோ ஒன்று முன்னால்சென்ற டிராக்டரை முந்திச்செல்லமுற்பட்ட போது கொக்கட்டிச்சோலை பிரதான வீதியில் உள்ள வரவேற்பு பீடத்தில் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தச் சம்பவத்தில் படுகாயம் அடைந்த இருவரும் மகிழடித்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-10)

# சமஷ்டி முறையிலான ஆட்சி தமிழ் மக்களுக்கு வேண்டும்

### அதற்காகவே கூட்டமைப்பு போராடுகிறது என்கிறார் மாகாணசபை உறுப்பினர்

மட்டக்களப்பு,மே 6

நாட்டில் பெரும்பான்மை இனத்தைப்போன்றுசமமான அதிகாரத்துடன் வாழக்கூடிய சமஷ்டி முறையிலான ஆட்சிமுறையே எமக்கு வேண்டும். அதற்காகவே மக்கள் எமக்கு வாக்களித்தனர். அதற்காகவே நாம் போராடுகிறோம் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா. நடராசா தெரிவித்தார்.

தந்தை செல்வா நினைவு தினம் களுவாஞ்சிக்குடி, இராசமாணிக்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீள் கட்டுமானம், மீள்குடியேற்றம் என்ற போர்வையில் வெளிநாட்டு நிதியைக் கொண்டு ஒரு சிலருக்கு நிவாரணங்களை வழங்கி அவர்கள் சொந்த இடங்களில் நிம்மதியாக இருக்கின்றார்கள் என்று சர்வதேசத்துக்கு பூச்சாண்டி காட்டி வருகிறது அரசு.

அபிவிருத்திக்காக எமது மக்கள் எங்களுக்கு வாக்களிக்கவில்லை. உரிமைகளை நிலைநாட்டவே அவர்கள் வாக்களித்துள்ளனர். அவற்றைப் பெற்றுக்கொள்ளவே வருகின்றோம்.

எமது மக்கள் இந்த நாட்டில் பெரும்பான்மை இனத்தைப் போன்று சமமான அதிகாரத்துடன் வாழக்கூடிய சமஷ்டி முறையிலான ஆட்சிமுறையே எமக்கு வழங்கப்படவேண்டும். அதனையே மக்கள் கேட்கின்றனர்.

எமது தமிழினத்தின் பிரச்சினையைப்போரைக் காரணம் காட்டி அரசு பயங்கரவாத பிரச்சினையாகச் சித்தரித்து பொய் பரப்புரை செய்து சர்வதேசத்திடம் பல உதவிளைப் பெற்று வருகிறது. இதனை நம்பி சர்வதேசம் உதவிபுரிந்தமை கவலைக்குரிய விடயம்.



மாகாணசபை உறுப்பினர் நடராசா

தற்போதைய சூழ்நிலையில் எமது மக்களின் உரிமைகள் இலங்கை அரசால் பறிக்கப்பட்டாலும் இன்று தமிழர் தொடர்பான பிரச்சினை பயங்கரவாத பிரச்சினையல்ல உரிமை தொடர்பான பிரச்சினை என்று சர்வதேசம் நன்கு உணர்ந்துள்ளது.

தமிழருக்குரிய தீர்வைப் பெற்றுத் தருவதற்கு இன்று சர்வதேசம் முன்வந்துள்ளது. தற்பொழுது ஐக்கிய நாடுகள் சபையில், இலங்கை அரசு புரிந்துள்ள போர்க் குற்றங்கள் தொடர்பாகச் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் இந்த அரசு அவ்வாறு ஒன்றும் நடக்கவில்லை என பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்வதனூடாகத் தப்பிக் கொள்ள முடியுமென தப்புக் கணக்குப் போடுகின்றது. எது எவ்வாறாக இருந்தாலும் சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முடியாது- என்றார். (ச)



தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவின் நினைவு தினம் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தந்தை செல்வாவின் உருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்தார். (ச)

## யானைத் தாக்குதலால் அச்சத்துடன் வாழ்க்கை

### பாவற்கொடிச்சேனை மக்கள் கவலை

மட்டக்களப்பு,மே 6

மட்டக்களப்பு. மண்முனை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாவற்கொடிச்சேனை கிராமத்தில் காட்டு யானைகள் புகுந்து பல வீடுகளையும் மக்களின் உடைமைகளையும் சேதமாக்கியுள்ளன.

கடந்த சில வருடங்களாக மாவட்டத்தின் பல எல்லைப்புற கிராமங்களில் இவ்வாறாகக் காட்டு யானைகளின் தாக்கம் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றது. அதனால் மக்கள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். காட்டு யானைகளின் தாக்குதலால் தினமும் உயிர் அச்சுறுத் தலுக்கு மத்தியில் நாம் வாழ்ந்து வருகின்றோம் என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.



யானை தாக்குதலால் பாதிப்புக்கு உள்ளான இடங்களை கூட்டமைப்பு உறுப்பினர்கள் பார்வையிட்டபோது..........

யானைத் தாக்குதலைத் தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வாறு யானைகளின் தாக்குதலால் பாதிப்புக்குள்ளான மக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான கி.துரைராஜசிங்கம், பிரசன்னா இந்திரகுமார் ஆகியோர் நேரில் சென்று சந்தித்துள்ளனர். (ச)


## 87 ஆவது அகவை நினைவும் 5 ஆவது அமரத்துவ அஞ்சலியும்



அமரர் கந்தையா
கனகசபாபதி

தோற்றம்
06★05★1927
மறைவு
01★05★2009

திதி: பூர்வபக்க ஸப்தமி [06.05.2014]

ஆயிரம் ஆயிரம் உறவுகள்
இருந்தாலென்ன
அப்பா அவை உங்களுக்கு
இணையாகுமா
ஆலமரமாய் நின்றெம்மை
அரவணைத்தீர்
அகவை எண்பத்தேழில் நினைவுகளைச் சுமந்து
அஞ்சலிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய். (47572)(3.6.4)

என்றும் உங்கள்
நினைவுடன்
குடும்பத்தினர்.



## ஆறாவது சிரார்த்த தினம்

வைத்திய கலாநிதி
லயன் செல்வி
நவமலர் கனகரத்தினம்



தோற்றம்
26 . 11 . 1935

மறைவு
11 . 05 . 2008

இன்று (06.05.2014) செவ்வாய்க்கிழமை காலை
யாழ்.போதனா வைத்தியசாலை
முன்னாள் பணிப்பாளரும், லயன்ஸ் கழகங்களின்
பிராந்திய தலைவருமான வைத்திய கலாநிதி
செல்வி நவமலர் கனகரத்தினம் அவர்களின் சிரார்த்த
தினத்தை முன்னிட்டு நடைபெறவுள்ள நிகழ்வுகள்:
யாழ் போதனா வைத்தியசாலை.
தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைகளில்
தங்கி சிகிச்சை பெறும் புற்றுநோயாளர்களுக்கான
சத்துணவு வழங்கல் நடைபெறும்.

லயன்/லயன் சீமாட்டி
வற்சலன்
"நவ இல்லம்" சுதுமலை மேற்கு, மானிப்பாய்.

(47589)(7.6)



## நினைவலைகள்

2 ஆம் ஆண்டு



மலர்வு
12★12★1937
உதிர்வு
06★05★2012

அமரர் அருளப்பு பினியன்
அரியநாயகம்

40 ஆம் ஆண்டு



மலர்வு
24★01★1909
உதிர்வு
06★05★1974

அமரர் ஜோசப்
அருளப்பு

"சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"

54/3, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

(47647)(6.4)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# உலக இளைஞர் மாநாடு இன்று ஆரம்பம்

## இளைஞர் நகராக அம்பாந்தோட்டை பிரகடனம்

கொழும்பு,மே 6
உலக இளைஞர் மாநாட்டு ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை 11 மணிக்கு அம்பாந்தோட்டை, மாகம்றுகுணு புர சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

உலக இளைஞர் மாநாட்டில் 168 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்று இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இந்த மாநாடு இடம்பெற்று முடிவடைந்த பின்னரும் மாநாட்டில் வெளியிடப்படவுள்ள கொழும்பு பிரகடனத்தின் விடயங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளதாக அவர் கூறினார்.



மாநாட்டை ஒட்டி புதுப்பொலிவுடன் காணப்படும் அம்பாந்தோட்டை நகரம்.

வரலாற்றில் முதல் தடவையாக அம்பாந்தோட்டை நகரம் இளைஞர் நகரமாக ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட உள்ளது.

இலங்கையின் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட இந்த நகரில், இரண்டாவது சர்வதேச மாநாடு நடைபெறுவதன் ஊடாக அது இந்த நக ருக்கு மேலும் பெருமை சேர்ப்பதாய் அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# பிக்குகள் ஆலோசனை எமக்கு மிக அவசியம்

### இப்படிக் கூறுகிறார் கோத்தபாய

கொழும்பு,மே 6
பௌத்த பிக்குகளின் ஆலோசனை, வழிகாட்டல்கள் எமக்கு மிகவும்அவசியமானவைஎன்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மருதானை, ராஜசேகரராமயவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின்ஐக்கியத்தைப் பாதுகாக்க பௌத்த பிக்குகளின் ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றோம். 30 ஆண்டுகளாக நீடித்த போரை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்த பிக்குகள் ஒத்துழைப்பு வழங்கினர்.

இன்றும் முல்லைத்தீவு, வவுனியா, அம்பாறை மற்றும் திருகோணமலை போன்ற மாவட்டங்களின் சில கிராமங்களை பௌத்த பிக்குகளே பாதுகாத்து வருகின்றனர்.

நாட்டில் விகாரைகள் இருந்திருக்காவிட்டால் பௌத்த உரிமைகளைப் பாதுகாத்திருக்க முடியாது. பௌத்த மத உரிமைகளை உறுதி செய்ய பிக்குமார் வழங்கி வரும் ஆதரவு அளப்பரியது-என்றார்.(ச)

# இடம்பெயர்ந்தோர் பட்டியலில் பல குடும்பங்கள் இணைப்பு

### மீளமைப்பு செய்யவுள்ளது அரசு

கொழும்பு,மே 6
உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் பட்டியலை, இலங்கை அரசு மீளமைப்பு செய்யவுள்ளது.

இதன்படி நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நிலையில் உள்ள 400 குடும்பங்கள் குறித்த பட்டியலில் மேலதிகமாகச் சேர்க்கப்படவுள்ளன.

> 14 ஆயிரம் பேர் உள்நாட்டில் இடம்பெயர்ந்த பட்டியலில் இணைக்கப்படவுள்ளனர்

தற்போதைய பட்டியலின்படி 7,094 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் மொத்தமாக 23ஆயிரத்து 568 பேர் உள்ளடங்கியுள்ளனர்.

இவர்கள் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள நலன்புரி நிலையங்களிலும், மூதூரிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் 14 ஆயிரம் பேர் உள்நாட்டில் இடம்பெயர்ந்த பட்டியலில் இணைக்கப்படவுள்ளனர் என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# முதலைப் பல்லிகளுடன் மூன்று பேர் சிக்கினர்

கொழும்பு,மே 6
மூன்று முதலைப் பல்லிகளைக் கடத்திச் சென்ற மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் மாத்தறை, தெனியாய பிரதேசத்தில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் அண்மைக்காலமாக இலங்கைக்கே உரித்தான அரிய வகை பல்லி இனமான முதலைப் பல்லிகள் சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ஒரு முதலைப் பல்லி சுமார் 15 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்று கூறப்படுகிறது. (ச)

# மத்தள அறிக்கை நாளை கையளிப்பு

கொழும்பு,மே 6
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று அம்பாந்தோட்டை மத்தள விமான நிலையம் மற்றும் துறைமுகத்துக்குச் சென்று மேற்கொண்ட ஆய்வு குறித்த அறிக்கை நாளை புதன்கிழமை வெளியிடப்படவுள்ளது.

இந்த அறிக்கை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபையின் தலைவர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்படவுள்ளது.

கடந்ததிங்கட்கிழமை இந்த அறிக்கை வழங்கப்படவிருந்த போதிலும், சில காரணங்களினால் அது தாமதமானது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அறிக்கையில் காணப்பட்ட சில குறைபாடுகள் காரணமாக அதனை குறித்த தினத்தில் கையளிக்க முடியாது போய் விட்டதாக அவர் குறிப்பிட்டார்.

நாளை புதன்கிழமை, கட்சியின் தலைமைத்துவச் சபையிடம் வழங்கப்படும்அறிக்கை பின்னர் ஊடகங்களுக்கும் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அறிக்கை கையளிக்கப்பட்ட பின்னர், அது தொடர்பில் பதிலளிக்க அரசுக்கு ஒருவார காலம் அவகாசம் வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# வியாபாரியிடம் கொள்ளை

மீன் வியாபாரி ஒருவரிடமிருந்து 4 லட்சத்து 50ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்ட குழுவொன்று தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை மொரட்டுவையிலிருந்து பேலியகொட நோக்கி பயணித்த, மீன்களை ஏற்றிச் சென்றலொறியொன்று வெள்ளவத்தைப் பிரதேசத்தில் இனந்தெரியாத நபர்களினால் வழிமறித்து சோதனையிடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அடங்கிய இளைஞர் குழுவினால் இந்த மீன் லொறி சோதனையிடப்பட்டுள்ளது. அதன்போது லொறியில் இருந்த மீன் வியாபாரியின் பணத்தை அவர்கள் கொள்ளையிட்டுத்தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# தொலைபேசியைத் திருடிய கொன்ஸ்டபிள் மாட்டினார்

தொழும்பு,மே 6
கையடக்கத் தொலைபேசி ஒன்றைத் திருடிய பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கொன்ஸ்டபிள் நவகமுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் என்று தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் நுகேகொடையில் உள்ள அழகு சிகிச்சை நிலையமொன்றில் பணிபுரியும் பெண் ஒருவரது 15,000 ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசியைத் திருடியுள்ளார்.

இந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் நுகேகொடை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ச)

வடகோவை இலுப்பையடிப் பிள்ளையார் துணை

11 ஆவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

தவப்பேறு 21 - 12 - 1918



சிவப்பேறு 08 - 05 - 2003

அமரர் கந்தையா ஆறுமுகம்
(முன்னாள் ஆசிரியர்)
கோப்பாய்,இணுவில்
திதி: 06.05.2014

எங்களை வாழ வைத்த தந்தையே எப்பிறப்பில் சந்திப்போம்.....
உங்கள் ஆசி வேண்டி
உங்கள் திருவடியைப் பிரார்த்திக்கின்றோம்.

246/4 A, கோயில் வீதி.
நல்லூர்.
021 222 7225

திருமதி சரஸ்வதி ஆறுமுகம்
(மனைவி- இளைப்பாறிய ஆசிரியர்)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(47649)(5)

மரண அறிவித்தல்

செபஸ்ரியாம்பிள்ளை அன்ரனி பெர்னான்டோ



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை அன்ரனி பெர்னான்டோ 04.05.2014 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை-எலிசபெத் தம்பதியரின் மகனும்,நீற்றா குனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வர்களான நீக்கிலாப்பிள்ளை, பொலின், மேரிஸ்ரெலா மற்றும் சந்தியாப்பிள்ளை, இம்மனுவேல் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மைக்கல் ஜொய்சிங், செல்வி கெலன், மேரிகலிஸ்ரா, ஜெனிற்ரா, ஜெபபாலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தி, சத்தியசீலன்,ரெறோன்பீற்றர், இன்பநாயகம் (ரவின்சன்), அமலதர்சினி ஆகியோரின் மாமனாரும், மைக்கல் அஞ்சலோ, நாடியா, அன்ரன் சஜீவன், மக்சிமஸ், யூட்மெருஷன், செரின் கிறிஸ்ரினா, போல் செரின்ரன்,றொய்ஸ்ரன், ஜொய்ஸ்ரன், றொபின்சனா, சஹானா, மேரிகிறிஸ்ரினா, மேரி செலஸ்ரினா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.05.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்ட பின் பூதவுடல் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36/5, கோயில் ஒழுங்கை,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
021 222 5806
077 440 5713

தகவல்:
குடும்பத்தினர்.

(47651)(5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்கள் இறந்துகொண்டே இருக்க விட்டுவிடாதீர்கள்

மழைவிட்டும் தூவானம் போகவில்லை என்பதைப் போன்று, போர் முடிந்துவிட்டாலும் வடக்கில் அவலச் சாவுகளுக்கு ஒரு முடிவு வரவில்லை. விபத்துக்களால் ஏற்படும் இறப்புகள், தற்கொலைகளால் மறைந்துபோகும் உயிர்கள், இவை போக, கொலைகளும் தாராளமாக நடக்கின்றன.

போரில் இருந்து மீண்டெழ முயலும் சமூகத்திற்குள் கறையான் புற்றாக இப்படி அரித்துக் கொண்டே இருக்கும் சாவுகள், விரைவில் தமிழ் இனத்தை அடுத்தவர் அழிக்க வேண்டிய தேவையை இல்லாமற் செய்துவிடும் போல் இருக்கிறது.

வன்முறை நிறைந்த ஒரு போரைக் கடந்து வந்த சமூகத்திற்கு உடனடியாகக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டிய உள வளத்துணை வழங்கப்படாது விட்டதன் எதிரொலியா இது என்பதை மனநலத் துறையினர் ஆராய்ந்து அறிக்கையிட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். ஆனால், போருடன் எதையாவது தொடர்புபடுத்திவிட்டால் அரச இயந்திரத்தாலும் படையினராலும் தமக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் காரணமாகவும் இயல்பாகவே இவற்றிலிருந்து ஒதுங்கிப்போய்விடும் சுபாவம் காரணமாகவும் வடக்கின் மனநல மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்கள் பகிரங்கமாக இதுவரையில் எந்த ஆய்வு அறிக்கைகளையும் வெளியிட்டதில்லை.

அதற்காக அவர்கள் அப்படிப்பட்ட ஆய்வுகளையே செய்பவர்களில்லை என்று சொல்ல வருவது எமது நோக்கமல்ல. ஆனால், அந்த ஆய்வு அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்பட்டு, மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு எடுக்கப்பட்டிருக்கவேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமலேயே போய்விட்டன என்பதுதான் கவலைக்குரியது.

போரின் பின்னர் வடக்கை மீளக்கட்டியெழுப்புதல் என்ற கோட்பாட்டில் செயற்பட்ட இலங்கை அரசுக்கு உட்கட்டுமானங்களின் எழுச்சி மட்டுமே தேவையாக இருந்தது. வெளிஉலகுக்குக் காட்ட வசதியாக அதில் மட்டுமே கொழும்பு அரசு கவனம் செலுத்தியது. அதனால் உளசமூக ஆற்றுப்படுத்தல் மற்றும் மனநல மருத்துவ அணுகுமுறைகளுக்கு நிதி உதவிகள் நிறுத்தப்பட்டன. கடந்த 5 வருடங்களாக இந்த நிலைமை தொடர்கிறது. இதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய பக்கவிளைவுகள் அடையாளப்படுத்தப்படவில்லை. அத்தகைய ஒரு நிலை ஏற்படுமாக இருந்தால் அதனைக் கையாள்வதற்கான வழிவகைகள் ஆராய்ந்து தெரியப்படுத்தப்படவில்லை.

இப்போது அச்சுவேலி, கதிரிப்பாயில் நடந்துள்ள முக்கொலை ஏற்படுத்தியுள்ள அதிர்ச்சி இந்த விடயங்கள் குறித்து அவசரமாகக் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியிருக்கிறது. போரால் ஏற்பட்ட உளப்பாதிப்புத்தான் இந்தக் கொலைகளுக்கான காரணம் என்று நிறுவுவது எமது நோக்கமல்ல. ஆனால், ஒரு குடும்பத் தகராறுக்கும் வன்முறையை ஆயுதமாக்கிக் கொலைகளைச் சாதாரணமாக நிகழ்த்த முடியும் என்று ஒரு மனிதன் முடிவெடுப்பதற்குப் பின்னாலுள்ளவற்றை ஆராய்வது அவசியமாகிறது.

மனநல மருத்துவம் இதற்கு, அந்த மனிதனின் பால்ய காலத்தைக்கூட ஆய்வு செய்வதையும் குடும்பப் பின்னணி, வளர்ந்த சமூகப் பின்னணி என்பவற்றை ஆராய்வதையும் வழக்கமாகக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில், எடுத்ததற்கெல்லாம் வன்முறையை நாடும் நம்மவர்களின் குணத்தின் பின்னாலுள்ள பின்னணிகள் ஆராயப்பட வேண்டும். போரும் போருக்குப் பின்னரான சூழலும் அதில் ஏற்படுத்தக்கூடிய கணிசமான தாக்கம் குறித்தும் ஆராயப்படவேண்டும்.

ஏனெனில் கடந்த 5 வருடங்களில் நடந்த முதல் கொலையல்ல கதிரிப்பாய் முக்கொலை. இதற்கு முன்னரும் இப்படிப் பல கூட்டுக் கொலைகள் நிகழ்ந்துள்ளன. தந்தையே மகனை வெட்டிக் கொன்றமையைக் கடந்த காலங்களில் கண்டிருக்கிறோம். வீதியில் காதலனுடன் நின்ற பெண்ணை மூவர் கடத்தி பாலியல் வன்புணர்வு செய்தமையும் இந்த மண்ணிலேயே நடந்தேறியது.

இவை எல்லாம் வெறும் தனிமனித ஒழுக்கப் பிறழ்வுகள் என்று ஒதுக்கிவிட்டு நகர்ந்துவிடுவது நாகரிகமுள்ள ஒரு மனித சமூகத்திற்கு ஏற்புடையதன்று. இவற்றுக்கான காரணங்கள் ஆராயப்படவேண்டும். இது பற்றிய விவாதங்கள் நடத்தப்பட வேண்டும். அதனை மாகாண அரசாவது ஊக்குவித்துச் செயற்படுத்த வேண்டும்.

மேலும் மேலும் தமிழர்களை இறந்து கொண்டே இருக்க விட்டு விடாதீர்கள். அவர்களைக் காப்பாற்ற வழிகாணுங்கள்.

# நவிப்பிள்ளை ஓய்வு பெறுவதற்கு முன் விசாரணைப் பொறிமுறை உருவாகிவிடும்

## வெகு தீவிரமாக இருக்கிறார் அவர்

சண்டேரைம்ஸ், கட்டுரையிலிருந்து
கோகுலன்

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 16 அமைப்புகளையும், அவைகளின் 424 உறுப்பினர்களையும் தடைசெய்து இலங்கை அரசு விடுத்திருந்த உத்தரவை புறக்கணித்துள்ள இரண்டாவது நாடாக அமெரிக்கா இருக்கின்றது. இலங்கையால் தடை செய்யப்பட்டுள்ளவர்களில் சில பேர் கடந்த வாரம் வியாழக்கிழமை வோஷிங்டனில் ராஜாங்க அமைச்சு திணைக்களத்தில் காணப்பட்டார்கள். தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி செயலாளர் நிஷா பிஸ்வால் அம்மையாரை சந்திக்க வந்திருந்த பிரதிநிதிகளில் அவர்களும் காணப்பட்டார்கள். இதை அமெரிக்க தமிழ் அரசியல் செயற்பாட்டுச் சபை ஏற்பாடு செய்திருந்தது. வெளிப்படைத் தன்மை மற்றும் தகவல் பரிமாற்றத்துக்கான சதம் ஹவுஸ் விதிகள் இதற்காக செயற்படுத்தப்பட்டிருந்தன.

தமிழ் புலம்பெயர் குழுக்களின் பிரதிநிதிகள், இலங்கைத் தலைவர்கள் மீது "குறிவைத்த தடைகள்" செயற்படுத்தப்பட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். கிரிமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டதையடுத்து ரஷ்யத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டு தடைகளுக் குள்ளாக்கப்பட்டிருப்பது போல், இதுவும் இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பியிருந்தார்கள். இந்தியாவில் நடைபெற்றுள்ள தேர்தலின் முடிவுகள் இலங்கை மீது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துவதாய் இருக்கும் என்றும் அவர்கள் அறிந்து கொள்ள விரும்பினார்கள். காத்திருந்து பார்க்கும்படியாக அவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது. அண்மையில் இலங்கைக்கு தாம் மேற்கொண்டிருந்த பயணம் தொடர்பாக இடம்பெயர்ந்தவர்கள் குழுக்களின் 15 பேர் அடங்கிய ஒரு குழுவுக்கு பிஸ்வால் குறுகிய விளக்கம் ஒன்றை அளித்ததாகவும் தெரிகின்றது. அமெரிக்க முன் முயற்சிகள் விடயத்தில் இலங்கை அரசு முன்னேற்றம் எதுவும் காட்டவில்லை என்று பிஸ்வால் அதிருப்தி வெளியிட்டதாகத் தெரிகின்றது. உலகமும் அமெரிக்காவும் விரும்பிய விடயங்களுக்கு மாறாக எல்லாமே நடைபெற்று வருகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் புலம்பெயர் குழுக்களுடன் உதவிச் செயலாளர் பிஸ்வால் சந்தித்திருப்பதானது இலங்கையின் தடைவிதிப்பினை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதாய் உள்ளது. இதற்குக் காரணம் உண்மையிலேயே பயங்கரவாதம் தலைதூக்குவதற்கான செயற்பாடுகள் காணப்படுவதற்கான ஆதாரங்களை இலங்கை அரசு அமெரிக்காவுக்கு வழங்காமல் இருப்பதாகவிருக்கலாம். இலங்கை அரசு தான் அப்படியான ஒரு நிலைமை இருக்கிறது என்பதற்கான ஆதாரங்களை வழங்கவேண்டும் என்று பிரிட்டன் வெளியுறவுச் செயலக அதிகாரிகள் கடந்த வாரம் கூறியிருந்தார்கள். இம்மாதிரி தடைகள் சுதந்திரமாக உரை நிகழ்த்துவது மற்றும் நியாயபூர்வமான விமர்சனங்கள் செய்வது போன்றவற்றைத் தடுக்கக் கூடாது என்று அவர்கள் தெரிவித்தார்கள். இருந்தாலும் அந்த உத்தரவில் காணப்படும் தகவலின்படி இந்தியா நடந்து கொண்டிருப்பது தெரிய வந்துள்ளது. தடைசெய்யப் பட்டுள்ள 242 பேரில் ஒருவர் சுகவீனமுற்ற தனது தாயாரை பிரிட்டனிலிருந்து இந்தியா வுக்கு கொண்டுவந்த போது அவர் கடந்த வாரம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். இதேபோல் ஈரானில் தெஹ்ரானுக்குப் பயணம் மேற்கொண்ட ஒருவரும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.



ஈஸ்டருக்குப் பிறகு ஜெனிவாவுக்கு திரும்பியுள்ள நவிப்பிள்ளையும் ஏனைய அலுவலர்களும் இலங்கை யில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கான பொறி அமைப்பை நிறுவுவதற்கான முயற்சிகளில் இறங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

மே மாத இறுதி வாக்கில் அப்படியான பொறி அமைப்பு ஒன்று பற்றிய அறிவித்தல் வெளிவரலாம் என்று ஜெனிவாவிலுள்ள ராஜதந்திரிகள் கூறுகிறார்கள். தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருந்த நாடுகள், பொறிமுறைக்கான செயற்பாடுகள் தாமதமடைவது குறித்து கவலை கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் நவிப்பிள்ளை, தாம் விடுமுறையில் செல்வதற்கு முன்னரே விசாரணைப் பொறிமுறை நிறுவப்பட்டு செயற்பட ஆரம்பிக்க வேண்டும் என்பதை விரும்புவதாக அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறார் என்று சொல்லப்படுகின்றது. ஓய்வு பெறுவதற்கு முன்னர் ஜூலை வாக்கில் அவர் விடுமுறையில் செல்லக் கூடும் என்று தெரிகின்றது. தற்போது மனித உரிமை ஆணை யத்தின் அலுவலர்களுடன் அவர் கலந்து பேசி வருகின்றார். இதில் இரண்டு நோக்கங்களை அவர் கொண்டிருப்ப தாகத் தெரிவித்துள்ளார். ஒன்று பொறிமுறை செயற்பாட்டில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும். இரண்டாவது இலங்கை அரசை ஒத்துழைக்கும்படி செய்தாக வேண்டும் என்பதாகும். ஆனால் மனித உரிமை பேரவையின் செயற்பாட்டினை அரசு அங்கீகரிக்காத நிலையில் எந்தவித ஒத்துழைப்பும் வழங்கு வதில்லை என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி ராஜபக்ஷ உறுதியாக இருந்து வருகின்றார். இருந்த போதிலும் கடந்த வாரம் அரசின் முக்கிய பிரமுகர் ஒருவர் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டு அங்குள்ள செல்வாக்குள்ள பிரமுகர்களுடன் சந்திப்புகளை நடத்தியுள்ளார். அவர்களில் முன்னாள் பாதுகாப்புத் துறை சிரேஷ்ட அதிகாரி ஒருவரும் அடங்குகிறார். அதே சமயம் போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு உள்நாட்டு பொறி முறையொன்றை ஆரம்பிக்கும்படியாக அரசின் நட்பு வட்டாரங்கள் வலியுறுத்தி வருகின்றன. இந்த வட்டாரங்கள் ஐ.நா. மனித உரிமைகள் சபை தீர்மானத்தை இலகுவாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. அந்த அளவுக்கு அதன் மூலமான தாக்கங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இருந்தாலும் அரசில் இருக்கும் செல்வாக்குள்ள ஒரு பகுதியினர் உள்நாட்டு பொறிமுறை விசாரணை நடத் தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகத் தெரிய வந்துள்ளது. இவ்வாறு முன்கூட் டியே அரசு செயற்படாமை குறித்து கேள்வி எழுப்பப்படலாம் என்று ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதுமட்டுமன்றி இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ விசா ரணைகள் மீதும் அது பெரும் சந்தேகங்களை எழுப்புவதாக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போர்க்குற்றச் சாட்டுகள் தொடர்பாக இராணுவ நீதிமன்றம் ஒன்று விசாரணைகளை நடத்தி முடித்துள்ளது என்பதே அரசின் இப்போதைய அதிகார பூர்வ நிலைப்பாடாக தெரிகின்றது. ஜெனிவாவிலுள்ள ஐ.நா. அதிகாரி ஒருவர் இது பற்றி கூறுகையில், வலுவான நம்பக உள்நாட்டு விசாரணையொன்றே சர்வதேச விசாரணைக்கு உதவுவதாக அமைய முடியும் என்று குறிப்பிட்டுள்ளார். ஐ.நா. தீர்மானத்தின் மூலம் எழுகின்ற சில விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நட்பு நாடொன்றின் உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. சர்வதேச விசாரணைகள் தொடர்பாக நவிப்பிள்ளை வெளியிடவிருக்கும் அறிவித்தலையடுத்தே அரசு இது குறித்து இறுதியான முடிவொன்றை எடுக்கும் என்று அரச வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்ட இரண்டுநாள் மாநாடு திருகோணமலை நகர மண்டபத்தில் நடந்தது. இலங்கை தமிழரசுக் கட்சி என்று இயங்குவதற்கு பதிலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிந்து கொள்வதற்கு முயற்சி எடுப்பதென்று மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. தமிழ் மக்கள் சார்பில் நான்கு அமைப்புகள் வெவ்வேறு விதமாகப் பேசுவதை விடுத்து ஒரே குரலில் எதிர்காலத்தில் கருத்து வெளியிடுவதற்கு இது வழிவகுக்கும் என்று கருதப்படுகின்றது.


மாநாட்டுக்கு வி.ஆனந்தசங்கரி அழைக்கப்படாமை குறித்து சாதகபாதகமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அவர் அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சிலரும் அவருடைய கட்சியில் எவரும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இல்லையென்று வேறு சிலரும் வாதிட்டார்கள். மாநாட்டுக்கு தாம் அழைக்கப்படாமை குறித்து ஆனந்தசங்கரி கவலையடைந்திருப்பதாகத் தெரிகின்றது. ஆனந்தசங்கரி தேர்தல் ஆணை யாளருக்கு எழுதியுள்ள கடிதம் குறித்தும் மாநாட்டில் விவாதிக்கப்பட்டதாகத் தெரி கின்றது.

தென்சூடானில் ஏற்பட்டிருக்கும் நிலைமையால் தென்னாபிரிக்க அமைதி முயற்சியில் கால தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் வரை ஜனாதிபதி ராஜபக்ஷ தமது கவலைகளை ஒதுக்கி வைத் திருப்பதாக தெரிகின்றது. தென்னாபிரிக்க முன் முயற்சிகளும் ஏககாலத்தில் முன்னெடுக்கப்படலாம். அதிலிருந்தும் கூட காலப் போக்கில் சிக்கல்கள் தோன்றக்கூடும் என்று கருதப்படுகின்றது. இருந்தாலும் மனித உரிமை பேரவை தீர்மானத்தின் பிரதான விடயம் ஒன்று செயற்படுத்தப்படுகின்றது என்பதை வெளிக்காட்ட இது உதவியாக இருக்கும் என்பது ராஜபக்ஷவுக்கு ஆறுதல் அளிக்கும் விடயமாக இருக்கலாம்.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் செயற்பாடு குளறுபடியான நிலையிலேயே இருந்து வருகின்றது. அது இலகுவான காரியமாக இருக்கப் போவதுமில்லை. இது தொடர்பாக சில நட்பு நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் உதவி புரியவும் முன்வந்துள்ளன.

நடவடிக்கை எதுவும் எடுக்காமலே அல்லது சிறு முயற்சியை மட்டும் எடுத்துவிட்டு காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பது அரசுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே சேதங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளும் இனி வரை யறைக்குட்பட்டதாகவே இருக்கப் போகின்றது என்று சொல்லத் தேவையில்லை.

# குற்றம் புரிந்தவனுக்கே திருமணம் செய்து வைப்பதா? பாலியல் வல்லுறவைக் குறைப்பதற்கு இதுதான் வழியா?



## பெண்கள் அமைப்புக்கள் கடும் சீற்றம்



சரோஜா சிவசந்திரன்

குற்றம் புரிந்தவனுக்கே பாதிக்கப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்ற மகளிர் விவகாரத் துக்குப் பொறுப்பான அமைச்சரின் சர்ச்சைக் குரிய கருத்து மகளிர் அமைப்புகளைச் சீற்றமுறச் செய்துள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட அபிவிருத்தி நிலையத்தின் அமைப்பாளரான திருமதி சரோஜா சிவசந்திரன் கருத்துத் தெரிவிக்கை யில்,

அதிகரித்துவரும் பாலியல் வல்லுறவைக் குறைப்பதற்கு, குற்றம் புரிந்தவனுக்கே அப்பெண்ணை திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று ஒரு புதிய ஆலோச னையை முன்வைத்துள்ளார் மகளிர் விவகாரத்துக்கு பொறுப்பான அமைச்சர். பெண்களுக்கு எதிரான வன்முறை ஒரு தண்டனைக்குரிய குற்றம்.

பெண்களின் உரிமையை பாதிக்கும், சமத்துவத்தைச் சீர்குலைக்கும் இவ்வுரிமை மீறலுக்கு எதிராக பெண்கள் குரல் கொடுத்து வரும் இந்தக் காலகட்டத்தில், இவ்வாறான ஒரு சட்டம் எவ்வாறு சமூகத்துக்குப் பொருத்தப்பாடாக அமையும்? குற்றம் புரிந்தவர் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ள இந்தச் சட்டம் ஆலோசனை வழி வகுப்பதாகவே உள்ளது.

பாலியல் வல்லுறவு என்பது தண்டனைச் சட்டக் கோவையில் தண்டிக்கப்பட வேண் டிய குற்றமாக காட்டப்பட்டிருக்கும் அதே வேளை, 2005 இல் ஏற்படுத்தப்பட்ட வீட்டு வன்முறைச் சட்டமானது வன்முறை புரிபவர்களுக்கு உரிய தண் டனைகளையும் எடுத்துக் காட்டுகின்றது. அப்படியா யின் பாலியல் குற்றம் புரிந்த ஒருவர் அந்தப் பெண்ணை மணம் முடிக்கும் பட்சத்தில் இந்தச் சட்டங்களில் வழங் கப்பட்டுள்ள தண்டனைகள் யாவும் செல்லுபடியற்றதாகி விடுமா? இந்தச் சட்டங்களி னால் பயனேதும் உண்டா என்ற கேள்வி எழுவது நியா யமானதே.

பாலியல் வல்லுறவு என்பதே ஒரு பெண்ணின் சம்மதத் தோடு என்றும் நடைபெறு வதில்லை. வல்லுறவைப் புரியும் ஓர் ஆண் ஏற் கெனவே திருமணமான வராயின் அவர் மீண்டும் அந்தப் பெண்ணை மணம் முடிக்க முடியுமா? பல பெண்களை பாலியல் வல் லுறவுக்குட்படுத்தும் ஓர் ஆண் யாரை மணம் முடிப் பது? ஒரு பெண் பல ஆண்கள் குழுவினரால் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும்போது இந்த ஆலோசனைக்கு உட்படுத்தப்படுவார்களா?

ஒரு பெண் சமூகத்தில் இன்று எவ்வா றெல்லாம் பாரபட்சப்படுத்தப்படுகின்றாள். அவளது சமத்துவம், சுயகௌரவம் எவ்வாறு சமூகத்தில் நிலைநாட்டப்படுகின்றது. சமூக, பொருளாதார வளர்ச்சியில் முன்னோடிகளாக விளங்கும் பெண்களின் சுய கௌரவம், பாதுகாப்பு என்பது மேலும் ஒருபடி கீழே செல்ல வேண்டும் என பொறுப்புக் கூற வேண்டியவர்களே செயற்படுவது எவ்வகை யில் பொருத்தமாகும்.

பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள், குறிப்பாக 2012 இல் 2150 ஆக உயர்ந்துள்ளமை எமது சட்டத்தின் திறனற்ற செயற்பாட்டையே எடுத்துக்காட்டுகின்றது. சட்டத்தின் செயற் பாட்டை உறுதிப்படுத்தி, நீதிமன்றில் விசார ணைக்காக பதிவு செய்யப்படும் பாலியல் சம்பந்தமான வழக்குகள் துரிதமாக விசாரிக் கப்பட்டு உரியவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படுவதில், அமைச்சு அக்கறை காட்டுவதில் தவறியுள்ளது இங்கு தெளிவா கின்றது.

இலங்கை ஜனநாயக நாடு. இங்கு பெண்களின் சமத்துவம் பாலியல் ரீதியில் பாரபட்சப் படுத்துவதற்கு அரசமைப்பில் இடமே இல்லை. அத்துடன் பெண்களின் சகலவித மான பாரபட்சங்களையும் ஒழித்தல் தொடர் பான மரபொழுங்கில் இலங்கைப் பெண்கள் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் 1981 இல் உறுதி அளித்துள்ளது. மனித உரிமைகள் மரபொழுங்கில் தேசிய மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என்பதில் இலங்கை தனது கடப்பாட்டை வெளிக்காட்டி யுள்ளது. இவை எல்லாவற்றையும் புறம் தள்ளி, இதுவரை காலமும் பெண்கள் அயராது போராடி பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்காக எடுக்கப்பட் டுவரும் முயற்சிகளுக்கு விழுந்த ஓர் அடியாகவே இவ்வாலோசனை இருக்க முடியும். ஆகவே சமூகத்தில் எம்மோடு தோளோடு தோளாக அயராது சகல போராட்டங்களிலும் பங்கு கொண்டு பெண்கள் உயர்ச்சிக்காக பாடுபட்டுவரும் பெண்களே! இது நீங்கள் குரல்கொடுக்க வேண்டிய தருணம். உங்கள் கருத்துக் களை ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத் துங்கள். உங்கள் ஆழமான கருத்துக்கள், மாற்றத்தின் படிகளாக அமையட்டும் என்றார்.

> பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் குறிப்பாக 2012 இல் 2150 ஆக உயர்ந்துள்ளமை எமது சட்டத்தின் திறனற்ற செயற்பாட்டையே எடுத்துக்காட்டுகின்றது. சட்டத்தின் செயற்பாட்டை உறுதிப்படுத்தி, நீதிமன்றில் விசார ணைக்காக பதிவு செய்யப்படும் பாலியல் சம்பந்தமான வழக்குகள் துரிதமாக விசாரிக்கப்பட்டு உரியவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படு வதில், அமைச்சு அக்கறை காட்டுவதில் தவறியுள்ளது இங்கு தெளிவாகின்றது.

## வருமுன் காப்போம்

வாசகர் திருமுகம்

கடந்த பல ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் ரயில் சேவை இடம்பெறப்போவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான். இதனால் வெளியிடங் களுக்கான பயணங்கள் இலகுவாக அமையும் என்பதில் ஐயமே இல்லை. ஆனால் இதிலும் பல பிரச்சினைகள் இருக்கத்தான் போகின்றன.

இங்குள்ள இள வயதினரில் பலர் ரயி லைக் காணாதவர்களாகக் காணப்படு கின்றனர். இதனால் புகையிரத சேவை யால் ஏற்படும் நன்மை தீமைகள் தொடர்பாக இவர்கள் அறிந்திருக்க வாய்ப்புக்கள் இல்லை. மேலும் இனி மேல் ரயில் சேவை இடம்பெறுமா என்ற சந்தேகத்தில் ரயில் பாதையை அண்டி யுள்ள பல இடங்கள் மக்களால் ஆக்கிர மிக்கப்பட்ட நிலையில் காணப்படு கின்றன.

நிரந்தர வீடுகள், ஆலயங்கள் என்பன இவற்றுள் உள்ளடங்கியுள்ளன. மேலும் ரயில் பாதை ஓரங்களில் ஏராளமான குடியிருப்புக்களும் தோன்றிவிட்டன.

ரயில் சேவை ஆரம்பிக்கப்படும்போது இங்கு வசிக்கும் மக்களுக்கு உடன டிப் பாதிப்புக்கள் ஏற்படுத்துவ தற்கான சாத்தியங்கள் அதிகம் காணப்படுகின் றன. பல ஆண்டுகளாக ரயில் சேவை இடம்பெறாததால் ரயிலினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் தொடர்பாக இங்கி ருப்பவர்கள் அறிந்து கொண்டிருக் கவில்லை. இதனால் ரயில் வரும் போது விபத்துக்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமுள்ளன. குறிப் பாக இள வயதினர் அதிகளவில் விபத் துக்களை எதிர்கொள்ள நேரிடும். எனவே ரயில் சேவை ஆரம்ப மாவ தற்கு முன்னரே வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது அவசிய மாகின்றது. அத்துடன் மக்களிடையே விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட வேண் டும். தவறின் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கவே முடியாது.

*க.ஜெயபாலன், கொக்குவில்.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** பல பிரச்சினைகள் ஒரே நேரத்தில் சிரமம் தந்தாலும் ஏற்றுக் கொண்டு முயற்சியால் வெற்றிகளை ஈட்டுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் ஒத்துப்போக வேண்டியதைக் காட்டுகிறது. சகோதர, சகோதரிகளுடன் உறவு சிறக்கும். உடன்பிறந்தவர்களுக்கு உயர் பதவி கிடைக்கும்.



**இடபம்:** மன உறுதி அதிகரிக்கும். பயணத்தில் ஆர்வம் அதிகரிக்கும். பாராட்டுகளும் விருதுகளும் கிடைக்கும். மத நம்பிக்கை அதிகரிக்கும். ஆன்மிக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பிள்ளைகளால் சந்தோஷம் அதிகரிக்கும்.



**மிதுனம்:** உத்தியோகம் சிறக்கும். உங்கள் தொழில் மூலம் பணவரவு அதிகரிக்கும். எதிரிகள் நண்பர்கள் ஆவார்கள். செம்பு, தங்க வியாபாரிகள் பெருத்த இலாபம் அடைவர்.



**கடகம்:** வெளிநாட்டு பயணங்களால் பணவரவு அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனத்தைச் செலுத்த வேண்டியது அவசியம். எதிலும் உணர்ச்சிவசப்பட வேண்டாம். கிடைக்கப்பெற்ற பணத்தை தவறான வழிகளில் முதலீடு செய்ய நேரும். ஆகவே மிகுந்த எச்சரிக்கை தேவை.



**சிங்கம்:** வாழ்நாள் முழுவதும் ஏற்படவிருக்கும் கஷ்டங்களை அறியாமல் தவறான முடிவுகளில் இறங்க வேண்டாம். புதைபொருள் ஆராய்ச்சியில் உள்ளவர்கள் அரிய முயற்சிகளில் வெற்றி பெறுவர். அரசுத் துறையில் பணி இடை நீக்கம் பெற்றவர்கள் மீட்சி பெறுவர்.



**கன்னி:** குடும்பத்தில் உங்களுக்கு பெரிய பொறுப்பு தேடி வரும். நாவன்மையால் உங்கள் வேலைகளைச் சாதித்துக் கொள்வீர்கள். எனினும் சிறிய அளவிலான குழப்பத்தைத் தரலாம். ஆன்மிக சொற்பொழிவுகள் செய்வோருக்கு உகந்த காலமாகும்.



**துலாம்:** உடன்பிறந்த ஒருவருக்கு உங்களால் யோகம் கிடைக்கும். உங்களால் உங்களுக்கு பெருமையும் செல்வமும் கிடைக்கும். வாகன வழிகளில் விரையம் ஏற்படலாம். முதலீடுகள் செய்யும் போதும் கவனத்துடன் செய்யவும்.



**விருச்சிகம்:** தந்தையாருடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எதிரிகளின் தொல்லைகள், கடன்சுமைகள் அடங்கும். தடைப்பட்டிருந்த திருமணம் இனிதே நடைபெறும். வேலை செய்யும் இடத்தில் உயரதிகாரிகளின் பாராட்டுதல்கள் கிடைக்கும்.



**தனுசு:** பொருளும் புகழும் கூடும். அரசியலில் தொல்லைகள் விலகும். மாணவர்கள் கல்வியில் சாதனைகள் படைப்பர். பொதுவாக தொல்லைகளும் பிரிவினையும் நீங்கி ஒற்றுமையும் உயர்வும் ஏற்படும். தைரியம் கூடும். படிப்பில் கவனம் தேவை.



**மகரம்:** உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கவனம் தேவை. வீண் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். நண்பர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். தேவையற்ற வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம். அயலாருடன் இருந்து வந்த பிணக்கு மறையும்.



**கும்பம்:** உங்கள் வளர்ச்சியால் உங்கள் தந்தை சந்தோஷம் அடைவார். மன நல ஆலோசகர்களாக இருப்பவர்களுக்கு நற்பெயர் கிடைக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கு பெரிய பொறுப்புகள் வந்து சேரும். மாணவர்களுக்கு பரிசுகளும் பாராட்டுதல்களும் கிடைக்கும்.



**மீனம்:** தங்கள் நிலையைக் கருத்தில் கொள்வதோடு வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். வழக்குகள் வெற்றியைத் தரும். முயற்சிகள் அனைத்தும் வெற்றியாகும். சக ஊழியர்களால் அனுகூலம் உண்டாகும்.

## நாளை

**சித்திரை-24 புதன்கிழமை | 07.05.2014**

திதி: அட்டமி மு.இ.09.21 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் மு.இ.11.27 வரை

சுபநேரம்:04.25-05.55 வரை
இராகுகாலம்: 11.55-01.25 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### பரம்பொருளும் அதன் வெளிப்பாடும்

அத்வைத வேதாந்தத்திலேயே புரிந்து கொள்வதற்கு மிகவும் கஷ்டமான, மறுபடியும் மறுபடியும் கேட்கப்படுகிற, எப்போதும் நிலைத்திருக்கும் ஒரு கேள்வி இதுதான். எல்லையற்ற பரம்பொருள், எல்லைக்கு உட்பட்டதாக மாறியது எப்படி? இந்தக் கேள்வியை ஆராய்ச்சிக்கு இப்போது நான் எடுத்துக் கொள்கிறேன். அதை விளக்குவதற்காக ஒரு வரைபடத்தை பயன்படுத்துகிறேன்.

பரம்பொருள் இதோ இருக்கிறது. [அ] பிரபஞ்சம் இதோ இருக்கிறது [ஆ]. பரம்பொருள், பிரபஞ்சமாக ஆகியிருக்கிறது. பிரபஞ்சம் என்றால், பொருளாலான உலகம் மட்டுமன்றி, மனம், ஆத்மா இவற்றாலான உலகமும், சொர்க்கங்கள், பூமிகள், ஏன், இருப்பவை அனைத்துமே அடங்கும். ஒரு வகையான மாறுதலை மனமென்றும், மற்றொரு வகை மாறுதலை உடலென்றும், இப்படிப் பலவாறாகக் கூறுகிறோம்.

இந்தப் பிரபஞ்சம் என்பது, இத்தகைய மாறுதல்களையெல்லாம் தன்னுள் கொண்டதாகும். இந்தப் பரம் பொருள் [அ], காலம், இடம், நிமித்தம் எனப்படும் காரண காரியங்களுக்குள் [இ] தன்னை உட்படுத்திக் கொண்டதன் மூலம் பிரபஞ்சமாக [ஆ] மாறியிருக்கிறது. அத்வைதத்தின் மையக் கருத்து இதுதான்.

| |
|---|
| (அ) பரம்பொருள் |
| (இ) காலம், இடம், காரண காரியம் |
| (ஆ) பிரபஞ்சம் |

# அமெரிக்காவில் புதிய வரலாறு படைக்கும் கோச்சடையான்..

## முதல் முறையாக 200 அரங்குகளில் வெளியீடு



அமெரிக்காவில் 200 இற்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியாவதன் மூலம் சூப்பர் ஸ்டாரின் 'கோச்சடையான்' புதிய வரலாறு படைக்கிறது.

அமெரிக்காவில் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் அட்மஸ் எண்டெர்டெயின்மெண்ட் நிறுவனமும் இந்திப் பதிப்பை ஈரோஸ் நிறுவனமும் வெளியிடுகின்றன.

கோச்சடையான் தமிழில், 80 திரையரங்குகளில் 3டி தொழில் நுட்பத்தில் வெளியாகிறது. வேறு எந்த இந்திய மொழிப் படங்களும் இத்தனை 3டி அரங்குகளில் வெளியானது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் 3டியில் வெளியாகும் முதல் தமிழ்ப் படமும் கோச்சடையான் தான்.

மேலும் அமெரிக்காவில் திரையிடப்படும் வெளிநாட்டுப் படங்களில், 200 அரங்குகளுக்கும் அதிகமாக வெளியாகும் முதல் படம் என்ற பெருமை 'கோச்சடையான்' படத்துக்குக் கிடைத்துள்ளது,' என்றும் அட்மஸ் எண்டெர்டெயின்மெண்ட் நிர்வாக இயக்குநர் ராம் முத்து தெரிவித்தார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 | 4 | 8 |
| | 8 | 5 | | | 7 | 2 | | |
| | 6 | 1 | 2 | | | 9 | | |
| | 1 | | 4 | 8 | | | 5 | |
| | | 4 | | 7 | | 3 | | |
| | 7 | | | 1 | 5 | | 2 | |
| | | 8 | | | 4 | 7 | 3 | |
| | | 6 | 7 | | | 8 | 9 | |
| 2 | 4 | 7 | | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 4 | 6 | 3 | 9 | 8 | 2 | 1 |
| 3 | 6 | 8 | 7 | 2 | 1 | 9 | 4 | 5 |
| 1 | 9 | 2 | 4 | 8 | 5 | 7 | 3 | 6 |
| 2 | 8 | 1 | 9 | 4 | 3 | 6 | 5 | 7 |
| 4 | 3 | 6 | 8 | 5 | 7 | 1 | 9 | 2 |
| 9 | 7 | 5 | 1 | 6 | 2 | 3 | 8 | 4 |
| 6 | 4 | 3 | 5 | 1 | 8 | 2 | 7 | 9 |
| 5 | 2 | 9 | 3 | 7 | 6 | 4 | 1 | 8 |
| 8 | 1 | 7 | 2 | 9 | 4 | 5 | 6 | 3 |

# களனி கேபிள்ஸ் பி.எல்.சியின் நிறைவேற்று அதிகாரி விருதுகள்




இலங்கையின் முதல் தர இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல்களுக்கான வயர்களை உற்பத்தி செய்யும் நிறுவனமான களனி கேபிள்ஸ் பிஎல்சி, தமது நிறுவனத்தின் தலைசிறந்த விற்பனை பிரிவின் ஊழியர்களை கௌரவிக்கும் வகையில் பிரதம நிறைவேற்று அதிகாரியின் விருதுகள் நிகழ்வை முன்னெடுத்திருந்தது. தொடர்ச்சியான இரண்டாவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு, களனி கேபிள்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த சரணபாலவின் பங்குபற்றலுடன் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் போது கடந்த ஆண்டில் சிறப்பாக தனது திறமைகளை வெளிப்படுத்தியிருந்த விற்பனை பிரிவைச் சேர்ந்த ஊழியர் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த பெருமைக்குரிய விருதை களனி கேபிள்ஸ் நிறுவனத்தின் பிராந்திய விற்பனை முகாமையாளர் ஶ்ரீபதி சமந்த வெற்றியீட்டியிருந்தார். இவர் நிறுவனத்தின் செயற்திட்டங்கள் பிரிவில் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமக்குரிய விருதுடன் ஶ்ரீபதி, பெறுமதி வாய்ந்த பணப்பரிசையும் பெற்றுக் கொண்டார். இவர் கடந்த ஆண்டில் தமக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த இலக்கை விட 30 வீதம் மேலதிகமாக பெறுபேறுகளை எய்தி வெளிப்படுத்தியிருந்ததன் மூலம் இந்த விருதுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிகழ்வில் களனி கேபிள்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த சரணபால கருத்து தெரிவிக்கையில், எந்தவொரு நிறுவனத்தினதும் முதுகெலும்பாக அர்ப்பணிப்பான விற்பனையணி செயற்படுகிறது. எனவே, குறித்த ஊழியர்களை கௌரவிப்பது என்பது நிறுவனத்தின் முக்கிய பொறுப்பாக அமைந்துள்ளது என்றார்.

பிரதம நிறைவேற்று அதிகாரியின் விருதுகள் என்பது, குறித்த வருடமொன்றில் விற்பனை சிறப்புகளில் குறிப்பிடத்தக்களவு உயர்ந்த பங்களிப்பை வழங்கியிருந்த ஊழியரை கௌரவிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்த ஆண்டின் வெற்றியாளர் ஶ்ரீபதி சமந்த தமக்குரிய இலக்கை கடந்திருந்ததுடன், உயர்ந்த தனிநபர் விற்பனை எண்ணிக்கையை பதிவு செய்திருந்தார். முழு நிறுவனத்தின் சார்பாக அவரின் பங்களிப்புக்கு நான் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் குறிப்பிட்டார். (த)

# இலங்கைக்கான சீனாவின் கடனுதவி 3836 பில்லியன் டொலர்களை கடந்தது

கடந்த நான்கு ஆண்டுகளில் இலங்கைக்கு சீனாவின் மூலம் வழங்கப்பட்டிருந்த வெவ்வேறான கடனுதவிகளின் மொத்த தொகை 3836 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடந்துள்ளதாகவும், இவை 14 20 ஆண்டு காலப்பகுதியில் மீள செலுத்தப்படும் வகையில் 1.53 6.5 வீதம் வரையிலான வட்டிக்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத் தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வீதி நிர்மாணம், துறைமுக நிர்மாணம், வலு பிறப்பாக்கல், நீர் விநியோகம், விவசாயம், ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சாதனங்கள் விநியோகம் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்கு சீனா இலங்கைக்கு உதவிகளை வழங்கியுள்ளது. ஆயினும் இந்த நிதியுதவிகளுக்கு மேலாக இலங்கை சீனாவைச் சேர்ந்த சுமார் 1700 பேருக்கு 42 வெவ்வேறு திட்டங்களில் பணியாற்றுவதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. (த)

# தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடம் அன்பளிப்புச் செய்துள்ளது சி.டி.பி.

தேசத்தின் முன்னணி நிதி நிறுவ னமான சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி அதன் சி.டி.பி பரிகனக பியஸ சமூக பொறுப் புணர்வு திட்டத்தின் கீழ், கந்தபொல மகிந்த மகா வித்தியாலயத்தின் அத்தியாவசிய தேவையாகக் காணப்பட்ட தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடம் ஒன்றினை அன்பளிப்பாக வழங்கியி ருந்தது.

இந் நிகழ்வில் சி.டி.பியின் பணிப்பா ளரும், தலைமை நிதி அதிகாரியுமான தமித் தென்ன கோன் மற்றும் ஏனைய சிரேஷ்ட அங்கத்தவர்களும் இணைந்து தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை பாடசாலை வசம் ஒப்படைத்தனர். மொத்தமாக 1.5 மில்லியன் ரூபா பெறுமதியான இத் திட்டத்தின் மூலம் CDB நிறுவனம் இதுவரை இம்மாதிரியான 7 ஆய்வுகூடங்களை நன்கொடையாக வழங்கியுள் ளதுடன், இத் திட்டம் நாடுபூராகவும் உள்ள பாடசாலை மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இத் தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடமானது கணினிகள், பிரின்ரார்கள், எழுதுபொருள், ஸ்கானர்கள், கணினி மேசைகள், கதிரைகள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்தின் அமைந்துள்ள கந்தபொல மகிந்த மகா வித்தியாலயத்தில் 215 மாணவர்கள் கல்வி கற்று வருவதுடன், க.பொ.த சாதாரண தரம் வரை கற்கைநெறிகள் காணப்படுகின்றன.




கந்தபொல மகிந்த மகா வித்தியாலயத்தில் 215 மாணவர்கள் கல்வி கற்று வருவதுடன், க.பொ.த சாதாரண தரம் வரை கற்கைநெறிகள் காணப்படுகின்றன.

இந் நிகழ்வில் தமது நன்றியை தெரிவித்துக் கொண்ட பாடசாலை அதிபர் டபிள்யு.எச்.எம்.ஜயதிலக, இன்றைய காலக்கட்டத்தில் கல்வியானது தொழில்நுட்பத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதுடன், எமது வாழ்வில் ஓர் அங்கமாக மாற்றமடைந்துள்ளது. எமது பிள்ளைகள் நீண்டகாலமாக தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் இணைய வசதிகளின்றி இருந்தனர். சி.டி.பி நிறுவனமானது எமது சமூகத்தின் தகவல் தொழில்நுட்பத் திறனுக்காக ஆய்வுகூடத்தை நன்கொடையாக வழங்கியுள்ளது. இது எமது பாடசாலை வரலாற்றில் முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது என தெரிவித்தார்.

இத் திட்டத்தை முன்னெடுத்த சி.டி.பி நிறுவனத்திற்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இத் திட்டமானது எமது பாடசாலையை மாத்திரமன்றி, ஒட்டுமொத்த கந்தபொல சமூகத்தையும் மேம்படுத்துகின்றது. மேலும் கந்தபொல மற்றும் அதனை அண்டிய கிராமங்களில் 150 க்கும் மேலான குடும்பங்கள் வாழ்கின்றன என ஜயதிலக தெரிவித்தார். (த)

# செலிங்கோ நீரிழிவு நிலையத்தின் கழிவுகளும் இலவச சலுகைகளும்

செலிங்கோ நீரிழிவு சிகிச்சை நிலையம் அதன் தசாப்த கால பூர்த்தியை முன்னிட்டு 2014 மே மாதம் முழுவதும் நீரிழிவு பற்றிய விரிவான பரிசோதனைகளை மேற்கொள்பவர்களுக்கு 25 வீத கழிவையும் இன்னும் பல நன்மைகளையும் வழங்கவுள்ளது.

விரிவான நீரிழிவு பரிசோதனைக்கான கழிவினைப் பெற்றுக் கொள்கின்றவர்களுக்கு இலவசமான பாத பரிசோதனை வாய்ப்பு, பார்வை சோதனை, பல்சோதனை மற்றும் பரிசுப் பொதி ஒன்று என்பனவும் வழங்கப்படும் என்று நிலையம் அறிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக இரத்தத்தில் குளுக்கோஸ் அளவைக் கண்டறியக் கூடிய குளுக்கோமீற்றர் ஒன்றையும் 40 வீத கழிவில் கொள்வனவு செய்யலாம்.

விரிவான நீரிழிவு சோதனைக்கான கட்டணப் பொதி 4325 ரூபாவாகும். வைத்தியர் ஒருவருடனான ஆலோசனை, மருத்துவர் ஒருவர் மூலமான முழு அளவிலான உடல் பரிசோதனை, உடல் அளவு சுட்டி கணிப்பீடு, பார்வை சோதனை உணவு உண்ணா நிலையில் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு, முழுமையான இரத்தக் கணிப்பீடு, இரத்தத்தில கொழுப்பளவு, முழுமையான சிறுநீரக அறிக்கை, சிறுநீரகத்தில் மைக்ரோ அல்புமின் சோதனை, ஜி.எவ்.ஆர், எஸ்.ஜி.பி.ரி , மற்றும் ஈ.சீ.ஜீ சோதனைகளை உள்ளடக்கியதாக இந்தக் கட்டணம் அமையும்.

இந்தப் பரிசோதனைகளின் விவரங்கள் அடங்கிய முழுமையான அறிக்கைகளும்; நோயாளர்களுக்கு வழங்கப்படும். அத்தோடு இந்த அறிக்கையின் விவரங்கள் பற்றி நிலையத்தில் உள்ள மருத்துவர் ஒருவருடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்படும்.

செலிங்கோ நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் உள்ள சிரேஷ்ட மருத்துவ அதிகாரி டாக்டர். சாருக்கி வீரசூரிய நீரிழிவு பராமரிப்பில் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை சோதனைகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும். அது நோய் முகாமைத்துவத்தின் தரம் பற்றி அவர்கள் அறிந்து கொள்ள வழிவகுக்கும். அத்தோடு இந்த நோய் காரணமாகப் பாதிப்படையும் உடல் உறுப்புக்களின் நிலை பற்றியும் அவர்கள் அறிந்து கொள்ளலாம் என்று கூறினார்.




இலக்கம் 60 பார்க் ஸ்ட்ரீட் கொழும்பு-02 என்ற முகவரியில் அமைந்துள்ள செலிங்கோ நீரிழிவு நிலையத்திலேயே சகல சோதனைகள் மற்றும் வைத்தியப் பரிசோதனைகள் என்பன இடம்பெறும். ஆஸ்பத்திரி அல்லாத ஒரு வசதியான சூழலில் இவை இடம்பெறும். மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள இலக்கம் 2490290 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (த)

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி, மே 6
சாவகச்சேரி ரயில் நிலைய வீதி ஆவரஞ்சாட்டி முருகமூர்த்தி ஆலய அலங்காரத் திருவிழா நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது. உற்சவம் தொடர்ந்து பத்து தினங்கள் இடம் பெறும். மே 14 ஆம் திகதி விசேட சங்காபிஷேகத்துடன் சுவாமி வீதியுலா இடம்பெறும். (ஒ-9)

♦ ♦ ♦

கொழும்புத்துறை, மே 6
அரியாலை புனித யூதாததேயு ஆலய வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு நடைபெற்று வருகின்றன.
எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் நடைபெறும். (ஒ-135)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தையல், மனையியல், அழகியல் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களின் ஆக்கச் செயற்பாட்டுக் கண்காட்சி யாழ். மத்திய கல்லூரியில் கடந்த வாரம் நடைபெற்றது. யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம், நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். (வ-135)

## வெவ்வேறு விபத்துகளில் காயம்

ஆலய சங்காபிஷேகத்துக்கு தேவைப்படும் பொருள்களை வாங்குவதற்கு மோட்டார் சைக்கிளில் சென்றவர் வீதி வளைவில் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார். மற்றைய மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணும் தூக்கி வீசப்பட்ட போதிலும் காயமின்றித் தப்பினார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் சாவகச்சேரி தாளையம்பதி வீதிச் சந்தியில் இடம்பெற்றது.
சாவகச்சேரி கல்வயல் ஐயனார் கோயில் வீதியைச் சேர்ந்த கார்த்திகேசு வரதராஜா (வயது-58) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (வ-9)

♦ ♦ ♦

சைக்கிளில் சென்ற இளைஞன் மீது மோட்டார் சைக்கிளொன்று மோதியதில் இளைஞனின் வலது கால் முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் சேர்க்கப்பட்டுள்ளார்.
சுன்னாகம் கிழக்கு காளி கோயிலடிக்கு அருகில் இடம்பெற்ற இந்த விபத்தில் புன்னாலைக் கட்டுவன் தெற்கைச் சேர்ந்த சுரேந்திரன் கஜன் (வயது - 17) என்பவர் கால் முறிந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சுன்னாகம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளார்கள். குறித்த இளைஞன் நேற்று முன்தினம் இரவு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பப்பட்டார். (வ-86)

♦ ♦ ♦

மாமன் கூப்பிடுவதாகக் கூறி எதிரே வாகனங்கள் வருவதையும் கவனியாது எதிர் பக்கத்தில் உள்ள வீட்டுக்கு வீதியின் குறுக்கே ஓடிய சிறுவன், மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் காலில் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.
இளவாலையில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காலில் கடும் முறிவு ஏற்பட்ட நிலையில் நேற்று முன்தினம் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுவன் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
இளவாலையைச் சேர்ந்த. ஜெ.ஜெனுசன் (வயது- 11) என்ற பாடசாலை மாணவனே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவராவார். இது குறித்து இளவாலைப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளார்கள். (வ-86)

HNB ASSURANCE
பாராட்டி வாழ்த்துகின்றோம்



Mr.R.Senthujan
Field Manager
(Gold Medal)



Mr.P.Thineskumar
Team Leader
(Gold Medal)



Mr.T.Vimal
Group Leader
(Gold Medal)



Mr.G.Piratheepan
Asst.Field Manager
(Silver Medal)

இன்று (06.05.2014) HNB Assurance PLC நிறுவனத்தால் Colombo Hilton Hotel இல் நடத்தப்படும் வருடாந்த விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டு பதக்கங்களைப் பெறும் எமது பணியாளர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulation Manager &Staff Congratulation
HNB Assurance PLC, Zonal Office, Jaffna.
(47658)(5.6)

## மின்னியலாளர் இலவச பயிற்சி

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் தொழிற்சாலை மின்னியலாளர் பயிற்சி நெறிக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா/த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-35 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.
தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இல, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர் நைற்றா இல.44 சோம சுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தொழிற்சாலை மின்னியலாளர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும். (க)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை. (மல்லாகம்)
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2014

சபைநிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வீதிகளின் புனரமைப்பு வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது. கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரத்தை/கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 06.05.2014–19.05.2014 பி.ப 03.00 மணிவரை.
- கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 20.05.2014 ந.ப 12.00 மணிவரை.
- கேள்விகள் திறக்கப்படும் திகதி 20.05.2014 பி.ப 02.00 மணிக்கு.

கேள்விகள் குறிப்பிட்ட காலப் பகுதியில் கிடைக்கக் கூடியவாறு இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு இரண்டு பிரதிகளையும் தனித்தனிக் கடித உறையிலிட்டு "தவிசாளர், வலிகாமம் வடக்குப் பிரதேச சபை, காங்கேசன் துறை. (மல்லாகம்)" என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடப்பட வேண்டும். ஒவ்வொரு வேலைக்குமான கேள்விப் பத்திரத்தையும் தனித்தனிக் கடித உறையிலிட்டு பெட்டியிலிடப்படல் வேண்டும். அத்துடன் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

1. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
2. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கணியவியலாற்றலையும் (SLS:573:1982) நியம அளவீட்டு முறைமையையும் அறிந்திருத்தல் வேண்டும்.
3. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. மேலதிக விவரங்களை வலிகாமம் வடக்குப் பிரதேச சபை. தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த (ICTAD) தரம் | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | இன்னாவத்தை வீதிப் புனரமைப்பு வேலை - கொல்லங்கலட்டி | 1.46 | C9 அல்லது அதற்கு மேல் | இரண்டு மாதங்கள் | 24,000.00 | 1,000.00 |
| 02 | குரும்பசிட்டி வைத்திய சாலை வீதிப் புனரமைப்பு வேலை– குரும்பசிட்டி | 0.83 | C9 அல்லது அதற்கு மேல் | இரண்டு மாதங்கள் | 18,000.00 | 1,000.00 |

சோமசுந்தரம் சுகிர்தன்,
தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை.
காங்கேசன் துறை, (மல்லாகம்).

06.05.2014 (C 14179)(10.6)

### வீடு வாடகைக்குத் தேவை

நான்குபேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு கொக்குவில், கோண்டாவில், தாவடி, இணுவில், உரும்பிராய் போன்ற இடங்களில் அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 077 165 3359
(47656)(5.6)

### தேவை

ஆலயம் ஒன்றிற்கு பூசை செய்ய குருக்கள் தேவை.
தொடர்பு:
077 071 0978, 077 356 5451 (47652)(7.6)

### தேவை

விற்பனைப் பிரதிநிதி தேவை. வயது எல்லை 22 - 26வரை.
(47655)(12) தொடர்பு: 077 927 2917

### விற்பனைக்கு

ஜேர்மனியிலிருந்து தருவிக்கப்பட்ட தரமான தளபாடங்கள். விற்பனைக்குண்டு.
தொடர்பு: இல. 5, [illegible] வீதி,
([illegible] சந்தி) நல்லூர்.
021 222 1708, 075 504 2895 (47600)(7.6)

### பெயர்மாற்றம்

இல.17, மணியம்குளம் வீதி, ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு ஆகிய நான் இன்றிலிருந்து தில்லையம்பலம் திருநாவுக்கரசு எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன். (47657)(5.6)
நகல்: தில்லையம்பலம் திருநாவுக்கரசு

### லொறி விற்பனைக்கு

- "அசோக் லேலண்ட்"
- "ரஸ்க்கர் சுப்பர் மொடல்"
- "21அடி கன்ரனர்பொக்ஸ்"

2007ஆம் ஆண்டு வாகனம்
LG XXXX (41263)(12)
தொடர்பு: 077 740 0800

## ரயில் பாதையில் விழுந்து பெண்ணின் கை பாதிப்பு

தென்மராட்சி, மே 6

ரயில்வே பாதை ஒரு மீற்றர் அளவுக்கு உயர்த்தப்பட்டதால் கடவையூடாக சைக்கிளில் வந்த குடும்பப் பெண் உயரமான பகுதியில் சறுக்கி வீழ்ந்ததில் கையில் பாதிப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் சாவகச்சேரி கந்தையா வீதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சுரேஸ் குமார் அர்ச்சனா (வயது-34) என்பவர் கையில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தென்மராட்சி பிரதேசத்தில் இதுவரை 20 இற்கு மேற்பட்டோர் ரயில்வே கடவைகளில் வாகனாங்களிலிருந்து வீழ்ந்து கை, கால்களில் காயங்களுக்கு உள்ளாகியமை குறிப்பிடத் தக்கது. (வ-9)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் மாணவி காயம்

வவுனியா, இறம்பைக்குளம் வீதியில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த மாணவி பாடசாலைக்குச் செல்வதற்காக இறம்பைக் குளம் வீதியூடாக சைக்கிளில் பயணித் துக் கொண்டிருந்த போது அதே பக்கமாக வந்த மோட்டார் சைக்கிள் மாணவி மீது மோதியுள்ளது. இந்தச் சம்பவத்தில் மாணவியின் தலையில் படுகாயம் ஏற்பட்ட நிலையில் வவுனியா பொது வைத்திய சாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவியான தியாகராசா அபிசா (வயது-13) என்ற மாணவியே விபத்தில் காயமடைந்தவராவார். இந்தச் சம்பவம் தொடரில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-421)

## இளைஞர்களின் முன்மாதிரி நடவடிக்கை



காக்கைதீவுப் பகுதியில் வீடமைப்பதற்கான அத்திபாரம் வெட்டும் பணியில் இளைஞர்கள்

வலி. தென் மேற்கு பிரதேச இளைஞர்களின் ஏற்பாட்டில் மேதின சிறப்பு அங்கமாக மனிதவலுச் செயற்றிட்டம் ஒன்று இடம்பெற்றது.

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் வேண்டுகோளுக்கு இணங்க இச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வறுமைக் கோட்டுக்குட்பட்ட தாயும், மகளுமாக இரண்டு பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்காக காக்கைதீவுப் பகுதியில் வீடமைப்பதற்கான அத்திபாரம் வெட்டும் பணிகள் வியாழக்கிழமை பிரதேச இளைஞர்களினால் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தைச் சேர்ந்தவர்கள், பிரதேச இளைஞர் கழக சம்மேளன பொருளாளரும் பிரதேச சபை உறுப்பினருமான அ.ஜெபநேசன், பிரதேச இளைஞர் நாடாளு மன்ற உறுப்பினர் க.உஷாந்தன், ஆனைக்கோட்டை இளைஞர் கழகத் தலைவர் எவ்.எக்ஸ்.டி.கூரே, நவாலி வடக்கு இளைஞர் கழகத் தலைவர் அன்ரன் ரஜோ, கிராம சேவகர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட்ட இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர். (வ-10)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## கேள்வி அறிவித்தல் - 2014

கீழ்க் காணப்படும் வேலைகளிற்கு C9 இக்ராட் பதிவுபெற்ற ஒப்பந்தகாரரிட மிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

| தொ. இல. | வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் (VAT, NBT நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | பண்ணாகம் வீதி புனரமைத்தல் | 10,000.00 | 1,000.00 |
| 02 | வட்டுக்கோட்டை சிவன்கோவில் வீதி புனரமைத்தல் | 5,000.00 | 500.00 |
| 03 | சங்கானை பொது நூலகத்திற்கான குழாய்க்கிணறு அமைத்தல் | 350.00 | 300.00 |

கேள்விப்படிவம் வழங்கல்
:- 06.05.2014 தொடக்கம் 21.05.2014 பி.ப 01.00 மணி வரை

கேள்விப்படிவம் ஏற்றல்
:- 22.05.2014 நண்பகல் 12.00 மணி வரை

கேள்வி திறத்தல்
:- 22.05.2014 பி.ப 02.00 மணி

1. தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட வேலைகளிற்காக கேள்விகளை கோருகின்றார்.
2. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
3. கேள்விப் பத்திர பணத்துடன் மீளளிக்கப்படாத 12% பெறுமதி சேர் வரியும், 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் செலுத்தப்படல் வேண்டும்
4. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்வி திறக்கப்படும் சமயத்தில் கேள்விகாரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்கவேண்டும்.
6. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை **"தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்"** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடல் வேண்டும். மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
7. மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைமை அலுவலகம்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**06.05.2014**

**திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

(C/14180)(7.6)

## தென்மராட்சி வலய தமிழ்த்தினப் போட்டி

தென்மராட்சி, மே 6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் கடந்த 26,27 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்ட வலய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளின் முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் மற்றும் பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

**வாசிப்பு -பிரிவு -1**
ந.கஜீபன்- மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை, சி.வசிகா- இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை, சி.சானுஜா- உசன் இராமநாதன் ம.வி.

**வாசிப்பு -பிரிவு -2**
நா.செந்துஜா- விடத்தற்பளை கமலாசனி வித்தி, ம.கோசயன்- மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., மு.பவித்ரா- மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**
செ.பூங்கவி - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, ஆ.டிலானியா- கரம்பை அ.மி.த.க.பாடசாலை,சி.சாகித்தியன்- கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை.

**பேச்சு - பிரிவு- 1**
சு.சஞ்சய் -மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை, சி.ஆர்த்திகா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி, இ.திலக்ஸன்- கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை.

**பேச்சு - பிரிவு- 2**
ம.வீணஜா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ஐ.விதுரன்- விடத்தற்பளை கமலாசனி வித்தி, உ.பிரதீஷா- கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.

**பேச்சு - பிரிவு-3**
ம.கீதாஞ்சலி- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கு.மகிழினி- கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, சி.சஞ்சிகா- மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.

**பேச்சு - பிரிவு - 4**
சி.கிஷாயினி- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கு.விதுர்ஷினி- மட்டுவில் சந்திர மௌலீச வித்தி, இ.சாம்பவி- மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி.

**பேச்சு- பிரிவு- 5**
செ.சுமித்தா- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, வி.வினோஜா- வரணி மத்திய கல்லூரி, ந.லக்சாயினி- சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**பாவோதல்- பிரிவு -1**
ச.மிதுராங்கினி- கைதடி முத்துக்குமாரசாமி ம.வி, சி.மோகனவாணி- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட்சாலை, பா.புருஷோத்தமி- கல்வல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தி.

**பாவோதல்- பிரிவு-2**
சு.விதுர்சனா- விடத்தற்பளை கமலாசனி வித்தி, அ.மேனகா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சி.கம்சனா- மட்டுவில் சந்திர மௌலீச வித்தி.

**பாவோதல்- பிரிவு- 3**
அ.கீத்தாயினி- கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, ம.கீர்த்தனா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி, ம.பானுகா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**பாவோதல்- பிரிவு-4**
ச.சங்கர்ஜி-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ச.கயலினி- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, க.மதுசிகா- கொடிகாமம் அ.த.க.பாடசாலை.

**பாவோதல்- பிரிவு- 5**
செ.பார்த்தீபா- வரணி மத்திய கல்லூரி, சூ.சிந்துர்லதா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ப.சலுத்திகா கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை.

**இசையும் அசைவும்**
செ.அனிஸ்ரன்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, கே.நேருஜா- கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை, யோ.டிவேதிகா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

**இசை (தனி) பிரிவு- 2**
கு.கஜானி- சாவகச்சேரி இந்துக்கல்லூரி கலுபின்சிகா- மட்டுவில் சந்திர மௌலீச வித்தி, த.கனலக்ஸனா- மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை.

**இசை (தனி) பிரிவு- 3**
செ.விதுனுசியா-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சி.கஜந்தா- நாவற்குழி ம.வி, சி.நிலக்ஸனா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**இசை(தனி) பிரிவு-4**
சி.டியூலா- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, ந.கானப்பிரியா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ம.கேசவன்- கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.

**இசை(தனி) பிரிவு- 5**
அ.மேரி ஜான்சலா- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சி.சிவாஜினி-கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, ச.பிருந்தா- நாவற்குழி ம.வி.

**இசை குழு- 1**
கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மிருசுவில் அ.த.க.பாடசாலை.

**இசை குழு- 2**
சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வரணி மத்திய கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

**நடனம் தனி- பிரிவு- 2**
சு.அட்சரா-மட்டுவில் சந்திர புரஸ் கந்தவரோதய ம.வி, கி.சமீனா- மிருசுவில் அ.த.க. பாடசாலை, பா.வைஸ்ணவி- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

**நடனம் தனி- பிரிவு -3**
யோ.வைஸ்ணவி- உசன் இராமநாதன் ம.வி, த.அஜிதா- மிருசுவில் அ.த.க.பாடசாலை, ம.மதுஷா- நாவற்குழி ம.வி.

**நடனம் தனி பிரிவு -4**
ஈ.வித்தகி- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ஐ.ஜதுர்ஷனா- நாவற்குழி ம.வி, சிதர்மிகா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி. (வ-9)

நூல் விற்பனை
பொதுநிதி அலுவலக முகாமைத்துவம்
சகல அரச உத்தியோகத்தர்களின் பரீட்சைக்குரிய விடயங்களை உள்ளடக்கியது.
நிதிப்பிரமாணம், தாபன நடைமுறை, அலுவலக முறைமை, மாகாண சட்டங்கள்
ஆசிரியர் - நா.இராசநாயகம்
கலாநிதி திருமதி ஜெ.இராசநாயகம்
கிடைக்குமிடம் : யாழ்ப்பாணம் - அன்னை புத்தகசாலை
வெளிமாவட்டம் : சகல புத்தகசாலைகளும்
071 817 5820, 077 386 8572
கடந்த கால வினா விடைகளை உள்ளடக்கியது.
(47860) (7.6)



காரைநகர் வலந்தலை மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்றது. கும்பங்கள் வீதி உலாவருவதையும், தூபி அபிஷேகம் இடம்பெறுவதையும், மூலஸ்தானத்தில் அம்பாளுக்கு கும்பநீர் அபிஷேகம் செய்வதையும் காணலாம். (ஓ-250)

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் அருள்

வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அருள் 04.05.2014 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அரியரத்தினம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி- நாகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற றஞ்சிதா தேவியின் அன்புக்கணவரும், உதயகுமாரி, வசந்தகுமாரி, சாந்தகுமாரி, விஜயகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலானந்தன், சுதன், சிவநேசன், திலீபன் ஆகியோரின் அன்பு மாமனும், சிவசரன், சிவசஹாணன், தேன்னுகன், போகிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.

(47654)(4)

தகவல்:
குடும்பத்தினர்

**பரிசளிப்பு விழா**

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமைபி.ப.2மணிக்கு வித்தியாலய மகாலிங்கம் அரங்கில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன்தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி றஞ்சனா நவரத்தினமும் சிறப்பு விருந்தினராகதென்மராட்சிகல்வி வலய கணக்காளர் திருமதி சிவமதி நந்தகுமாரும் கலந்து கொள்வர். (வ-9)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர் திருமதி T. மேரிகலிஸ்ரா
அவர்களின் தந்தையார்
செபரிஸ்யாம்பிள்ளை அன்ரனி பெர்னாண்டோ
அவர்கள் இயற்கை எய்தியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர்,ஆசிரியர்கள்,கல்வி சாரா ஊழியர்கள் (47659)(5.6)
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னம்மா மாணிக்கம்

தோற்றம் 17.06.1945 | மறைவு 12.05.2012

எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டு இரண்டு
சென்றதம்மா
ஒரு நாள் சென்றது போல்
உள்ளதம்மா உம்
திருமுகத்தைக் காணாது
போல் துடிக்குதம்மா
எங்கள் மேல் கொண்டிருந்த
பாசங்களை விட்டு ஏன் தான் தனி வழியே
சென்றாயம்மா காலமெல்லாம் உமக்காக
கண்களில் நீர் நிரம்பி வழியுதம்மா.

கைதடி கிழக்கு, கைதடி. (43634)(4.6) குடும்பத்தினர்.

## பருத்தித்துறை நகராட்சி மன்றம், வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கீழே அட்டவணையில் காட்டப்படும் வேலைகளுக்கான கேள்விகள் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினால் கோரப்படுகின்றது. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் அலுவலகத்தில் செலுத்தி கேள்விப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 05.05.2014 தொடக்கம் 20.05.2014ஆம் திகதி பி.ப 3.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித்திகதி: **22.05.2014 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை** (குறித்த நேரத்திற்குப் பின் கிடைக்கப் பெறும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.)
03. கேள்வி திறக்கப்படும் திகதி :22.05.2014 பி.ப 2.00 மணி
04. கேள்வியை ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
05. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்குமுன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
06. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு ஒரு பிரதியை "நகரபிதா, நகராட்சி மன்றம், பருத்தித்துறை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமோ 2ஆம் பந்தியில் குறிப்பிட்ட திகதி நேரத்திற்குமுன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புவதுடன் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

மேலதிக விபரங்களை பருத்தித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | மீளளிக்கப் படாத வற் வரி | மீளளிக்கப் படாத NBT வரி | ஆகக் குறைந்த இக்ராட் தரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | பெருவெட்டிமணல் ஒழுங்கைகொங்கிறீற் றோட் அமைத்தல் | 15.000.00 | 750.00 | 90.00 | 15.00 | C8 |
| 02 | வக்கமோடை ஒழுங்கைகொங்கிறீற் றோட் அமைத்தல் | 10.000.00 | 750.00 | 90.00 | 15.00 | C9 |
| 03 | முனீஸ்வரர் கோயில் வீதிபுனரமைப்பு | 5,000.00 | 750.00 | 90.00 | 15.00 | C10 |
| 04 | கடற்கரை வீதி புனரமைப்பு | 15,000.00 | 750.00 | 90.00 | 15.00 | C8 |
| 05 | சந்தைமேற்கு ஒழுங்கைபுனரமைப்பு | 10.000.00 | 750.00 | 90.00 | 15.00 | C9 |
| 06 | அலுவலகத்திற்குமுன் கொங்கிறீற் கல் பதித்தல் | 8.000.00 | 750.00 | 90.00 | 15.00 | C9 |
| 07 | தாழ்வுகலட்டி ஒழுங்கைபுனரமைப்பு | 10,000.00 | 750.00 | 90.00 | 15.00 | C9 |
| 08 | சென் அன்ரனிஸ் வீதி புனரமைப்பு | 12,500.00 | 750.00 | 90.00 | 15.00 | C8 |

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
02.05.2014.

(C/14178)(7.6)

தேசமானிய சபா.ரவீந்திரன் JPUM
நகரபிதா, நகராட்சி மன்றம்,
பருத்தித்துறை.

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவைநிலையங்களிலும் **30.04.2013** வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் **17.06.2014** இலிருந்து காலை **8.30** மணிக்கு மக்கள் வங்கி, யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பகப்படும்.

| கிளைகள் | சேவை நிலையங்கள் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | .... |
| நெல்லியடி | .... |
| அச்சுவேலி | புத்தூர். |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
**மக்கள் வங்கி,**
பிராந்திய தலைமையகம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி.14177) (45.6.3)



திருத்தப்பட்ட நிலையில் வீதி

# வலி.கிழக்கில் ஐந்து வீதிகளை அகலிக்கும் ஆரம்பக் கட்டப் பணி

அச்சுவேலி,மே 6

வலி.கிழக்கு பிரதேச சபைப் பிரிவில் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் ஐந்து வீதிகள் உரிய அளவுக்கு அகலமாக்கப்பட்டு திருத்தி அமைக்கப்படவுள்ளன.

வீதிகளை அகலமாக்குவதற்கான பணியில் உள்ளூர் பிரமுகர்கள் மற்றும் பொது நிறுவனங்களின் நிர்வாகிகளை உள்ளடக்கிய வீதி நிர்மாண கண்காணிப்புக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

உலக வங்கியின் நிதி உதவியுடன் 'புறநெகும' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வீதித் திருத்த வேலையில் பொதுமக்களின் பங்களிப்பும், கண்காணிப்பும் கருத்தில் கொள்ளப்படுகின்றது. இந்த வகையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்கள் நிறுவப்பட்டு அவை வீதித் திருத்த வேலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

> " வலி.கிழக்கில் அச்சுவேலி தெற்கு, பயித்தோலை வீதி, உரும்பிராய் வாகையடி வீதி, கோப் பாய் இலகடி வீதி, உரும்பிராய் மயான வீதி, அச்செழு வேவியாபுரம் குறுக்கு வீதி ஆகியவையே 81 மில்லியன் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்படவுள்ளன

வலி.கிழக்கில் அச்சுவேலி தெற்கு, பயித்தோலை வீதி, உரும்பிராய் வாகையடி வீதி, கோப்பாய் இலகடி வீதி, உரும்பிராய் மயான வீதி, அச்செழு வேவியாபுரம் குறுக்கு வீதி ஆகியவையே 81 மில்லியன் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

திருத்தி அமைக்கப்படவுள்ள வீதிகள் 20 அடிகளுக்குக் குறையாமல் 26 அடிகள் வரையில் அகலமாக இருக்க வேண்டும் என்பதால் பிரதேச சபையின் தொழில்நுட்ப அலுவலர் மற்றும் வீதி நிர்மாண கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் வீதிகள் அகலமாக்கப்படவேண்டிய இடங்களை அளந்து அடையாளம் இடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வீதிகள் உரிய அளவுக்கு அகலமாக இருப்பது போக்குவரத்துக்கும் பயன்பாட்டுக்கும் வசதியானது என்ற வகையில் காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் வீதி அகலமாக்கும் பணிக்கு ஆர்வத்தோடு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். (வ-11)

## நீண்டகாலத்தின் பின் வீதிக்கு விமோசனம்

யாழ்ப்பாணம், மே 6

வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மூளாய் பிரதேசத்தில் நீண்ட காலமாகப் புனரமைப்பின்றி போக்குவரத்துக்கு பெரும் சிரமமாக இருந்த மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை வீதி பிரதேச சபையால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் பயன்படுத்தும் இந்த வீதி கவனிப்பாரற்றுக் குன்றும் குழியுமாக இருப்பது தொடர்பாக பிரதேச மக்கள் வலி.மேற்கு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் சபையின் நிதியூட்டத்தில் இருந்து குறித்த வீதி அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (வ-14)

## ஆனைக்கோட்டை டச்சு வீதி புனரமைப்புக் காணுமா?

நவாலி, மே 6

ஆனைக்கோட்டையிலிருந்து முள்ளி ஊடாக ஆனைக்கோட்டை பிரதேச மருத்துவமனை, காக்கைதீவு ஆகிய இடங்களுக்குச் செல்லும் டச்சு வீதி, நீண்ட காலமாகத் திருத்தி அமைக்கப்படாததால் அவ்வீதியால் பயணிப்போர் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

டச்சுக்காரர் இருந்த காலத்தில் அவர்களால் அமைக்கப்பட்ட குறித்த வீதி நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படவில்லை. இந்த வீதியால் ஆனைக்கோட்டை உட்பட பல பகுதிகளிலுள்ள மக்கள் பிரயாணம் செய்ய நேரிடுகிறது. தற்போது இந்த வீதி கிடங்குகளாக காணப்படுவதால் அவசர நோயாளிகளை ஏற்றிக் கொண்டு வாகனங்கள் விரைவாகச் செல்ல முடியாமல் கிடங்குகளில் விழுந்தெழும்பி காலம் தாழ்த்தி வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது?

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியின் நிலையை நேரில் பார்வையிட்டு மக்கள் இலகுவாக போக்குவரத்து செய்வதற்கு ஆவன செய்து தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-100)




சாவகச்சேரி மருத்துவமனை வெளி நோயாளர் பிரிவில் 'வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் அமைக்கப்பட்ட தாய்ப் பாலூட்டும் அறை பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. (வ-9)

## அடிப்படை வசதிகளின்றி செம்மலை மக்கள்

கிளிநொச்சி, மே 6

முல்லைத்தீவு, செம்மலை கிராமத்தில் மீள் குடியேறியுள்ள குடும்பங்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக எதுவித அடிப்படை வசதிகளும் இன்றிய நிலையில் வசித்து வருகின்றன.

செம்மலைக் கிராமத்தில் கடந்த கால போர் காரணமாக ஐந்து தடவைகளுக்கு மேல் இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களிலேயே தங்கியிருந்து கடந்த 2010 ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் 326 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ளன. எனினும் இந்த மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் முழுமையாக வழங்கப்படவில்லை. போரால் 58 வீடுகள் முழுமையாகவும் 268 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இதில் யு.என். கபிரெட் நிறுவனத்தால் ஆறு வீடுகளும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் 251 வீடுகளும் புனரமைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 11 வீடுகள் இதுவரை புனரமைக்கப்படவில்லை. அத்துடன் 31 குடும்பங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனம் ஊடாக தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

கிணறுகள் இன்றி 45 குடும்பங்களும் மலசலகூட வசதிகள் இன்றி 30 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன. இதைவிட குறித்த கிராமத்தில் உள்ள இருபதுக்கும் மேற்பட்ட வீதிகள் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன. (வ-55)

# முகமாலையில் கண்ணிவெடி அகற்றலில் பல சவால்கள்

## ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 6

முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகக் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

போர் நிறைவுக்கு வந்த பின்னர் வெடி பொருள்கள் அகற்றப்பட்டு மீள்குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் தற்போது முகமாலைப் பகுதியில் கண்ணி வெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அதியுயர் போர் வலயமாகவும் போரில் ஈடுபட்ட இரு தரப்புக்களும் பரஸ்பரம் அதிக வெடிபொருள்களைப் புதைத்த பகுதியாகவும் காணப்படும் முகமாலைப் பகுதியில் தற்போது ஹலோட்ரஸ்ட் கண்ணி வெடி அகற்றும்பிரிவு கண்ணி வெடி அகற்றும் பணிகளை மேற் கொண்டு வருகின்றது.

இந்தநிலையில் குறித்த பகுதியில் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் நிறுவனத்தின் பணியாளர்கள் வெடி விபத்துக்களுக்கு உள்ளாகி உயிரிழப்புக்களை எதிர்கொண்டுள்ள அதே நேரம் உடல் அவயவங்களையும் இழந்துள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற வெடி விபத்தொன்றில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

தற்போது முகமாலை ஏ-9 வீதியின் இருபக்கமும் 200 மீற்றர் தூரம் வரையான பகுதிகளில் மாத்திரம் வெடி பொருள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மிக விரைவாக வாகனங்களைக் கொண்டு அந்தப் பகுதியில் வெடிபொருள்களை அகற்றக்கூடிய நிலையில் குறித்தபகுதி இல்லை என்றும், குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது. தற்போது 17 மில்லியன் சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் வெடி பொருள்கள் அகற்ற வேண்டியிருப்பதாக மாவட்ட அரச அதிபர் அவர்களால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-55)

# விறகு சேகரிப்போரால் தீக்கிரையாக்கப்படும் வரணி வடக்கிலுள்ள கண்டல்காடு

குடத்தனை, மே 6

வடமராட்சி, குடத்தனை, அம்பன் பிரதேசத்தின் தெற்குப் பகுதிக்கும், வரணி வடக்கு பிரதேசத்துக்கும் இடையில் அமைந்துள்ள இயற்கை வளம் பொருந்திய கண்டல் காடு தற்போது விறகு வெட்ட வரும் விறகு சேகரிப்போரால் தீ வைத்துக் கொளுத்தப்படும் சம்பவம் நாளாந்தம் இடம் பெறுகின்றது.

தற்போது நிலவும் காலநிலை மாற்றம் காரணமாக நீர் வளம் வற்றியுள்ள குறித்த பிரதேசம் விறகுத் தேவைக்காக அழிக்கப்பட்டு வருகின்றது - "நாளாந்தம்" மாட்டு வண்டில்களில் வரும் நபர்கள் வியாபார நோக்கம் கருதி மரங்களை வெட்டிச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

குறித்த பிரதேச இயற்கை வளம் வெளிநாட்டு உள்நாட்டு பறவைகளின் சரணாலயமாக உள்ளது.

அதேசமயம் பல்லின மீனினங்களின் வாழ்விடமாகவும், உற்பத்தியிடமாகவும் இந்தப் பிரதேச சதுப்பு நிலம் இருந்து வந்த நிலையில் தற்போது நிலவும் கோடை காரணமாக சதுப்பு நிலங்கள் நீர்வற்றிய நிலையில் மீன் பிடிப்போர் நாளாந்தம் மீன்களை எதுவித சிரமமுமின்றி பிடித்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

குறித்த இயற்கை வள கண்டல்காடு அழிக்கப்படுவது தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களம் உடனடி நடவடிக்கை எடுத்துச் செயற்பட வேண்டும் என்று சூழலியலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பிரதேசங்களில் இருந்த இராணுவ முகாம்கள் பலவும் அகற்றப்பட்டுள்ள நிலையில், 'சட்டவிரோத விறகு வெட்டும்' நடவடிக்கைகள் சுதந்திரமாக இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-122)

# மனிதாபிமானத்துடன் கடமைக்கு திரும்புங்கள்

## அப்பாவி நோயாளர்களின் உயிருடன் விளையாடாதீர்கள் ; தாதியர்களுக்கு அமைச்சர் மைத்திரிபால சிறிசேனஅழைப்பு

கொழும்பு,மே 6
அப்பாவி நோயாளர்களின் உயிருடன் விளையாடாமல் மனிதாபிமானத்துக்கு மதிப்பளித்து தாதிமார் உடன் கடமைக்குத் திரும்ப வேண்டும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க எந்த வேளையிலும் தாம் தயாராகவுள்ளதாக அவர் கூறினார்.

தாதிமார் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தம் தொடர்பாக அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
சுகாதார சேவையில் 106 தொழிற்சங்கங்கள் உள்ளன. வேறு அமைச்சுக்களில் இவ்வாறான எண்ணிக்கையில் தொழிற் சங்கங்கள் இல்லை. இதில் 15 தொழிற்சங்கங்கள் மிகச் சிறப்பாக இயங்குகின்றன.

தொழிற்சங்கங்களுடன் பேசுவதிலேயே அமைச்சரினதும், அமைச்சின் உயர் அதிகாரிகளினதும் அனேக நேரம் செலவாகின்றது.

தாதிமாருக்குப் பிரசவமனை பயிற்சிவழங்குவது அது தொழில்நுட்பம் சார் பிரச்சினையே.

அப்பாவி நோயாளர்களே இதனால் அவதிப்படுகின்றனர். சகல தாதிமார்களும் இதனை உணர்ந்து கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும்.

குழந்தை பிறப்பின்போது தாதிமார் போன்று குடும்ப சுகாதார அதிகாரிகளின் சேவையும் அவசியமாகும். இவ்வளவு காலமும் இரு தரப்பினரும் சுமுகமாகச் சேவையைப் புரிந்தனர். தாதி மாணவிய ருக்குப் பிரசவ மனை பயிற்சி வழங்குவதை 2009 ஆம் ஆண்டில் ஆரம்பித்தோம்.

அதையடுத்து பிரச்சினை உக்கிரம் அடைந்தது. அமைச்சின் அனுமதியின்றி தாதிய பயிற்சி கல்லூரி அதிபர்கள் பிரசவ மனை பயிற்சியை ஆரம்பித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து ஆராய் வதற்கு நியமிக்கப்பட்ட புத்தி ஜீவிகளின் குழுவின் பரிந்துரைகளின் பேரிலேயே அமைச்சு தொடர்ந்தும் செயற்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ச)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தில் கடமையாற்றும் திருமதி. ம.சரஸ்வதி அவர்களின் தாயார் கந்தசாமி பழனியம்மா 5. 5.2014 அன்று காலமானார். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் !

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், ஊழியர் நலன்புரி சங்கம்.
பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், கிளிநொச்சி.

---

## மரண அறிவித்தல்



### நடராஜா சண்முகநாதன்

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் 103, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா சண்முகநாதன் 03.05.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பவளதேவியின் ஆருயிர்க் கணவரும் காலஞ்சென்றவர்களான நடராஜா-சிவமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், மேனகா (லண்டன்), கஜன் (France), தாரகா (இலங்கை) ஆகியோரின் பாசத் தந்தையும், கணேஸ்குமார் (லண்டன்), ஆர்த்தி (France) பிருந்தன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனும், டருன், தியா ஆகியோரின் ஆசைப் பேரனும், யோகேஸ்வரன் (இலங்கை), பத்மநாதன் (France) விஜயகாந்தன் (France), சந்திரகாந்தன் (France), சறோஜினிதேவி (France), சிறீகாந்தன் (France) ஆகியோரின் மைத்துனரும், மிதிலை ஜெயனின் (France) சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**103, இராசாவின் தோட்டம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/13788)(10) **தகவல்: குடும்பத்தினர்.**

---

## கண்ணீர் அஞ்சலி



யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் ஓய்வு பெற்ற அதிபர் செல்வி அன்னலட்சுமி கந்தையா அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி சின்னம்மா கந்தையா**

அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,
அவருடன் பணிபுரிந்த அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமை புரியும் முருகேசு வைதேகி அவர்களின் பாசமிகு தாயார்

**முருகேசு சந்திரவதனா**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமை புரியும் நாகராசா சுதாகரன் அவர்களின் பாசமிகு தந்தை

**பொன்னுச்சாமி நாகராசா**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கிறோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.

---

# ஈரவிழிகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி பிள்ளைநாதன் (பிள்ளையார்) சந்தணம்மா



**தோற்றம்**
**23.04.1946**

**மறைவு**
**06.05.2013**



(47597)(7.6)

பாசத்தின் உறைவிடமாய் எம்மை வளர்த்த அம்மாவே
ஓராண்டு சென்றதம்மா!
உங்கள் அன்பு முகம் கண்டு
உங்களைப் பார்க்க எங்கள் மனம் ஏங்குகின்றது
உங்கள் பாசத்திற்காக தவித்து நிற்கிறோம் அம்மா!
ஓராண்டு சென்றாலும் அம்மா!
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் அம்மா!
அன்பாய் அரவணைத்து நீங்கள் தந்த பாசம்
இப்பாரினில் நாம் வாழும் வரை.....
என்றுமே அழியாது எம் நெஞ்சங்களில்
என்றுமே நிலைத்திருக்கும் அம்மா
நீங்கள் எம் குல தெய்வமாக
எம்முடனே வாழ்ந்து கொண்டிருப்பீர்கள் அம்மா
ஈடற்ற உங்கள் இழப்பு அம்மா!
ஆறாது எம் துயரம்
மாறாது உங்கள் நினைவுகள் அம்மா!
என்றுமே எம்முடன் நிறைந்து இருக்கும் அம்மா!

**கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்**

உங்கள்
பாச நினைவுகளுடன்
வாழும்
குடும்பத்தினர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### முள்ளியவளையில்

தொடர்ந்து கடை தீப்பற்றி எரிந்தது. இதில் கடை முழுமையாக எரிந்து நாசமாகியது. கடையின் அருகே அமைந்திருந்த வீட்டின் முன்பகுதியும் இடிந்து விழுந்து பலத்த சேதமடைந்ததுடன் வீட்டின் உட்புறமும் சேதமடைந்தன.

கடையின் உள்ளே இருந்த ஒருவர் சம்பவத்தில் காயமடைந்தார். அவர் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். அவரிடம் பொலிஸார் வெடிப்புக்கான காரணம் குறித்துத் துருவித் துருவி விசாரணை நடத்தி வருகின்றனர்.

வெடிப்பு மற்றும் தீ விபத்துக்கான உண்மையான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை. என்றாலும் வெடிகுண்டு அல்லது வெடிகுண்டு தயாரிக்கப்பயன்படும் மருந்துகளால் இந்த வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டிருக்குமா என்ற கோணத்தில் அதிகாரிகள் தீவிரமாக விசாரணை நடத்தி வருகிறார்கள்.

நள்ளிரவில் திடீரென பெரும் வெடிப்புச் சத்தம் கேட்டதாக அயலவர்கள் கூறுகின்றனர். ஓடிச்சென்று பார்த்தபோது கடை பெரும் தீப்பிளம்பாக எரிந்துகொண்டிருந்ததாகவும் கடையினுள் இருந்து ஒருவர் எரிகாயங்களுடன் வெளியே ஓடி வந்து என்னைக் காப்பாற்றுங்கள் என கூக்குரலிட்டார் என்றும் அயலவர்கள் கூறினர்.

உடனடியாக பொலிசாருக்கு தகவல் தரப்பட்டது. அவர்கள் தண்ணீர் பவுசருடன் விரைந்துவந்து நீரைப்பாச்சியும் அயலவர்கள் அருகேயிருந்த கிணறுகளிலிருந்து நீரை அள்ளி ஊற்றியும் தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் கடை முற்றாக எரிந்து நாசமாகியது. கடையில் பணிபுரிபவரான இன்பநாதன் நிதர்சன் (வயது 24) என்ற இளைஞரின் இரு கால்களிலும் தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன.

மருத்துவமனையில் வைத்து இவரிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் புலனாய்வாளர்களும் பொலிஸ் விசேட புலனாய்வாளர்களும் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். குண்டுவெடிப்பினாலேயே கடை தகர்ந்து தீப்பற்றி முற்றாக அழிந்திருக்கலாம் என்னும் கோணத்திலையே புலனாய்வாளர்களின் விசாரணைகள் நடைபெற்று வருகிறது.

வெடிப்பால் உடைந்து சிதறிய கடைக் கண்ணாடியின் சிதறல்கள் வீதியின் மறுமுனை வரை பரவிக் கிடக்கின்றன. கடையின் பெரும்பகுதி இடிந்து தரைமட்டமாகியிருக்கிறது. எஞ்சியுள்ள கட்டட பகுதியிலும் பெரும் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் எரிந்த கடையைச்சுற்றி உள்ளே எவரும் செல்லாதவகையில் தடைகளை ஏற்படுத்தி விசேட பொலிசார் தொடர்ந்தும் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். கடையில் குண்டுகள் அல்லது வெடிமருந்து இருந்ததா என்பதை ஆராய்வதற்காகக் கொழும்பிலிருந்து இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் அடங்கிய தனிக் குழு ஒன்றும் இன்று முள்ளியவளைக்கு வரவுள்ளது.

(உ-102, 101)

### விபூசிகா

மைய நேற்று கண்டாவளைப் பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி விஜயகுமாரி சுரேஷ் மற்றும் பூநகரி பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரி எஸ்.சிவபாதசுந்தரம் ஆகியோருடன் சிறுமி விபூசிகா பொலிஸ் பாதுகாப்புடன் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு விபூசிகாவுக்கு அவரது தாயாரைச் சந்திக்க அரை மணி நேரம் வழங்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி தர்மபுரம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தையடுத்து அதனுடன் தொடர்புபட்டிருந்த நபர் ஒருவரை தனது வீட்டில் தங்க வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஜெயக்குமாரி (வயது - 50) அவரது மகள் விபூசிகா (வயது - 13) இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் 14 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியபோது சிறுமி விபூசிகாவை சிறுவர் நன்னடத்தை அதிகாரி ஊடாக சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்குமாறும் தாயார் ஜெயக்குமாரியை பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

(ஐ-55)

### மீண்டும்

தாம் உயிர் வாழ்வதற்குப் படைகளால் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகத் தெரிவித்து 2 பெண்கள்,5 சிறுவர்கள் உட்படப் 10 பேர் படகு மூலம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் தமிழகத்தின் கரையோர மாவட்டமான தனுஷ்கோடியைச் சென்றடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

எங்களைப் போன்று இன்னும் ஆயிரக்கணக்கானோர் அச்சுறுத்தல் காரணமாக இங்கு அகதிகளாக வரவுள்ளனர் என்று தனுஷ்கோடியைச் சென்றடைந்துள்ள ஈழ அகதியான தவேந்திரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இருந்து நேற்று முன்தினம் இரவு படகில் புறப்பட்ட இந்தப் 10 பேரும் நேற்றுக் காலை தனுஷ்கோடியைச் சென்றடைந்துள்ளனர். தனுஷ்கோடிப் பகுதியிலுள்ள மீனவர்கள் அகதிகள் வருவதை அவதானித்துள்ளனர். இதனையடுத்துப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

அந்தப் பகுதிக்குச் சென்ற தனுஷ்கோடிப் பொலிஸார் ஒரு பெண், 3 குழந்தைகள் உட்பட 6 பேரை அழைத்து வந்தனர். இதேபோன்று கியூ பிரிவு பொலிஸார் ஒரு பெண், 2 குழந்தைகள் என்று 4 பேரை அழைத்து வந்து தனித்தனியாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

முல்லைத்தீவு யோகபுரம் பகுதியில் இருந்து சென்றவர்களில் ஒருவரான தவேந்திரன் ராமநாதபுரம் ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடும்போது, இலங்கையில் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாகி வருவதாகத் தெரிவித்து இலங்கை அரசு எந்தவிதமான கேள்வியும் இன்றித் தமிழர்களைக் கைது செய்து வருகின்றது. இதற்காக விசேட ஏற்பாட்டுச் சட்டமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தச் சட்டத்தின் கீழ் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அவ்வாறு கைது செய்யப்படுபவர்கள் என்ன நிலையில் இருக்கின்றார்கள் என்று யாரும் கேட்க முடியாத நிலை உள்ளது. உயிருக்குப் பயந்து அங்கு இனி மேல் வாழ முடியாது என்ற நிலையிலேயே தமிழகத்துக்கு அகதியாக வந்தோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று குடும்பத்துடன் வந்த தயாபரன் (பொறியாளர்), மற்றும் அவரது மனைவி உதயகலா கூறுகையில்,

போர் முடிவடைந்து 5 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் தொடர்ந்து தனது கணவர் தாயாபரன் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுப் பல முறை சிறையில் அடைக்கப்பட்டதாகவும், மீண்டும் புலிகள் இயக்கம் உருவாகி வருவதாகக் கூறிப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ராணுவத்தினர் பலரைக் கைது செய்து வருவதாகவும், இனிமேல் அங்கு தமிழர்கள் வாழ முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று முல்லைத்தீவு பகுதியில் இருந்து சென்ற க.சுதாகர் அவரது மனைவி ரமா மற்றும் இரண்டு குழந்தைகள் இராணுவக் கெடுபிடி காரணமாகத் தான் வந்ததாகக் கூறியுள்ளனர்.

இராணுவத்தின் கைது நடவடிக்கையால் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி பகுதிகளில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்தியாவுக்கு வர உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கை அரசு தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றது. இதனால் அங்கு வாழ ஏற்ற சூழல் இல்லை என்று கண்ணீருடன் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச நாடுகள் மட்டுமின்றி இந்தியாவும் இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த-5-14)

### கதிரிப்பாய்

உத்தரவிட்டது.

வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த மற்றைய இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொலைக்குற்றம் சாட்டப்பட்டவரை நீதிமன்றில் வைத்துச் சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றும்போது புகைப்படம் மற்றும் வீடியோ எடுப்பதற்காக நீதிமன்றின் முன்பாகச் செய்தியாளர்கள் நெடுநேரம் காத்திருந்தனர். ஆனால் நேற்று மல்லாகம் நீதிமன்றில் பணியில் இருந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தனஞ்செயனை செய்தியாளர்கள் கண்ணில் படாமல் மிகவும் பக்குவமாக மறைத்து வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றனர்.

நீதிமன்ற வளாகத்தினுள் வாகனத்தைக் கொண்டு சென்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்கள். அதனை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு கைதிகளை நீதிமன்றிலிருந்து வெளியே அழைத்து வந்து வாகனத்தில் ஏற்றினர். பின்னர் தனஞ்செயனைத் தனியாக அழைத்து வந்தபோது நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே செய்தியாளர்கள் கூடியிருந்ததைக் கண்டதும் அவரை வெளியே அழைத்துவராமல் வாகனத்தை நீதிமன்ற வாசலுக்கு முன்பாகக் கொண்டுசென்று வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். அவரைச் செய்தியாளர்கள் புகைப்படமோ, வீடியோவோ எடுப்பதைத் தடுக்கும்வகையிலேயே சிறைச்சாலை உத்தியோகத்தர் கள் அவ்வாறு செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது.

மல்லாகம் நீதிமன்றில் மேலதிக நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் தனஞ்செயன் முற்படுத்தப்பட்டார். இதன்போதே அவருக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உறவுகளை வெட்டிச் சரித்த குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டவரான தனஞ்செயனை நேற்றைய தினம் அச்சுவேலிப் பொலிஸில் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டபோது பொலிஸ் நிலையம் முன்பாக ஏராளமான பொது மக்கள் ஒன்றுகூடி நின்று அவரைப் பார்க்க முண்டியடித்தனர். தனஞ்செயன் வாகனத்தில் ஏற்றப்பட்டு நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்படும்வரை மக்கள் அவ்வாறு அங்கு கூடியிருந்தனர்.

கொலைக்குப் பயன்படுத்திய வாளைப் பொலிஸார் அவனிடமிருந்து கைப்பறியிருந்தனர். மூவரையும் தானே வெட்டியதாக விசாரணையின்போது அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அவரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியபோது கொலை இடம்பெற்ற சில நிமிடங்களில் அவர் தனது தொலைபேசியில் இருந்து அழைப்பை ஏற்படுத்தி உரையாடிய சண்முகநாதன் ஜெயதாஸ் என்பவரையும் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்திருந்தனர். எனினும் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மற்றும் அவருடன் தொடர்புடையவர்கள், அவரது இடத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மூலம் ஜெயதாஸ் இந்தக் கொலையுடன் தொடர்பு பட்டிருக்கவில்லை என்பது தெரியவந்ததால் அவரை விடுவித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கொலையால் அங்கு இன்னும் பதற்றமான- பயமான நிலையையே உணர்வதாக அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விட்டதால் அங்கு சுமுகநிலை காணப்படுகிறது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். கொலைக்குப் பயன்படுத்திய ஓட்டோவின் எரிபொருள் தீர்ந்து விட்டதால் அதனை வீதியில் விட்டுவிட்டு அவர் தப்பிச் சென்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். ஓட்டோ தற்போது பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

குடும்ப தகராறு காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. தனஞ்செயன் தனது மனைவியின் சகோதரியையும் திருமணம் செய்யும் நோக்கில் செயற்பட்டு வந்துள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

(த-4)

### அவர்களின்

மூவர் கொல்லப்பட்டிருந்தனர். அத்துடன் இருவர் காயமடைந்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொலை செய்யப்பட்டவர்களது உறவினரான பொ.தனஞ்சயன் என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவரைக் கைது செய்த கோப்பாய் பொலிஸார், அச்சுவேலிப் பொலிஸாரிடம் கையளித்திருந்த நிலையில், நேற்று அவர் யாழ். போதனா வைத்திய சாலையின் சட்டவைத்திய அதிகாரி முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது தனஞ்சயன், தான் கொலை செய்யப்பட்டவர்களின் வீட்டுக்கு (மாமியார் வீட்டுக்கு) கதைப்பதற்காகவே சென்றதாகவும், அவர்கள் தன்னை வாளைக் காட்டி விரட்டியதாகவும், அதன் பின்னர் வாளைப் பறித்து தானே மூவரையும் வெட்டியதாகவும் தெரிவித்துள்ளார்.

தனஞ்சயனின் உடலில் சிறு சிறு கீறல் காயங்கள் மாத்திரம் காணப்படுவதாக சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

(த-5)

### கரைதுறைப்பற்று

500 இற்கும் மேற்பட்ட மக்கள் முற்றுகையிட்டனர்.

இதனால் திட்டமிடல் கிளையின் பணிகள் சில மணிநேரம் முடங்கின. இவர்களைச் சந்தித்த உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தம்மால் மாதம்தோறும் 100 கியூப் அதாவது 133 உழவு இயந்திர லோர்ட் மணல் ஏற்றுவதற்கான அனுமதிஅ்ய மட்டுமே வழங்குவதற்கான அதிகாரம் தமக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், உங்கள் அனைவரின் தேவைகளை தாம் நன்கு அறிந்துள்ளதாகவும், தாம் தமது அதிகார வரம்பை மீறி எதுவுமே செய்ய முடியாதெனவும் அன்பாகவும் ஆறுதலாகவும் கூறினார்.

பின்னர் நிலைமையை உணர்ந்து கொண்ட மக்கள் மாவட்டச் செயலகம் நோக்கிப் படை எடுத்தனர். தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், ஆகிய பிரதேச செயலகங்களின் பிரிவுகளின் கீழுள்ள கிராம அலுவலர்கள் பிரிவுகளில் ஐரோப்பிய ஒன்றிய வீட்டுத்திட்டம், இந்திய வீட்டுத்திட்டம் என்பன முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் ஒவ்வொரு பிரதேச செயலகங்களினூடகவும் மாதந்தோறும் 100 கியூப் அதாவது 133 உழவு இயந்திர லோர்ட் மணல் ஏற்றுவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட அளவு அனுமதி வழங்கப்படுவதனால் வீட்டுத்திட்டம் கிடைத்துள்ள பயனாளிகள் மணலைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் குறித்த காலப்பகுதியினுள் வீட்டை நிர்மாணிக்கமுடியாது அவர்கள் அவலப்படுகின்றனர்.

அத்துடன் வீடு கட்டுவதை மேற்பார்வை செய்யும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அழுத்தங்கள் காரணமாக அனுமதியற்று மணல் விற்பனையில் ஈடுபடும் முகவர்களிடம் அதிக விலைக்கு மணலைப் பெற்றுக்கொள்ளும் நிலைக்கும் மக்கள் தள்ளப்படுகின்றனர். எனவே பயனாளிகளின் தேவைக்குரிய மணலைத் தங்குதடையின்றி உரிய பிரதேச செயலகங்களினூ டாகப் பெற்றுக்கொள்வதற்குச் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் வழிவகை செய்து உதவ வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(த-102)

### புலம்பெயர்

வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசின் தடை அறிவிப்பைக் கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் வெளிப்படையாகவே நிராகரித்துள்ள நிலையில், இந்தியா மாத்திரம் தடை உத்தரவை நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது.

16 புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் 424 தனிநபர்களை உள்ளடக்கிய தடைப் பட்டியலை வர்த்தகமானி பிரசுரத்தினூடாக இலங்கை வெளியிட்டிருந்தது. ஜெனீவா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுவதில் முனைப்புடன் செயற்பட்ட அமைப்புக்களையே இலங்கை தடை செய்துள்ளதாகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோதும், இலங்கையில் மீண்டும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவிகளை வழங்குகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே இவற்றைத் தடை செய்யதாக இலங்கை அரசு தனது தடை அறிவித்தலை நியாயப்படுத்தி வருகின்றது.

இலங்கையின் இந்த அறிவிப்பை உதாசீனம் செய்யும் வகையில், தடைப் பட்டியலில் உள்ளடங்கியுள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகள், தனிநபர்களுடன் கடந்த வியாயழக் கிழமை அமெரிக்காவின் உதவி இராஜாங்கச்செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் பேச்சுக்களை நடத்தியிருந்தார். அத்துடன் கனேடிய வெளிவிவகார அமைச்சும், இலங்கை அரசின் இந்தத் தடை கனடாவில் செல்லுபடியாகாது என்று தெரிவித்திருந்தது.

ஆனால், இந்தியா இந்தப் பட்டியலுக்கு இணங்கிச் செயற்பட முன்வந்துள்ளது.

இதற்கமைய, இலங்கையினால் தடைவிதிக்கப்பட்ட 424 தனிநபர்களில் ஒருவர் தனது தாயாரின் மருத்துவ சிகிச்சைக்காகப் பிரிட்டனில் இருந்து இந்தியா வந்த போது திருப்பி அனுப்பப்பட்டுள்ளார் என்றும் குறித்த செய்தியில் பிறஸ் ஒவ் ரஸ்ட் இந்தியா தெரிவித்துள்ளது.

(த-5)

### கருணாநிதி

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தீவிரவாதத்துக்கு ஆதரவாகச் செயல்பட்டதாகக் குற்றம்சாட்டி 16 தமிழ் அமைப்புகள் மற்றும் அவற்றின் ஆதரவாளர்கள் 424 பேர் மீது தடை விதிக்க வேண்டுமென்று இலங்கை அரசு உலக நாடுகளுக்கெல்லாம் வேண்டுகோள் விடுத்தது. அந்த வேண்டுகோளை எம்முடைய இந்திய அரசும் ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுத்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

அதன் தொடர்ச்சியாக இங்கிலாந்தில் இருந்து மருத்துவச் சிகிச்சைக்காகத் தனது தாயை இந்தியாவுக்கு அழைத்து வந்த போது தடை விதிக்கப்பட்ட 424 பேரில் ஒருவர் இந்திய அரசால் திருப்பி அனுப்பப்பட்ட மனிதாபிமானமற்ற செயலும் நடந்திருக்கின்றது.

இலங்கையின் தடை உத்தரவு கனடாவில் செல்லாது என்று அந்த நாட்டு அமைச்சர் பகிரங்கமாக அறிவித்துள்ளார். பிரிட்டனும் அவ்வாறே தனது எதிர்ப்பினை ஏற்கனவே தெரிவித்து விட்டது.

இலங்கை அரசின் இந்த வேண்டுகோளை, அமெரிக்கா நிராகரித்ததோடு, இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் போது பெருமளவில் மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபட்டதாக சர்வதேச அளவில் எழுந்த குற்றச்சாட்டுகள் குறித்து சட்டப்படி உரிய விசாரணை மேற்கொள்ளாத இலங்கை அரசின் இந்தக் கோரிக்கையை ஏற்க முடியாது என்றே திட்டவட்டமாக மறுத்துள்ள நிலையில், இலங்கை அரசின் தமிழர்களுக்கு எதிரான இந்த மனிதாபிமானமற்ற கோரிக்கையை இந்திய அரசு ஏற்றுக்கொண்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியதாகும் என்று கூறியுள்ளார்.

(ஐ)

# சென்.ஹென்றிஸ், யாழ்.மத்தி உதைபந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 6
யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயது, 17 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் 15 வயதுப் பிரிவில் யாழ்.மத்திய கல்லூரி அணியும், 17 வயதுப் பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் வெற்றி பெற்றுச் சம்பியனாகின.
கடந்த புதன்கிழமை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மணற்காடு றோ.க.த. பாடசாலை அணி மோதிக்கொண்டது.
இதில் இரண்டு அணிகளும் ஆட்ட நேரமுடிவில் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து அளவெட்டி அருணோதயக் கல்லூரிஅணி மோதிக் கொண்டது.
இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.
கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு அணியினருக்கான இறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில்இளவாலைபுனிதஹென்றியரசர் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஏழாலை சிறிமுருகன் மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.
இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைக்ள் வழங்கப்பட்டன.
இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் பெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த- 23-86)

## வென்றது ஜெகமீட்பர்

யாழ்ப்பாணம்,மே 6
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் முறையிலான 2ஆம் சுற்று ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.
இதில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## பன்னாலை கணேசன் உதைபந்தில் சம்பியன்


சம்பியன் கிண்ணம் பெறும் அணி

வலி. வடக்கு, மே 6
தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவானது.
மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் சனிக் கிழமை பிற்பகல் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகமும் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகமும் மோதின.
இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாகக் காணப்பட்டன. எனினும் சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு கோல்கள் பெறும் பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதிலும் அதனை உரிய முறையில் பயன்படுத்தத் தவறியது.
அதையடுத்து ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வியை தீர்மானிக்க இரு அணிகளுக்கும் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று பிரதேச சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ற-86)

## தடகளப் போட்டிகளில் இளம்சுடர் சம்பியன்


கோப்புப் படம்

வலி. வடக்கு, மே 6
வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின் தடகளப் போட்டிகள் நேற்று முன்தினம் பிற்பகல் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் மல்லாகம் -ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.
அவற்றில் இளவாலை இளம்சுடர் விளையாட்டுக் கழகம் (44 புள்ளிகள்) பிரதேச சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.
இரண்டாம் இடத்தை பன்னாலை கணேசன் விளையாட்டுக்கழகம் (37 புள்ளிகள்) பெற்றுக் கொண்டது.
வெற்றி பெற்றவர்களுக்கான சம்பியன் கிண்ணத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வழங்கினார். (ற-86)

## மன்னார் கில்லறி வி.க வென்றது நீக்கிலஸை

யாழ்ப்பாணம், மே 6
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் "வடக்கின் சுப்பர் கிங்" உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் முறையிலான 2 ஆம் சுற்று ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
அவற்றில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

# மன்னார் சவேரியார் கல்லூரி இரு பிரிவுகளில் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 6
மன்னார் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் இரண்டு பிரிவுகளிலும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

> 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணியை எதிர்த்து இலுப்பைக் கடவை மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டது.

அடம்பன் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணியை எதிர்த்து இலுப்பைக் கடவை மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டது.
இதில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணி 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணியை எதிர்த்து பள்ளிமுனை லூட்சியா மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.
இதில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.
தொடர்ந்து இடம்பெற்ற 3 ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் அரிப்பு றோ.க.த. பாடசாலை அணியை எதிர்த்து பண்டிவிரிச்சான் மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.
இதில் பண்டிவிரிச்சான் மகா வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே.6
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் லீக் முறையிலான 2 ஆம் சுற்று ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தும் வடமாகாண ரீதியான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த சிறி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# இணுவில் கலையொளி தடகளத்தில் சம்பியன்


கலையொளி விளையாட்டுக் கழக அணியினர்

வலி.வடக்கு, மே 6
வலி.தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டியில் இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகம் 57 புள்ளிகளைப் பெற்று பிரதேச சம்பியனாகியது.
உடுவில் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் பிற்பகல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றது.
இரண்டாம் இடத்தை 24 புள்ளிகளைப் பெற்ற மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகமும், மூன்றாம் இடத்தை 21 புள்ளிகளைப் பெற்ற இணுவில் இந்து விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன.
வெற்றி பெற்ற கழகங்களுக்கான பரிசில்களை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் வழங்கினார். (த-86)

## மட்டுவில் கண்ணகை வெற்றி

தென்மராட்சி, மே 6
கைதடி வடக்கு நவபுரம் நவசனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நவசக்தி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியில் மட்டுவில் வடக்குகண்ணகைவி.க.அணி கைதடி மின்னொளி வி.க. அணியைத்தோற்கடித்துசம்பியனாகியது.
நவசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் மட்டுவில் வடக்குகண்ணகைவி.க.அணியும் கைதடி மின்னொளி வி.க.அணியும் களமிறங்கின.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மின்னொளி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. கண்ணகை அணியின் வீரர்களின் அபார பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 15.2 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணியின் பானு 51 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில், கண்ணகை அணியின் சார்பில் மதி, செந்தூரன் ஆகியோர் தலா 4 இலக்குகளையும், ஜெரி, ஜெனி ஆகியோர் தலா ஓர் இலக்கையும் சாய்த்தனர். 104 ஓட்டங்கள் வெற்றி இலக் காக துடுப்பெடுத்தாடிய கண்ணகை அணி 14.3 பந்துப் பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடைந்து சம்பியனாகியது. அணி சார்பில் மைந்தன் 42 ஓட்டங்களையும் வாகீசன் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். (த-9)



திஸார பெரேரா

# திஸார பெரேரா செல்லவில்லை

இலங்கை கிரிக்கெட் அணி வீரர் திஸார பெரேராவுக்கு பிரிட்டன் விஸா கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக அயர்லாந்துக்கான இலங்கை அணியின் கிரிக்கெட் பயணத்தில் அவர் இடம் பெறவில்லை.

அவருக்குப் பதிலாக ஷமிந்த எரங்க அனுப்பிவைக்கப்படுவதாக இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற இந்தியன் பிறீமியர் லீக் போட்டியில் பங்குபற்றிய திஸார பெரேரா, அங்குள்ள பிரிட்டன் தூதரகத்தில் விஸாவுக்கு விண்ணப்பித்தபோது அவரை கொழும்பில் விஸா பெறுவதற்கு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டதாக கிரிக்கெட் செயற்பாட்டு முகாமையாளர் கார்ல்டன் பேர்னாடஸ் தெரிவித்தார்.

எனினும் ஒரு வாரத்துக்கு முன்னர் இங்கு வருகைதந்த திஸார பெரேரா, விஸாவுக்கு விண்ணப்பித்தபோதிலும் விஸா கிடைப்பதில் தாமதம் நிலவுவதால் அயர்லாந்துக்கு ஷமிந்த எரங்க அனுப்பிவைக்கப்படுவதாக அவர் கூறினார். (த)

# இங்கிலாந்து ரென்னிஸ் வீராங்கனை மரணம்



எலினா பலேட்சா

இங்கிலாந்தைச் சேர்ந்த ரென்னிஸ் வீராங்கனை எலினா பலேட்சா புற்றுநோய்க்கு இலக்காகிச் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பயனளிக்காமல் காலமானார்.

உலக மகளிர் தரவரிசைப் பட்டியலில் முதல் 50 இடங்களுக்குள் இடம் பிடித்த இவர், பிரிட்டன் வீராங்கனைகளில் முதலிடம் வகித்து வந்தார்.

இவர் கடந்த 2012ஆம் ஆண்டு நடைபெற்ற லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இங்கிலாந்து சார்பாகப் பங்கேற்று விளையாடினார்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் இவருக்கு நுரையீரல் பகுதியில் புற்றுநோய் தாக்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து ரென்னிஸ் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார்.

மேலும் சில வாரங்களுக்கு முன்பு தனது நீண்ட காலப் பயிற்சியாளரான நினோ செவரினோ என்பவரை அவர் மணந்து கொண்டார்.

உக்ரைய்ன் நாட்டின் தலைநகர் கீவ்-வில் பிறந்த இவர், 1997ஆம் ஆண்டு தொழில்முறை ரென்னிஸ் வீராங்கனையாகத் தனது சகாப்தத்தைத் தொடங்கினார். சில மாதங்களாகப் புற்றுநோய்க்குச் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

எலெனா பலடாசாவின் மறைவுக்கு இங்கிலாந்தில் உள்ள பல்வேறு ரென்னிஸ் சங்கங்களும் லட்சக்கணக்கான ரசிகர்களும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர். (த)

# மகிழ்ச்சியில் ஜடேஜா



சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வெற்றி நடை தொடரும் என்று சகலதுறை ஆட்டக்காரர் ரவீந்திர ஜடேஜா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ராஞ்சியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியுடன் நடந்த லீக் ஆட்டத்தில் சென்னை அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று தொடர்ச்சியாக 5ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

ஆட்ட நாயகன் விருது பெற்ற ஜடேஜா, சென்னை அணியின் வெற்றி குறித்து கூறியதாவது.

துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்து வகையிலும் சிறப்பாக செயற்பட்டு வருகிறோம்.

அடுத்து வரும் லீக் ஆட்டங்களிலும் எங்கள் அணியின் வெற்றிநடை தொடரும் என நம்புகிறேன். அணியின் வெற்றிக்காக பங்களிப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

பந்துவீச்சில் மட்டுமல்லாது, துடுப்பாட்டத்திலும் கணிசமாக ஓட்டங்கள் எடுத்து வருகிறேன்.

கடைசிக் கட்டப் பந்துப்பரிமாற்றங்களில் விரைவாக ஓட்டங்கள் எடுப்பது மிகவும் முக்கியம். அதில் கூடுதல் கவனம் செலுத்துகிறேன்.

பஞ்சாப் அணி பலமானது என்பதை ஏற்பதற்கில்லை. 20/20 இல் எந்த அணியையும் அப்படிச் சொல்ல முடியாது என நினைக்கிறேன். எல்லா அணிகளுமே சம பலம் வாய்ந்தவை.

ஒரு சிறப்பான பிடி அல்லது ஓட்டங்களின் போது ஆட்டமிழப்பது கூட ஆட்டத்தின் முடிவை மாற்றிவிடும்.

கிங்ஸ் லெவனுக்கு எதிராக நாங்கள் ஒரு பிடி எடுப்பு வாய்ப்பை வீணடித்ததே தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டது. அந்த பிடி வாய்ப்பை பிடித்திருந்தால் நாங்கள் வென்றிருப்போம் என்று ஜடேஜா கூறியுள்ளார். (த)



# முதலிடத்தில் சென்னை

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 10 புள்ளிகள் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸில் 20 போட்டிகள் நடந்தன. இதில் எல்லாவற்றிலும் வென்ற அணியாக கிங்ஸ் லெவன் பஞ்சாப் உருவெடுத்தது. எதிலுமே வெல்லாத அணியாக மும்பை இந்தியன்ஸ் அணி இருந்தது.

இதையடுத்து தனது முதல் வெற்றியை பஞ்சாப் அணிக்கெதிரான ஆட்டத்தில் மும்பை அணி பெற்றது.

அதே நிலையில் தனது முதல் தோல்வியை பதிவு செய்த பஞ்சாப் அணியின், புள்ளி பட்டியலின் முதல் இடத்தைச் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தட்டிப் பறித்தது.

அதேசமயம், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் 10 புள்ளிகளுடன் சமநிலையில் இருந்தாலும் கூட ஓட்டப்பட்டியல் அடிப்படையில் சென்னை முதலிடத்தில் இருக்கிறது.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 3ஆவது இடத்திலும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 4ஆவது இடத்திலும் உள்ளன. 5ஆவது இடத்தில் பெங்களூர் அணியும், 6ஆவது இடத்தில் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் உள்ளன. 7ஆவது இடத்தில் டெல்லி டேர்டெவில்ஸும், கடைசி இடத்தில் மும்பைஇந்தியன்ஸும் உள்ளன. (த)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மழை

மாத்திரம் 71.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மையம் காரணமாக நாடு முழுவதும் காற்று, மழையுடன் கூடிய காலநிலை தொடர வாய்ப்புள்ளது.

கரையோரம் மற்றும் ஏனைய பகுதிகளில் காற்றின் வேகம் 70 - 80 கிலோ மீற்றர் வரை திடீரென அதிகரிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. அதனால் மீனவர்களை மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் கடந்த இரண்டு மாத காலமாக வாட்டி வதைத்த வெப்பம், கடந்த இரண்டு தினங்களாகப் பெய்த மழையினால் தணிந்துள்ளது. அத்துடன் குடாநாட்டில் நேற்று நாள் முழுவதும் மழை தொடர்ச்சியாகப் பெய்தது. நேற்று மட்டும் 14.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவானது. நேற்று முன்தினம் 12 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவானது. கடந்த முதலாம் திகதியிலிருந்து நேற்று வரையில் 71.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகப் பிரதீபன் குறிப்பிட்டார். (த-5)

### கூடுகளை

கும்பொருட்டு இந்தக் கோரிக்கை நீரியல் வளத் திணைக்களத்திடம் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாகக் கடற்தொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் கடல் நீரேரிப் பகுதிகளில் கூடு பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் பெரும்பாலான மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆரம்ப காலத்தில் களங்கண்ணி வலையை மாத்திரம் பாவித்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட மீனவர்கள், நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக பாஸ் நடைமுறை மற்றும் ஆழம் கூடிய கடல் பகுதிக்குச் செல்லமுடியாமை, பகல் நேரத்தில் மீன்பிடிக்கவேண்டியமை ஆகிய காரணங்களால் கூடு முறையைப் பயன்படுத்தினர்.

இந்தக் கூண்டுக்கு மிகச் சிறிய வலைகளை மீனவர்கள் பயன்படுத்துகின்றனர். இந்தக் கூண்டினுள் சேரும் மீன்களை அப்படியே எடுத்து வந்து, கடற்கரையில் வைத்துத் தமக்குத் தேவையான பெரிய மீன்கள், இறால், நண்டு ஆகியவற்றை எடுத்து விட்டு சிறியவற்றை கரையில் போட்டு விட்டுச் செல்கின்றனர்.

இதனால் கரையோரத்தில் துர்நாற்றம் வீசுவது மட்டுமல்லாமல், சிறிய மீனினம் அழிவடைந்து மீன் உற்பத்தியே குறைவடையும் நிலை தோன்றியுள்ளது. இதனால் கூடு பயன்படுத்தி மீன்பிடிக்கும் முறையைத் தடை செய்யுமாறு கோரி, மீனவர் சங்கங்கள் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இதற்கமைய கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ள கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், கலந்துரையாடல் தொடர்பில் இது தொடர்பான முடிவு எடுக்கப்படும் என்றும் கூறினார். (த-5)

### இடமாற்றம்

தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்பாக நேற்று முற்பகல் 9 மணியளவில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் குறித்த ஆசிரியர்களை அவர்கள் கோரும் வலயங்களுக்கு இடமாற்றம் செய்வதாக நேற்று உறுதியளிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

உத்தியோகம் எமக்கு ஆயுள் தண்டனையா?, இழுத்தடிப்பு வேண்டாம். உடன் எமக்கான தீர்வு வேண்டும், ஆசிரியர்களைத் தொடர்ந்தும் ஏமாற்றாதே, எத்தனை தடவைகள் வாக்குறுதி? ஆகிய வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு சுமார் 75 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இந்தக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

மடு, துணுக்காய், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் நெடுந்தீவு வலயங்களில் பணிபுரியும் இடமாற்றம் பெறத் தகுதியான ஆசிரியர்களே இவ்வாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2014 ஆம் ஆண்டு இடமாற்றம் தொடர்பாக இடமாற்றச் சபையில் குறித்த ஆசிரியர்களின் இடமாற்றங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. எனினும் இடமாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டிய கடந்த ஜனவரி முதலாம் திகதி அந்த இடமாற்றம் வழங்கப்படவில்லை. அது தொடர்பில் எந்த அறிவுறுத்தலும் வழங்கியிருக்கவில்லை. அதனாலேயே கடந்த ஜனவரியில் இதே கல்வி அமைச்சின் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டோம்.


அதன்போது இரண்டாம் தவணை ஆரம்பத்தில் குறித்த இடமாற்றங்களை வழங்குவதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் வாக்குறுதியளித்திருந்தார். அதனால் எமது போராட்டத்தைக் கைவிட்டுச் சென்றோம்.

அவர் கூறிய காலப்பகுதி நிறைவடைந்து பல நாள்களாகி விட்டன. எனினும் இடமாற்றம் எமக்கு இன்னும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்று கவனவீர்ப்பில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

2013 ஆம் ஆண்டு ஆசிரியர்கள் இடமாற்ற விண்ணப்பங்களை அனுப்பிய போதும் வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ள முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அதிகாரிகளின் சேவைக்காலக் கணிப்பீடு தொடர்பான தவறு காரணமாகவே குறித்த ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சங்க யாழ். கிளையினர் வடக்கு மாகாண கல்விச் செயலாளருக்கு வழங்கிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த ஆசிரியர்களின் இடமாற்றங்கள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், அதற்கான இடமாற்ற ஒழுங்குகளைத் தான் மேற்கொள்வதாகவும், இந்த வாரமே உரிய ஆசிரியர்களுக்கான கடிதங்களை அனுப்புவதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் கூறியதோடு பதிலீடாக யாழ்ப்பாணத்தில் உள்ள வலயங்களில் இருந்து ஆசிரியர்களை வன்னி மற்றும் தீவக வலயங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார் எனச் சங்கத்தினர் கூறினர். (த-4-21)

# பர்வின் தம்பே ' ஹட்றிக்' வென்றது ராஜஸ்தான்




கருண் நாயரின் அதிரடியான துடுப்பாட்டமும்,பர்வின் தம்பேயின் 'ஹட்றிக்' சாதனையும் கைகொடுக்க கொல்கத்தா நைற் றைடர்ஸ் அணியை 10 ஓட்டங்களால் வெற்றி கொண்டது ராஜஸ்தான் றோயல்ஸ் அணி.
ராஜஸ்தான் றோயல்ஸ் கொல்கத்தா நைற்றைடர்ஸ் அணிகளுக்கிடையேயான 20/20 கிரிக்கெட் போட்டி நேற்று அகமதபாத் விளையாட்டரங்கில் இடம் பெற்றது.
நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா முதலில் களத் தடுப்பைத் தேர்வு செய்தது. இதனை அடுத்து ராஜஸ்தான் அணி சார்பாக கருண் -நாயர்- அஜித் ரஹானே ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கி ஆரம்பம் முதல் கொல்கத்தா பந்து வீச்சாளர்களை புரட்டி எடுத்தனர். அணி 6.3 பந்துப் பரிமாற்றங்களில் 52 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ரஹானே 30 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அடுத்து சாம்சம் களமிறங்கி 35 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள்,ஒரு 6 ஓட்டங்கள் அடங்காலாக 44 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டமிழந்து வெளியேறினார் கருண்நயர்.
இதனை அடுத்து சாம்சனுடன் இணைந்த வோட்சன் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி அணியை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இச் சூழ்நிலையில் சாம்சன் 37 ஓட்டங்களுடனும்,வோட்சன் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். தொடர்ந்து வந்த வீரர்களும் தம் பங்குக்கு ஓட்டங்களைச் சேர்க்க 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது ராஜஸ்தான் அணி.
கொல்கத்தாவின் பந்து வீச்சில் வினாய்குமார் சுனில் நரைன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் சொஹைப் அல்ஹசன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
அடுத்து 171 என்ற கடினமான வெற்றி இலக்கைத் துரத்தத் தொடங்கிய கொல்கத்தா அணிக்கு கம்பீர் - உத்தப்பா ஜோடி நல்ல இணைப்பாட்டத்தைப் பெற்றுக் கொடுத்தது. இவர்கள் இருவரும் ஆரம்ப இலக்குக்கான இணைப்பாட்டமாக 121 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர். கம்பீர் 54 ஓட்டங்களுடனும், உத்தப்பா 65 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர்.
தொடர்ந்து வந்த வீரர்கள் சொதப்ப 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களை மட்டுமே கொல்கத்தா அணியால் பெற முடிந்தது. இதனால் அவ்வணி 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. கொல்கத்தாவின் வெற்றிக்காக கடுமையாகப் போராடிய அல்ஹசன் 21 ஓட்டங்களுடன் களத்திலிருந்தார்.
பந்து வீச்சில் பர்வின் தம்பே, பண்டே, யூசுப் பதான் மற்றும் டென் டெஸ்சோதி ஆகியோரை அடுத்தடுத்து ஆட்டமிழக்கச் செய்து ஹட்றிக் சாதனை படைத்தார். அவருடன் இணைந்த வோட்சனும் மூன்று இலக்குகளை வீழ்த்தினார்.
இப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஹட்றிக் சாதனை படைத்த பர்வின் தம்பே தெரிவு செய்யப்பட்டார். (த-400)




## சிமித்தின் அதிரடியால் 6 ஆவது வெற்றி சென்னைக்கு

இறுதிப் பந்துப்பரிமாற்றம் வரை பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 8 இலக்குகளால் வெற்றி பெற்று 6 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி. ஐ.பி.எல். 20/20 கிரிகெட் சுற்றுப் போட்டியின் 26 ஆவது போட்டி நேற்று டெல்லியில் இடம்பெற்றது. இதில் தினேஷ் கார்த்திக் தலைமையில் டெல்லி டேர்டெவில்ஸ்- டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.
அதனை அடுத்து டெல்லி அணியின் டி- குக்.முரளி விஜய் ஜோடி ஆரம்ப ஜோடியாக களமிறங்கி எதிரணியை ஒரு கலக்குக்கலக்கியது. ஆரம்பம் முதல் அதிரடியாக விளையாடிய டி- குக் 24 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ' ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து களமிறங்கிய பீற்றர்சன் ஓட்டம் எதனையும் பெறாது " டக் அவுட்" ஆனார்.
மூன்றாவது இலக்குக்காக முரளி விஜயுடன் இணைந்த தினேஷ் கார்த்திக் வாண வேடிக்கை காட்டினார். இதனால் அணியின் ஓட்ட வேகம் சடுதியாக உயர்ந்தது. சிறப்பாக துடுப்பொடுத்தாடிய தினேஷ் கார்த்திக் 36 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 51 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து முரளி விஜயும் 35 ஓட்டங்களில் நடையைக் கட்டினார்.
இறுதியில் டுமினியும்,காதர் யாதவ் ஆகியோர் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது டெல்லி டேர்வில்ஸ். டுமினி 28 ஓட்டங்களையும், யாதவ் 29 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.
பந்து வீச்சில் பென்ஹில் பெனஸ், மோகித் சர்மா,ரவீந்திர ஜடேஜா மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.
பதிலுக்கு179 ஓட்டங்கள் என்ற பெரிய இலக்கை துரத்தத் தொடங்கிய சென்னை அணிக்கு சிமித்- மக்கலம் ஜோடி நல்ல ஆரம்பத்தை கொடுத்தது. இருவரும் ஆரம்பம் முதல் டெல்லி அணியின் பந்து வீச்சாளர்களை அச்சுறுத்தும் வகையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினர். அணி 82 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 32 ஓட்டங்களுடன் மக்கலம் வெளியேறினார். தொடர்ந்து சிமித்துடன் இணைந்தார் சுரேஷ் ரெய்னா இருவரும் இணைந்து எதிரணியின் பந்துகளை எல்லைக் கோடுகளுக்கு அப்பால் விரட்டி வாண வேடிக்கை காட்டினர்.
அதிரடியாக துடுப்பெடுத்தாடிய சிமித் 51 பந்துகளை சந்தித்து 4 நான்கு ஓட்டங்கள் 8 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 79 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.தொடர்ந்து ரெய்னாவும் டோனியும் இணைந்து 19.4 பந்துப் பரிமாற்றங்களில் 181 ஓட்டங்களைப்பெற்று வெற்றிக் கனியைச் சுவைத்தனர். இவ் வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக 6 ஆவது வெற்றியையும் பதிவு செய்தது சென்னை அணி.
சுரேஷ் ரெய்னா இறுதிவரை ஆட்டமிழக்காது 27 பந்துகளில் 47 ஓட்டங்களையும் டோனி 5பந்துகளில் 12 ஓட்டங்களையும் பெற்று களத்தில் இருந்தனர்.
டெல்லியின் பந்து வீச்சில் பர்னல், சுக்ளா ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.
போட்டியின் ஆட்ட நாயகனாக சிமித் தெரிவு செய்யப்பட்டார். (த-400)

MOBIL PHONE REPAIRING COURSE
(கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி)

நீங்கள் பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தியவரா ? சுயதொழில் ஒன்றை எதிர் பார்ப்பவரா ? வேலை செய்து கொண்டு பகுதி நேரமாக வருமானம் ஈட்ட வேண்டுமா?

4 days course

புதுப் பொலிவுடன் யாழ். நகரில்
உங்கள் எதிர் காலத்துக்கு
மாதம் 150,000 /- க்கு மேல்
வருமானம் ஈட்ட ஒரு வாய்ப்பு

திருத்தும் துறையில் 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000 ற்கும் மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதற்தர ஆசிரியருமான Ganesh. K.

பாட நெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்க முடியும்.நவீன Mobile phone Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும்.

BTEC
BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE
# 21,Sirampiyadi lane
Jaffna
T.P. 021 790 4468
MO : 0777 444 225

ஐரோப்பிய செங்கன் நாடுகளுக்குரிய
விசா வெறும் 10 இலட்சம் ரூபாவே
எம்மால் மட்டுமே இது சாத்தியமாகும்

1. இத்தாலி, ஜேர்மனி, சுவிஸ்,பிரான்ஸ்.... போன்ற 21 நாடுகளுக்கான விசா, வெறும் 10 இலட்சம் ரூபாயுடன் விரைந்து வாருங்கள்.
2. சைப்பிரஸில் ஆண்,பெண் இருபாலாரும் படித்து உழைக்க வெறும் 5 இலட்சம் போதும்.
3. U.K இல் படிக்க உழைக்க IELTS தேவையில்லை. (யாவும் நிபந்தனைக்குட் பட்டது.)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 0215689090






## கலிஸ் விளையாடுவது உறுதி

இலங்கை அணிக்கெதிரான எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள சர்வதேச ஒருநாள் போட்டியில் ஜக் கலிஸ் இடம்பெறுவார் என அந்த அணியின் தேர்வாளர் அன்றூ கூஸ்டன் தெரிவித்துள்ளார்.
2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான தென்னாபிரிக்க அணியில் இடம்பிடிப்பதற்கு இது வாய்ப்பை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
கடந்த ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற ஜக் கலிஸ் உலக கிண்ண தொடரில் விளையாடுவதே தமது இலக்கு என கூறியிருந்தார்.
அத்துடன் சிம்பாப்வே அணிக்கெதிரான தொடரிலும் அவர் விளையாடுவார் என அன்றூ கூஸ்டன் குறிப்பிட்டுள்ளார். (த)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.